STAR PUPIL ACADEMY

கீழ்காணும் வகுப்புக்களுக்கு மட்டும் மாசி ''28'' வரை அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

ஆண்டு: 3, 4, 5, 6, 7
1989 G. C. E (O/L)
A/L புவியியல்
S. ஜேசுதாஸ் B.A.(Hons)

வார
முரசொலி
VARAMURASOLI

ஸ்ரார் பியூப்பில் அக்கடமி
(கல்வியங்காடு)

G. C. E. (O/L)
ஆசிரியர் குழு

கணிதம்: S K. ஜீவமோகன்
விஞ்ஞானம்: J. R சூரி
சமூகக்கல்வி; S ஜேசுதாஸ்
தமிழ்: காந்திதாஸ்
ஆங்கிலம்: N. ஜேம்ஸ்

முரசு 3 ஒலி 8 ஞாயிற்றுக்கிழமை 05-02-1989 (தை 23) ஜ. ஆகிர் 27 விலை ரூபா நான்கு

★ உணவு, உள்ளூராட்சி, கூட்டுறவு அமைச்சுக்களின் கீழ் உருவாக்கப்படும்

# 'மாகாண கமிஷனர்' பதவிக்கு சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவு

## இந்த மாத நடுப்பகுதியில் நியமனங்கள்

வடக்கு கிழக்கு மாகாண சபை அமைப்பின் கீழ் வரும் பல சிரேஷ்ட பதவிகளை இம்மாத நடுப்பகுதியில் நிரப்புவதற்கு இறுதி ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. பொதுத் தேர்தலை அடுத்து இந்த நியமனங்கள் செய்யப்படலாம் என்று கூறப்படுகின்றது.

உணவு, உள்ளூராட்சி, கூட்டுறவுத்துறை ஆகியவைகளுக்கு அந்தந்தத் துறையுடன் நீண்டகால அனுபவம் மிக்கவர்களே தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாக நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்ததாக மாகாணசபை இயங்குவதால், மேற்படி மூன்று திணைக்களங்களினதும் தலைமை அதிகாரிகளாக பதவியேற்பவர்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் ''மாகாண கமிஷனர்'' களாக நியமனம் பெறுவார்கள் என்று தெரிய வந்துள்ளது.

கல்வித்திணைக்களத்தின் நிர்வாக மாற்றத்தின் கீழ் இரு மாகாணங்களுக்குமென மாகாணக் கல்விப் பணிப்பாள

→ 16-ம் பக்கம் பார்க்க

## மேலும் இரு வேட்பாளர்கள் தேற்கில் கோல்லப்பட்டனர்

பொதுத் தேர்தல் வேட்பாளர்கள் மேலும் இருவர் இலங்கையின் சுதந்திரதினமான நேற்று இனம் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேற்கு மாகாணம், மத்திய மாகாணம் ஆகிய இரு மாகாணங்களையும் சேர்ந்த இவர்கள் ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவர்கள் இருவருடன் சேர்த்து இதுவரை கொல்லப்பட்ட பொதுத்தேர்தல் வேட்பாளர்களின் தொகை பன்னிரண்டாக உயர்ந்துள்ளது. இவர்களில் பதினொரு பேரை ஜே. வி பி. தீவிரவாதிகளே கொன்றதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## யாழ். பல்கலைக்கழக சம்பவம்; ஈ. பி. ஆர். எல். எப். கண்டனம்

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்து ஈ.பி. ஆர். எல். எப். கட்சி துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது. ''பல்கலைக்கழக மாணவர்களே! மோதல்களுக்கு மூலகாரணம் யார்?'' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள இப் பிரசுரத்தில் முக்கியமாகக் குறிப்பிட்டுள்ளதாவது:-

''இச்சம்பவத்தின் பின்னணி தான் என்ன? இத்தகைய கொலைகள் தொடர்வதை நாம் எவ்வாறு தடுத்து நிறுத்துவது என்பன போன்ற கேள்விகள் எம் முன் பூதாகரமாக உருவெடுத்துள்ளன. இதற்கான சரியான, உறுதிமிக்க ஆக்கபூர்வமான பதிலை முன்வைக்கவில்லையெனில் இன்னும் பல அப்பாவிகளின் உயிர்கள் பறிக்கப்படுவது தவிர்க்க முடியாதது.

எது எவ்வாறிருப்பினும் எமது இரு மாணவர்களின் இழப்பும் ஈடு செய்ய முடியாததாகும் இந்நடவடிக்கை கண்டனத்துக்குரியது.

பல்கலைக்கழக மாணவர்கள் தமது உயிருக்கு உத்தரவாதம் கோரி போராடுவதில் எந்தத்

→ 16-ம் பக்கம் பார்க்க

## சுதந்திர விழாவில் ஜே. ஆர். தம்பதி

கொழும்பில் நேற்று நடைபெற்ற பிரதான சுதந்திரதின விழாக் கொண்டாட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவும் அவரது பாரியாரும் முக்கியஸ்தர்களாகப் பங்குபற்றினர்.

## மினிபஸ் விபத்தில் இருவர் காயம்

நேற்று முன்தினம் மதவாச்சிக்கருகில் இடம்பெற்ற மினிபஸ் விபத்தொன்றில் இருவர் படுகாயமுற்றனர். இந்த பஸ் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துகொண்டிருந்தது. படுகாயமுற்ற சாரதி அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்

→16 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி பிரேமதாஸ நாளை யாழ்ப்பாணம் வருகிறார்

ஜனாதிபதி பிரேமதாஸ நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றினை மேற்கொள்ள விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் இவர் யாழ்ப்பாணத்துக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும்.

நாளை காலை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் கூட்டமொன்றில் இவரும் மற்றும் பல அமைச்சர்களும் உரையாற்றுவர். புங்குடுதீவிலும் இவர் கூட்டமொன்றில் உரையாற்றலாமென்று தெரிய வருகின்றது.

### இந்துக்கல்லூரிச் சம்பவம் பற்றி

## ஜனாதிபதி, முதலமைச்சர் உட்பட பல பிரமுகர்களுக்கு முறையீடு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கடந்த வாரம் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் பற்றி ஜனாதிபதி பிரேமதாஸவிற்கு முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அன்றைய தினம் கல்லூரியில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றிய விபரங்களடங்கிய முறையீட்டுக்கடிதம் மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றி

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## செம்பியன்பற்று தாக்குதலில் இருவர் மரணம்; இருவர் காயம்

செம்பியன்பற்றில் வீடொன்றில் இருந்தவர்கள் மீது நடந்த தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர். பெண்மணியொருவர் உட்பட இருவர் படுகாயமுற்றனர்.

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. சின்னத்தம்பி நவந்திரன் (22) மற்றும் மூன்று பிள்ளைகளின் தந்தையான சி. தேவதாஸ் (34) ஆகிய இருவருமே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களாவர். இன்று நடைபெறவிருந்த திருமண விழாவொன்றுக்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தவர்களின் மீதே இத்துப்பாக்கிப் பிரயோகம், கிரனேட் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இச்சம்பவத்தில் படுகாயமுற்ற தங்கராணி பாலசுப்பிரமணியம் (36) அவரது மகன் த.பாஸ்கரன் (12) ஆகியோர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## புதுக்குடியிருப்புக்கு சடலம் சென்றது

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் சதாசிவம் ஜெகநாதனின் சடலம் நேற்றுக்காலை மருத்துவபீடத்திலிருந்து அவரது சொந்த ஊரான புதுக்குடியிருப்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## கலைப்பீடத்தின் முதல்வருட பரீட்சைகள் ஒத்திவைப்பு

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட முதல் வருடப் பரீட்சைகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கலைப்பீட பீடாதிபதி என். பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைகள் பதினைந்தாம் திகதிக்குப் பின்னர் நடாத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும். இதேவேளை எதிர்கால நடவடிக்கைகள் குறித்து நாளை

...16 ஆம் பக்கம் பார்க்க

## 600 சிறைக்கைதிகள் விடுதலை

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு சுமார் அறுநூறு சிறைக்கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். இவர்களுள், தடுத்து வைக்கப்பட்டிருந்த பல்வேறு தமிழ் அமைப்புக்களைச்சேர்ந்த போராளிகளும் அடங்குவரென அரசு அறிவித்துள்ளது

ஜனாதிபதியின் பொதுமன்னிப்புப் பிரகடனத்தின் கீழ் இவர்கள் விடுதலைபெற்றனர்.

## இவர்களுக்கும் சிறைத்தண்டனை

(கொழும்பு)

உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தல், பதப்படுத்தல்,

→16 ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் மூவர் பலி

நேற்று மன்னார் பகுதியில் உள்ள கட்டை அடம்பன் என்ற இடத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூவர் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது. இறந்தவர்களில் ஒருவர் அப்பகுதியிலுள்ள பாடசாலையின் ஆசிரியை எனவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சோவியத் இறுதிப் படையும் காபூலிலிருந்து புறப்பட்டது

(காபூல்)

ஆப்கானிஸ்தானிலிருந்து விலகும் சோவியத்படைகளின் இறுதிப்பிரிவினர் விலகத் தொடங்கியுள்ளனர் என்றும், இறுதிக்காலக்கெடுவான பெப்ரவரி 15-ம் திகதிக்கு ஒருவாரத்திற்கு முன்னதாகவே படைவிலகல் முற்றுப்பெற்றுவிடும் என்றும் சோவியத் அறிவித்துள்ளது.

அதேசமயம் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் பட்டினியால் வாடும் மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை நாற்பது ட்றக் வண்டிகளில் உணவுப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளது.

# St. John's College, Jaffna

Old Boys' Association

## THE ANNUAL GENERAL MEETING

**Will be held on Saturday 11th February, 1989 at the College**

PROGRAMME FOR THE DAY

7. 00 a.m — Holy Communion Service
8. 00 a.m — Laying of the Foundation stone for the new Science Laboratory
8. 30 a.m — Fellowship Breakfast
9. 15 a.m — Annual General Meeting
10. 30 a.m — Cricket Match - Old Boys Vs Present Boys
12. 30 p.m — Lunch
1. 30 p.m — Cricket Match (Continued)
4. 00 p.m -- Principal's Tea
5. 00 p.m -- Soccer Match Old boys Vs Present Boys

**LUNCH TICKETS: Rs. 30. 00**

**OBTAINABLE: Mr. J. N. Ponniah**
St John's College, Jaffna.

Old Boys who have not yet Enrolled as Members are Requested to Apply on forms Available from Secretary or Treasurer

**S. Sivathasan**
President

**K.N.Y. Maurice**
Hony. Secretary,
St. John's College,
JAFFNA.

02121


## முதலாவது இடம்

(பண்டத்தரிப்பு)

தொல்புரம் கமநல சேவை நிலைய பிரிவில் நடைபெற்ற பாடசாலைக்கான தோட்டப் பயிர்ச்செய்கைப் போட்டியில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு முதலிடம் கிடைத்துள்ளது.

யாழ். மாவட்ட கமநல சேவைப் பணிப்பாளர் திரு. க.பரமலிங்கம் உட்பட விவசாயப்பகுதி அதிகாரிகள் இக்கல்லூரியின் தோட்டப் பயிர்களைப் பார்வையிட்டனர்.


A/L MATHS
ஆசிரியர்:
ரவிமோகன்
யாழ்ப்பாணம்
[பெருமாள்கோவிலடி]






"பாடசாலை பை"
(School Bag)
மாணவ மணிகளே!

சம்பூர்ண சலவைக்கு, பளிச்சிடும் வெண்மைக்கும் நுரைவளம் கூடிய, "மில்க்வைற் நீல சோப்" வாங்கி உபயோகியுங்கள். மில்க்வைற் நீல சோப் 300 மேலுறைகளில் உள்ள திருக்குறள்களை வெட்டி அனுப்பி அழகிய "பாடசாலை பை" ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

நாளும் நற்பணி செய்திட உங்கள் ஆதரவை நாடும்

"மில்க்வைற்"

02114


# காலமானர்



## செல்வன் கிருஸ்ணபிள்ளை கிரிதரன்

(சென்மேரிஸ் வித்தியாலயப் பழைய மாணவன்)

கிருஸ்ணபிள்ளை கிரிதரன் மே. ஜேர்மனியில் காலமானர். இவர் கிருஸ்ணபிள்ளை கனகாம்பிகை தம்பதிகளின் அன்புமகனும், சிறிவேணி, கல்யாணி, விருஷ்னி, தர்சினி, சுதாகரன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார். துரைசிங்கம் தவமணிதேவி, ஜீவரட்ணம்-அன்னம்மா, மகேந்திரன் – ஜெயமணி, (சிங்கப்பூர்), சிவேந்திரா – பிரபாவதி (ஜேர்மனி), சுரேஷ் – கௌரி, லிங்கேஸ்வரன் ஆகியோரின் அன்புப்பெருமகனும்; சிவலிங்கம் – கனகம்மா, உருத்திரன் – பத்மாவதி, சிவமூர்த்தி – லீலாவதி (கனடா), செல்வா – லலிதாவதி (பிரான்ஸ்), ஹேமாவதி – செல்வம் (இந்தியா), தியாகு ஜானகி ஆகியோரின் அன்புமருமகனும்; முருகதாஸ், பிரேமதாஸ், மைதிலி, ஷைமினி, திலீபன், சகுந்தலா, ஜீவகாந்தன், ஜீவரஜனி, அனுசியா, பார்த்திபன், ஜீவதாஸ், விஜிதா, ஜெகனி, ராஜகுமார், பரமகுமார் ஆகியோரின் அருமைச்சகோதரரும்; பிரதீபா, கண்ணன் (ஜேர்மனி) ஆகியோரின் அருமை மைத்துனரும்; இராசம்மா, செல்லம்மா, அன்னரட்ணம், ருக்மணி, டாக்டர் சிவராஜா, பொன்னுத்துரை, அப்புத்துரை, அப்பையா, பொன்னையா அவர்களின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 7, சிறும்பியடி வீதி, யாழ்ப்பாணத்தில் 06. 02. 89 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
பெற்றோர்

02128

# 45ஆம் நாள் நினைவஞ்சலி





**செ. ரவீந்திரன் (தம்பா)** **சி. முரளீதரன் (முரளி)**

(சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி உயர்தரவகுப்பு மாணவர்கள்)

உதிப்பு: 18. 05. 1970 உதிப்பு: 14. 07. 1970

மரணம்: 21. 12. 1988

உங்கள் நினைவுகள் எம்முள்ளத்தில் என்றும் பசுமையாக நிலைத்திருக்கும்

சுழிபுரம். நண்பர்கள்.

02116


2 மணி நேரத்தில் Blocks

அதி நவீன இயந்திர சாதனங்கள் கடுகதி வேகத்தில் உங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்கின்றன. தெளிவாக அச்சிடக்கூடிய புளொக் (Block) தயாரிப்பில் முன்னேடிகள்.

கலர் படங்கள்

* கலர் பிலிம் சுருள் கழுவுதல் முற்றிலும் இனம்
* நவீன கொம்பியூட்டர் மூலம் பிரதிகள்
* 4 அல்லது 5 நாட்களில் விநியோகம்

FAN இனம்

2-2-89 முதல் எமது ஸ்ரூடியோவுக்கு ஓடர் தரவரும் 2000 அன்பர்களுக்கு ஒரு விசிறி இனமாக வழங்கப்படும்.

கொழும்பு ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம்

02060




# தேர்தல் திருவிழாக்களின் அந்தநாள் விளையாட்டுகள்

யுனிவேர்ஸல் பிரஞ்சைஸ் என அழைக்கப்பெறும் சகலருக்கும் வாக்குரிமை1931 இல் இலங்கையில் வழங்கப் பெற்றது. ஆசியாக் கண்டத்தைப் பொறுத்த வரை அங்குள்ள அநேக அயல்நாடுகளுக்கு முன்னேயே இவ்வுரிமை இங்கு வந்துவிட்டது.

இலங்கை சட்டசபை அப்போதுதான் புதிதாக அமைக்கப்பட்டு இருந்தது. அதன் உறுப்பினர்களின் தெரிவுக்கு என, 1931– ல் நடைபெற்ற பொதுத் தேர்தல்களின் போதே இந்தத் ''தேர்தலில் வாக்கு அளிக்கும் உரிமை'' முதன்முதலில் மக்களால் பயன்படுத்தப்பட்டது.

1931 ஜூன் 13 முதல் 20 வரை இந்த ''அங்குரார்ப்பணப்'' பொதுத் தேர்தல்கள் ஒரு கிழமையாக நடைபெற்றன. இப்படி நீடித்த வாக்களிப்பு அந் நிகழ்வுக்கு ஒரு விறுவிறுப்பையும், குறிப்பாகச் சிறுவர், சிறுமியர்க்கு இன்பகரமான வேடிக்கையையும் அளித்தது.

நவீன காலத் தேர்தல் மட்டுப்பாடுகள் அன்று கிடையா. எனவே, வேட்பாளரும், வாக்காளரும் ஒரு குதூகல,கேளிக்கைச் சூழலில் தத்தமது போட்டாபோட்டி நடவடிக்கைகளில் தாராளமாக ஈடுபட இடமிருந்தது இந்நாளில் பொதுத்தேர்தல்களின் இன்றியமையாத அம்சங்கள், வன்செயலும், பயமுறுத்தலும் ஆகும். இவற்றைவிட அக்காலத்தில் அறவே காணுதற்கு அரிதான இன்னுமொரு தன்மையையும் இன்றைய தேர்தல் மேடைத் தர்க்கங்களில் மலிந்திருக்கக் காணலாம்; இந்த வேட்பாளர் என்ன பிதற்றுகிறார்? இவருக்குச் சித்த சுவாதீனமின்மை, பைத்தியம் பிடித்து விட்டதாக்கும் என்று எண்ணும்படியாக இருத்தல் ஒன்றுக்கு ஒன்று பொருந்தாத எவ்வளவோ வாதங்கள். தேர்தல் மேடைகள் மீது இன்று அவிழ்த்துவிடப்படுகின்றன!

அக் காலத்தில், சனங்கள் எல்லோரும் உற்சாகத்துடன் தீவிரமாகத் தேர்தலிற் பங்கு பற்றினார்கள். இலங்கையரின் கல்வித் தரம் எப்போதும் உயர்நிலையில் வைத்துக் கணிக்கப்பட்டுவந்துள்ளது. மக்களில் பெரும்பாலானோர் தேர்தலில் தம்மை ஆளப்போவோரின் தெரிவில் சிரத்தை செலுத்தியதில் வியப்பு இல்லை.

நாங்கள் அந் நாட்களில் சின்னஞ் சிறிசுகள், வளர்ந்தவர்கள் தத்தமது அபிமான வேட்பாளர்களின் குணநிசயங்களை எடுத்துப் பாராட்டிப் பேசுவதை நாம் கேட்டுக்

**பிரேம்நாத் மொறாயஸ்**

கொண்டு இருப்போம். அப்போதெல்லாம் அரசியல் கட்சிகள் முக்கியமானவையாக இருக்கவில்லை. வேட்பாளரின் ஆளுமைதான் அவருக்கு வாக்குகளை ஈட்டிக்கொடுத்தது.

தேர்தல் ஏஜென்டுகளும், வாக்காளர் ஆதரவு திரட்டுவோரும் அடிக்கொரு தடவை மக்களின் வீடு தேடி வந்தனர்; தேர்தல் வாக்குறுதி விஞ்ஞாபனங்களை நேரடியாகவே அவர்களிடம் கையளித்தனர். இன்று தேர்தல், பொதுக்கூட்டங்களில் மட்டுமே அவை விநியோகமாகின்றன. இந் நாட்களில் இருப்பதுபோல பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, ஒலிபரப்பி முதலாம் வெகுஜனத்தொடர்பு, சாதன வாய்ப்பு வசதிகள் அந் நாட்களில் அவ்வளவாக வளர்ச்சி, அபிவிருத்தி அடைந்திருக்கவில்லையே! அக்காலத்தில் பத்திரிகைகள் மட்டும் இருந்தன. இப்படியெல்லாம் இருந்தும், அன்றைய மக்களுக்கு தேர்தல் அக்கறை இருந்ததே தவிர,தேர்தல் ஆவேசம், தேர்தல்ஜுரம் ஒரு நோய்போல அவர்களைப் பீடித்து இருக்கவில்லை.

பிள்ளைகளாக இருந்த நாமும் தேர்தல்களை அப் பிடித்தான் வைத்துநோக்கினோம். முத்திரை சேகரித்தல், விளையாட்டுப்போட்டிகள், கிரிக்கெட் இவைபோலவே எங்களுக்குத் தேர்தலும் எமது நடவடிக்கைகளுள் அது, அது அந்தந்த இடத்தில், அந்தந்த நேரத்தில் இடம்பெற்றது. தேர்தல் நாள் நெருங்க, நெருங்க, அதன்மீதான எமது சிரத்தையும் வளர்ந்துவரும். தேர்தலுக்கு முதல்நாள் அனேகமாக ஒரு சனிக்கிழமையாக இருக்கும்.

நாம் பள்ளிச் சிறுவர், சிறுமியராக இருந்தோம். ஆகவே வாக்குரிமை எமக்கு இருக்கவில்லை. இருந்தாலும்,தேர்தல் .ஏஜென்டு'கள் எம்மை ''வாழ்க!.'' ''வீழ்க!'' கோஷம் முழக்க நன்கு பயன்படுத்தினர். கப்பல், புகைவண்டி, விமானம் மிதமிஞ்சிக் குலுங்காமல்,நலுங்காமல் செல்வதற்கு அவை சுமந்து செல்லும் பாரம் குறைந்தபட்சம் இன்ன மட்டத்திலாவது இருக்க வேண்டாமா? அது போலவே நாமும் பயன்பட்டோம்.

வெள்ளிக்கிழமை மாலை வகுப்பறையில் நிலை கொள்ள இயலாது நாம் தவியாய்த் தவிப்போம். தேர்தல் களியாட்டில் எப்போ நாங்கள் சேர்ந்து கொள்ளப் போகிறோமோ என்று நாம் ஏங்குவோம். இந்தக் களியாட்டு என்ன தெரியுமா? அகப்பட்ட வேட்பாளர் வாகனத்தில் குரங்குத் தொற்றுகத் தொங்கியபடி, அவர்களது கொடிகளைச் சுழற்றியபடி, அவர்கள் கற்பிக்கும் சுலோகங்களை வானளாவக் கோஷிப்பது. சிறுவராகிய நம் எல்லோர்க்கும் இந்த வேடிக்கையிற் சம பங்கு கிடைக்க வேண்டாமா? அதற்காக சிறு சிறு குழுக்களாக நாம் பிரிவோம். எமது ஆதரவு இன்னருக்கு என்று நிரந்தரமாக இராது கிடைத்த வாகனம் எந்தத் தேர்வுநாடியினுடையதோ எமது கோஷம் எல்லாம் அவர் சார்பாகவே முழங்கும் அதற்கு உபகாரமாக சோடா, இனிப்புகள், சிலவேளை ஐஸ் கிறீம்கூட எமக்கெல்லாம்இலவசமாகக்கிடைக்கும்! ஆனால் அதைப்பற்றி நாங்கள் ஏலவே பேரம் பேசுவது என்பதே கிடையாது.

தேர்தல் நாளன்றும் வீட்டினின்றும் வாக்குச் சாவடி செல்ல, வயதானோர், வலுவிழந்தோருக்கு வாகன வசதிகள் பெற்றுக் கொடுக்கவும் நாம் ஓடியாடி உதவினோம். வீட்டில் அடைந்து கிடந்தவர்களை உற்சாகப்படுத்தி வாக்களிக்கவும் நாம் செய்தது உண்டு.

அந் நாட்களில் வாக்காளர்களுக்கு வேட்பாளர்கள் வாகன வசதி செய்து உதவுவதிற் தங்கு தடை இருக்கவில்லை. சில வாக்காளர்கள் இது தேர்வு நாடிகளின் கடமை என்று கூட நினைத்து அதனைக் கட்டாயமாக்கியும் பயன்படுத்தினார்கள்.

தேர்தல் நாளன்று வாக்குச் சாவடிகளுக்கும் அங்கிருந்து வெளியேயும் அனந்தம் தடவைகள் நாம் ஓடிச் செல்வோம். அன்று நண்பகல் உணவுக்கென எமது வீடு செல்லும் வழமை கிடையாது. வேட்பாளரே சிற்றுண்டி வகையருக்கள், சோடா வகைகள் தந்துஎமதுவயிற்றைநிரப்பி விடுவாரே! அது போதாதா?

வாக்களிப்பு முடிந்ததும் வாக்குச் சீட்டுப் பெட்டிகள் உரிய முறைப்படி கணக்கெடுப்பு நிலையம் செல்லத் தயாராகும். அவை அனுப்பப்பட்டு விட்டாலோ, எமது பணி முடிந்தது ஆகிவிடும். களைத்துப் போனாலும் மனம் நிறைந்தவர்களாக நாம் கடைசியில் வீடு செல்வோம். தேர்தலுக்கு எமது பங்கை நாம் வழங்கிவிட்டோம் அல்லவா?

அந்நாட்களில் தேர்தல் முடிவுகள் அன்றிரவே வெளியாக மார்க்கம் இருக்கவில்லை: இரவு பூராகவும் றேடியோ, தொலைக்காட்சி வசதிகள் யாவும் இன்றுபோல் அன்று இருக்கவில்லையே!

அடுத்து, தேர்தல்பெறுபேறுகள் பத்திரிகைகளில் வெளியாகும். அதனைத்தொடர்ந்து சீனவெடி, பட்டாஸ் கொழுத்தப்படும் சத்தங்கள் ஆங்காங்கே கேட்கும். இன்ன இன்ன வட்டாரங்களில் குதூகலம், வெடிச்சத்தங்கள். எனவே, இன்னார்தான் வென்றுவிட்டார்: இவ்வாறு நாம் அனுமானித்துக்கொள்வோம்.

தேர்தல் கால உச்ச கட்டம் பெறுபேறுகள் அறிவிக்கப்பட்டு, சில நாட்களின் பின் வரும். வெற்றிவாகை சூடிய அபேட்சகர், தமது தேர்தல் தொகுதி அடங்கிலும் மோட்டார் பவனிவருவார். மிகச் சுவாரஸ்யமான ஒரு காட்சி அது. ஏன் தெரியுமா? பவனி வீட்டுக்கு வீடு தரித்து நிற்க, தெரிவு ஆகிய அபேட்சகர் வீட்டிலுள்ள வாக்காளர் ஒவ்வொருவரும் தமக்கு வழங்கிய ஆதரவுக்கு நன்றி சொல்வார்

(15-ம் பக்கம் பார்க்க)

## செயற்கரிய செய்தோர்

### கபிலர்

மலையமான் திருமுடிக்காரி என்னும் அரசன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன். கொடையிற் சிறந்தவன். அவனைப் பாடிப் பரிசில் பெறக் கபிலர் சென்றார். அவன் கபிலரைப் பார்த்ததும் மகிழ்ச்சியடைந்தான்.

தன்னிடம் பரிசில் பெற வந்த புலவர்களோடு கபிலரையும் சமமாகக் கருதிக் கபிலருக்கும் பரிசில் வழங்கினான். பல புலவர்களுடன் தம்மையும் ஒருவராகக் கருதியது கபிலருக்கு வேதனையாக இருந்தது. கபிலர் அரசனைப் பார்த்துக் கூறினார்.

''அரசே ஒரு திசையிலுள்ள வள்ளலாகிய ஒருவனை நினைந்து நான்கு திசையிலுமுள்ள பரிசின் மாக்கள் பலரும் வருவர். அவர்களுக்குக் கொடுத்தல் மிகவும் எளிமையானது. ஆனால் புலவருடைய தகுதியறிதல், வரிசையறிதல் அரிது. அதனால் நீ எல்லாப் புலவரையும் சமமாகக் கருதும் பொதுநோக்கம் தவிர்க்க'' என்றார்.

அறிவுமிக்க புலவர்களின் தரத்தை அறிந்துகொள்ள அறிவுமிக்க அரசனால் தான் முடியும் அதனால் தான் கபிலர் அறிவுமிக்க அரசனுக்கு அழகு. எல்லாப் புலவர்களையும் சமமாகக் கருதாது வரும்புலவரை அறிவின் தரத்தால் வரிசைப் படுத்தி அறிவின் நிலைக்கு ஏற்பப் பரிசில் வழங்க வேண்டும் என்னும் பொருளில் ''வரிசை அறிதலோ அரிது'' என்றார்.

திருவள்ளுவரும் இக் கருத்தை ''அரசன் எல்லாரையும் பொதுவகையாக நோக்காமல் அவரவர் சிறப்புக்கு ஏற்றவாறு நோக்கினால் அதை விரும்பிச் சுற்றமாக வாழ்கின்றவர் பலர்'' என்றார்.

## தரிசனம்

எங்களைச் சுற்றி தினசரி எத்தனை நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன? எத்தனை வைபவங்கள் எம்மத்தியில் தினமும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன?

இந்த வைபவங்கள் நிகழ்ச்சிகளுக்காக எவ்வளவு தொகை பணம் செலவு செய்யப்படுகின்றது.

இவைகளைப் பற்றி நாம் என்றாவது சிந்தித்ததுண்டா?

உதாரணத்துக்கு எங்கள் வீடுகளில் நடைபெறும் பிறந்தநாள் கொண்டாட்டங்களைக் கவனிப்போம்,

சராசரியாக ஒவ்வொரு வீட்டிலும் வருடா வருடம் மூன்று பிறந்த நாள் கொண்டாட்டங்களாவது இடம் பெறுகின்றன. எவ்வளவு ஆடம்பரமாக இவைகளை நாம் கொண்டாடுகின்றோம்.

கையில் பணம் இல்லாவிட்டாலும் கடன்பட்டாவது பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுவது ஒரு மரபாகி விட்டது.

சில சந்தர்ப்பங்களில் பிறந்தநாள் வைபவம் ஏட்டிக்குப் போட்டியாகவும் நடைபெறுவதுண்டு. இவ்வாறான வைபவங்களில் வீணாகப் போகும் உணவு வகைகள் பெருமளவாக இருக்கும்.

இதனை முக்கியமாக இங்கு குறிப்பிட்டுக் கூறுவதற்குப் பல காரணங்களுண்டு.

இன்று எங்கள் மத்தியில் அனாதைகள், அகதிகள் இல்லங்கள் அதிகரித்துக் கொண்டுசெல்வதை அவதானிக்க முடிகின்றது.

பல குழந்தைகள் தாயையும் தந்தையையுமிழந்து, அல்லது இருவரில் ஒருவரை இழந்து அனாதைகளாக பொது இல்லங்களில் தஞ்சம் புகுந்துள்ளன.

திருநெல்வேலி, கைதடி, தெல்லிப்பழை துர்க்காபுரம் போன்ற பல இடங்களில் அனாதைகளாக அடைக்கலம் புகுந்திருக்கும் பிஞ்சுகள் ஏராளம், ஏராளம்.

ஆடம்பரமாக, கேளிக்கையாக பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுபவர்கள், இதற்குச் செலவிடும் பணத்தின் ஒரு பகுதியை இந்தச் சிறுவர்களின் நல்வாழ்வுக்கு வழங்கினால் என்ன?

இதனைவிட உயர்ந்த தர்மம், பலன்தரும் புண்ணியம் வேறெதுவும் இருக்கமுடியாது

மனமிருந்தால் இடமிருக்கும்!

**எஸ். திருச்செல்வம்**
பிரதம ஆசிரியர்
முரசொலி / வாரமுரசொலி

# பேராசிரியர் 'வித்தி'க்கு இறுதிப் பிரியாவிடை



பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் இறுதிச் சடங்குகள் 28-1-1989 சனிக்கிழமை அவரது தெல்லிப்பழை தமிழகம் இல்லத்தில் நடைபெற்றது. ஏறத்தாழ இருபத்தைந்துக்கும் அதிகமான பல்துறைப் பிரமுகர்கள் இரங்கலுரை நிகழ்த்தி இறுதிப் பிரியாவிடை வழங்கினர். மேலுள்ள படத்தில் கல்விப் பணிப்பாளர் வெற்றிவேலு சபாநாயகம், யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, பேராசிரியர் நந்தி, கவிஞர் முருகையன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் பாலகிருஷ்ணன், விரிவுரையாளர் சின்னத்தம்பி, மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம், விஞ்ஞானப் பீடாதிபதி பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் ஆகியோர் உரையாற்றுவதைக் காணலாம்.





மேலுள்ள படத்தில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் கலாநிதி இ. தேவசகாயம், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராஜா, ஒஸ்மானியா கல்லூரி உபஅதிபர் ஜனாப் ஹமீட், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி ஜெபநேசன் (அருகே சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வணபிதா பிரான்சிஸ் ஜோசப் நிற்கிறார்.) ஆகியோர் உரையாற்றுகின்றனர். அருகேயுள்ள படத்தில துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ். அரசாங்க அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கம் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.



மேலேயுள்ள படத்தில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி, விரிவுரையாளர் கலாநிதி சி. மௌனகுரு, முரசொலி பிரதம ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம், பேராசிரியர் அ. சண்முகதாஸ், நடிகமணி வி. வி. வைரமுத்து, உதயன் ஆசிரியர் திரு. வி. எம். கானமயில்நாதன், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, தமிழாசிரியர்சங்கச் செயலாளர் திரு த. மகாசிவம் ஆகியோர் இரங்கலுரை நிகழ்த்துகின்றனர்.

### அனுபவக் கதை

# ஒரு நேர்முகப் பரீட்சை பஸ்ஸுக்குள் நடந்துமுடிந்தது

தனபாலசிங்கம்

நான் சீட்டுப் பிடித்துக் குடை வாங்குவதற்குள் மாரி காலம் போய் விடுகிறது. காசு சேர்த்து செருப்பு வாங்கும் முன் கோடையும் போய் விடுகிறது. ஐம்பது சத லொத்தர் எடுத்தாலோ கேவலம் ஒரு பின் கேர்வையாவது விழ மறுக்கிறது என் அதிர்ஷ்டத்தின் லட்சணம் இப்படி இருக்கும் போது, நான் எப்படி ரூபா கணக்கில் செலவளித்து வெளிநாடு சென்று கொள்ளை கொள்ளையாகச் சம்பாதிக்க முடியும்?

சரி, அப்படித்தான் யாரிடமாவது மன்றாடி மத்திய கிழக்குப் பக்கம் போய் உழைத்து ஊர் வந்து உற்றார் உறவினர் சகிதம் – படமாளிகை, நகை மாளிகை, புடவை மாளிகையெல்லாம் உலா வரலாமென்றால்... எனக்குத் தெரிந்த அனேகர் ஈட்டுக் காசிலும் வட்டிக் காசிலும் அங்கு போய் அகதி முகாம்களில் இருக்கிறார்களாம். கஷ்டப்பட்டுப் போய் அவர்கள் கண்டபயன் என்ன...? ஆகாய விமானமும் அரபு மண்ணும்தானா? பேசாமல் இங்கேயே எடுபிடி வேலை கிடைத்தாலும் எங்கள் நாடே போதும் என்ற எண்ணத்தில் பக்கத்து வீட்டு அன்ரியிடம் ஐந்நூறு ரூபா கைமாற்று வாங்கிக் கொண்டு தனியார் நிறுவனம் ஒன்றின் நேர்முகப் பரீட்சைக்காகசொகுசு வண்டி மூலம் எழில் மிகு கொழும்பு மாநகர் வந்து இறங்கி இருக்கிறேன்.

பரீட்சைக்கு முதல் நாள் பஸ் எடுத்து இன்றுகாலை வந்து இறங்கி இருக்கிறேன். ஒன்பது மணிக்குப் பரீட்சை முடிந்தும் அன்று மாலையே ஊர் போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்பதுதான் என் திட்டம்.

எத்தனையோ வருடங்களின் பின் கொழும்பு சோட்டை வீதியைப் பார்க்கிறேன். விதவிதமான வெளிநாட்டுப் பொருட்கள் கொண்டாவும், யமகாவும் போட்டி போட்டு ஓடும் லாவண்யம் பலவர்ண நிறங்களில் சீறிக்கொண்டு ஓடும் வெளிநாட்டு மோட்டார் ரதங்கள்! மொத்தத்தில் கூறப் போனால் கட்டிட மலைகளுக்கூடாக கார் ஆறு பாய்வதைப்போல அழகாக இருந்தது கொழும்பு.

குட்டி லண்டன் எனக் கொழும்பை வர்ணிப்பார்களே...... குட்டி லண்டனே இவ்வளவு அழகாக இருந்தால் லண்டன் எப்படி இருக்கும்?

ஐயையோ! புகையிரத முகப்பு மணிக்கூண்டு கோபுரத்தில் நேரத்தை நிமிர்ந்து பார்த்தேன் ஏழு முப்பது இன்னும் ஒன்றரை மணிநேரத்தில் பம்பலப்பிட்டியிலுள்ள அந்த நிறுவனத்தில் நான் ஆஜராக வேண்டும்.

அவசர அவசரமாக பஸ் தரிப்பை அடைந்தேன் தரிப்பில் நின்ற கும்பலோடு கும்பலாக சிறிது நேரம் வீதியையும் நடைபாதையையும் ரசித்துக் கொண்டிருக்கும் போது...... காண்கின்றேன். எங்கள் ஊரில் இரண்டு ரூபா கொடுத்தாலும் மிகுதிச்சில்லறை பெறுவது காலி வீதியை நடந்து கடக்கும் பிரயத்தனத்தை விட கஷ்டமானதே!

அதோ! இரத்மலான பஸ் சடின் பிறேக்கடித்து நின்றது தொற்றிக் கொண்டேன். பஸ்ஸா அது. ஏதோ ஒரு மாளிகைக்குள் புகுந்தது போன்ற உணர்வு! சீட்டிற்காக சில்லறைகளை எடுத்து நிமிர்ந்த போது...... என்ன ஆச்சரியம்! அந்த பஸ்ஸின் நடத்துநர் ஒரு பெண்.

பாரதி கண்ட புதுமைப் பெண்கள் எங்கள் ஊரில் மிதி வண்டிகளில் ஊர்கோலம் வர, கொழும்பில் புதுமைப் பெண்கள் பஸ்ஸின் சீட்டுக் கொடுக்கும் இயந்திரத்தை சடக் சடக்கென இயக்கிக் கொண்டிருப்பதை ஆவலுடன் பார்த்தேன்.

இப்படி எங்கள் ஊரிலும் பெண்கள் நடத்துனர்களாக இருந்திருந்தால் யாழ்ப்பாண பஸ் பிரயாணங்கள் அலுப்புத் தட்டியிருக்குமா? அவள் மீண்டும் டிக்கட் கொடுக்கும் இயந்திரத்துடன் விளையாடிக் கொண்டிருந்தாள்; இவ்வளவு ஆண்களையும் சாதுர்யமாக சமாளித்தபடி சீட்டுக்களையும் சில்லறைகளையும் வேகமாகப் பரிமாறிக் கொண்டிருந்தாள். மிகத் தாராளமாகவே மிகுதிச் சில்லறைகளை அள்ளி அள்ளிக் கொடுப்பதை கொழும்பு பஸ் நடத்துநர்களிடம்தான் காண்கிறேன். எங்கள் ஊரில் இரண்டுரூபா கொடுத்தாலும் மிகுதிச் சில்லறை பெறுவது காலி வீதியை நடந்து கடக்கும் பிரயத்தனத்தைவிட கஷ்டமானதே!

அதோ ஒரு இருக்கை காலியாக இருக்கிறது மெதுவாக ஊர்ந்து சென்று அமர்ந்து கொண்டேன் திடீரென என் பக்கமாக வெளிநாட்டு வாசனைத்திரவியம் மூக்கைத் துளைக்க திரும்பிப்பார்த்தேன். என் அருகில் இருப்பது டெனீம் ரீஷேர்ட் சகிதம் ஒரு அழகான வெள்ளை வெளேரென்ற பெண்.

மீண்டும் கடைக் கண்ணால் அவளை நோட்டம் விட்டேன். அவள் எதுவித சலனமும் இன்றி என் மீது தாராளமாக ஒட்டிக்கொண்டு ஒய்யாரமாக வீற்றிருந்தாள்! நானும் அவளும் தனிமையிலேயே அந்த பஸ்ஸில் விடப்பட்டதைதுபோன்ற உணர்வு தேகமெல்லாம் ஜில்லிட்டது!

எங்கள் ஊரில் தப்பித்தவறி ஒரு பெண்ணுக்குப்பக்கத்தில் அமர்ந்து விட்டால்......ஏதோ அசிங்கத்தைக் கண்டது போல தள்ளி இருந்து. முகத்தை

(14-ம் பக்கம் பார்க்க)

# பாரதம் உலகுக்களித்த துறவி

ஆ. புண்ணியமூர்த்தி

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் மண்ணதனில் பிறந்து வாழ்ந்ததிலும்- மாந்தரை உய்விப்பதற்கென அவர் உழைத்ததிலும் தனி மகிமை ஒன்று உண்டு. சுவாமி விவேகானந்தர் ஆண்மையே வடிவெடுத்து வந்தவர் வீரமும், தீரமும் ஒருங்கே சேரப்பெற்றவர். இந்து மதத்திற்கு உலகெங்கும் தலைமை இடம் ஏற்படுத்திக் கொடுத்திட்டவர். பிள்ளைப் பருவத்தில் நரேந்திரராகப் பெயர் கொண்டிருந்தபோதே தலைவருக்கான தகுதியைப் பெற்றவராகத் திகழ்ந்தார். ஆசைக்கும், அச்சத்திற்குமிடையே சஞ்சல ஊஞ்சலில் நர்த்தனமாடி நலிந்து, மெலிந்து நடமாட்ட ஊட்டம் குன்றி நிலைகுலைந்தோர்க்கெல்லாம் நல்நடைத் திறம் ஊட்டிடும் உறுதுணைவராக- ஊர் உலகைத் திருத்திடும் உத்தமராக அவர் திகழ்ந்தார்

உலகிலே அறம் வளர்ந்திடச் செய்தலிலும் புதிய கொள்கைகளையும், கருத்துக்களையும் பரப்புதலிலும் மக்களின் வாழ்வுமுறையை மாற்றுதலிலும் சுவாமிகள் ஆற்றிய பங்கு அளவிடற்கரியது. புத்தர், ஏசுநாதர், நபிகள் நாயகம் போன்ற மதஸ்தாபகர்கள் மரபிலே தோன்றிய பெரியோர்கள் இப் புவிக்கு புத்துயிரும், புனிதவாழ்வும் வழங்கியிருக்கிறார்கள் அவ்வாறே ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் சீடரான சுவாமி விவேகானந்தரும் பாரதநாடு மேன்மையடைய தன்னலமற்ற தொண்டினை ஆற்றினார். புனிதவாழ்வின் மூலம் இம்மையிலும், மறுமையிலும் நல்வழியைக் கடைப்பிடித்து ஒழுகிடல் வேண்டுமென உபதேசம் செய்தார். அவர் உறக்கத்தில் கழித்தநேரம் மிகச் சிறியது. இரவென்றும்,பகலென்றும் உணராது ஆழ்ந்த நிஷ்டை புரிந்தார். உண்ணும் போதும், உலவும் போதும் கடவுளது திருநாமமே அவரது நாவிற் குடி கொண்டிருந்தது. எளிய வாழ்விற்கிடையே அவர் புரிந்துவந்த தவம் போற்றுதற்குரியது.

உலகத்தை உய்வித்தற் பொருட்டு சுவாமிகள் வெளிநாடுகள் செல்வதற்கான காலம் வந்தது. 1881 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கையில் கமண்டலமும், தண்டமும் தாங்கிப் பரம்பொருள் ஒன்றையே துணையாகக் கொண்டு புறப்பட்டார். பணம் எதையும் கையாளுவதில்லையென்றும் வலியவரும் உணவைமட்டும் உட்கொள்வதென்றும் நாளைக்கென எதையும் தேடிவைப்பதில்லையெனவும் அவர் விரதம் பூண்டார். சுவாமிகள் பல ஊர்களைக் கண்டும், கடந்தும் கால்நடையாக இந்தியாவின் பல இடங்களையும் காணப்புறப்பட்டார். சென்னை வந்தபோது தான் அமெரிக்காவில் கூடுதற்கிருந்த சர்வமகா சபைக்கு இந்துமதத்தின் பிரதிநிதியாக

(14-ம் பக்கம் பார்க்க)

# சுளை விழுங்கி

அது ஒரு கலாமன்றம் சின்னஞ் சிறிய அந்தக் கிராமத்தின் மணி ஆரம் போல் நிமிர்ந்து நின்றது. பார்த்தோரும் கேட்டோரும் வியக்கும் வகையில் தூரநோக்கில் கிராமத்தின் மக்கள் தொகைப்பெருக்கை உத்தேசித்து திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தது. நூலகப்பகுதி, சிறுவர் பகுதி, வளர்ந்தோர் பகுதி என முப்பெரும் பிரிவுகளை தன்னுள் அடக்கிக் கொண்டு அடக்கத்தின் திருவாகக் காட்சி அளித்தது.

"எத்தனையோ கல்விமான்கள் டாக்டர்கள், பொறியியலாளர்கள் எல்லாம் எமது கிராமத்தில் பிறந்திருந்தும் இப்படி ஒரு மன்றத்தை அமைக்க முடியவில்லையே..." என்ற ஆதங்கத்தை அயல் கிராமத்து கல்விமான் ஒருவர் மன்றத்திற்கு வந்திருந்த போது சொல்லிக் கொண்டார்.

கொட்டிலாக இந்த மன்றத்தை ஆரம்பித்தவர்கள் சில ஆண்டுகளுககுள் பொருளாதார நெருக்கடியால விட்டுவிடடனர். கவனிப்பாரற்ற நிலையில் கிடந்த அந்த மன்றம் மாடடுத் தொழுவமாக மாறிக்கிடநதது.

இந்த நிலையில்தான் அந்தக்கலா மனறத்தை ஒருவன் முன்நினறு பல லட்சம் ரூபா செலவில இப்படிக் கட்டிமுடித்தான. பொருளாதார வளங்குன்

### விளைவு விளைவின்

றிய அந்தக் கிராமத்தில்– சிரமதானத்தாலும், சுயநலமற்ற சில நண்பர் தம் உதவியோடும் பொது நிகழ்ச்சிகளால் திரட்டிய பணத்தினைக்கொண்டு இப்படி ஒரு மன்றத்தை அவன் முடித்து விட்ட போது பலர் அவனை வாழ்த்தினர். அந்த மன்றத்தினோடு அவனது பெயரினை இணைத்துச்சொல்லவும் சிலர் இருந்தனர். காழ்ப்புணர்வு கொண்ட ஒரு சிலருக்கு இது பெரும் உளச்சலிப்பாகத்தான் இருந்தது

அந்த ஒருவனை வீழ்த்தி விட்டு அந்த இடத்தை தாமே பிடித்துக் கொள்ளப்பெரும் பிரயத்தனப்பட்டனர்.

மன்றத்தை கட்டிமுடித்தவன் இளைஞர் கையில் மன்றத்தைக் கொடுத்து விட்டான். வளரும் தலைமுறை செவ்வனே ஆற்றுமென்ற நம்பிக்கையில்.

புதிய நிர்வாகிகள் பொறுப்பு புதுவிதமான வழிவகைகளிலெல்லாம் நிதி சேர்த்துக் கொண்டனர். அந்தக் கிராமத்து மக்களிடமே இப்படி ஒரு வகைச் சுரண்டல் செய்து பொருளைத் தேடிக்கொண்டனர்.

மக்களும் ஏதோ இவர்கள் அந்த ஒருவனைவிட நல்லதைச் செய்துவிடக்கூடுமென்று எண்ணியதாலோ என்னவோ–இயன்றவரை பொருளுதவி செய்து கொண்டே இருந்தனர்.

திட்டங்கள் வகுக்கப்பட்டன. விழாக்கள் பற்றிப் பேசப்பட்டன. எல்லாமே பேச்சோடும் எழுத்தோடும் நின்றுவிட்டன. குசு குசு செய்திகளும் களேபரங்களும் கூட நடந்து முடிந்தன ஆனாலும் கட்டிவைத்தவனின் பெயரே எப்போதும் எங்கும் பேசப்பட்டுக் கொண்டே இருந்தது.

புதிய நிர்வாகிகளில் ஒருவனுக்கு இது ஒரு பெரும் நமைச்சலாகிக் காழ்ப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டே இருந்தது. அவனது கணக்குப் பதிவுகள் அறிக்கைகள் எல்லாவற்றையுமே எப்படியாவது கபளீகரம் செய்துவிட்டால்... வரலாற்றிலிருந்து அவனது பெயரைக் கிள்ளி எறிந்துவிடாலாம். இப்படித்தான் அந்த நிர்வாகி சிந்தித்தான்.

காலம் கை கொடுத்து விடவேண்டுமென்று காத்திருந்தான் இராணுவக்கெடுபிடிகளின்போதுமன்றத்தில் சில பகுதிகள் சேதமாக்கப்பட்டன சந்தர்ப்பத்தை பயன்படுத்தி விட்டால்... புதிய நிர்வாகியின் வரண்டு போன புத்தி முடிவாக்கிக் கொண்டது.

எல்லா ஏடுகளையுமே எடுத்துக்கிழித்துவிட்டான். கிழித்து விட்டு வெறும் அட்டை (மட்டை) களை மட்டுமே வைத்திருந்தான்.

நிலைமைகள் சீரடைந்த போது மன்றம் மீண்டும் இயங்கியது. நிதிக்கொடுப்பனவு செய்திருந்தோர் கேள்விகளை வீசத்தொடங்கிவிட்டனர்.

கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது நிர்வாகிபிரசன்னமாகி இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட பாதிப்புகளையும் இடர்ப்பாடுகளையும் சொல்லி அழுதார்.

மக்களின் துயரில்தானும் மாழுவதாகக் குளறிப்பிதற்றினார் அவரின் பிதற்றலில் சிலர் மயங்கிப்போயினர்.

இந்தப் பித்தலாட்டங்களைப் புரிந்து கொண்டவர்கள் கணக்குகளைக் கேட்கத்தான் செய்தனர்.

பாவம் அந்த நிர்வாகி மக்களை ஏமாளிகளென்று நம்பி இருக்க வேண்டும்; கணக்குக் கொப்பிகள் எல்லாவற்றையும் இராணுவ நடவடிக்கையினால் பறிபோய் விட்டதாகவும் இவைதான் எஞ்சியவை என்றும் கூறி கொப்பிகளின் அட்டைகளை(மட்டை) உயர்த்திக் காட்டினார்.

சபையில் சிரிப்பொலி மறைய வெகுநேரம் பிடித்தது. நிர்வாகி பேசமுடியாது தளதளத்தார்.

தோலிருக்கச் சுளை பிடுங்கின கதையாயிருக்கே இது. எப்படி, யார் நம்புவது இந்தச் செப்படி வித்தையை அட்டை (மட்டைகள்)களை விட்டு விட்டு உள்ளே உள்ள தாள்களை மட்டும் கிழித்தெறிந்தார்களா வேலி பயிரை மேய்ந்த கதையா? இது? .. ஓ... சுளை விழுங்கிகளை இப்போதுதான் இவர்கள் இனம் காணமுடிந்தது என்றான் ஒருவன். அமைதியாக இருந்த ஒரு முதியவர் சொன்னார் நீலிக்கண்ணீர் வடித்து வடித்து வெறும் சுளை விழுங்கியாக மாறிவிட்டானப்பா இவன். இவன் சுளை விழுங்கிதான் என்று கூச்சலிட்டான்.

சபையில் அமர்க்களம் ஓய வெகு நேரம் சென்றது சபை அமைதியடைந்த போது அந்த நிர்வாகியை அங்கு காணமுடியவில்லை.

## வைத்திய கலசம்

# இரகசியநோயென வெட்கப்படாதீர்கள்!

டாக்ர் எம். கே. முருகானந்தன் M. B. B.S. (Cey)

✶ வெள்ளை படுதல் என்பது பெண்களில் எந்தப் பராயத்தினரையும்-சிறு குழந்தை முதல் பாட்டிவரை-பாதிக்கலாம். வெளியே சொல்ல வெட்கத்தையும், வைத்தியரிடம் செல்லத் தயக்கத்தையும், 'இது என்ன காரணத்தினுல் ஏற்பட்டது' என்ற பயத்தையும் ஏற்படுத்துவதால் பெரும்பாலான பெண்கள் கவலைக்கும் மனப்பதற்றத்திற்கும் ஆளாக நேரிடுகிறது.

✶ பெண் பாலுறுப்பு, மென்சவ்வால்(Mucus membrane ஆனதாலும், அதில் பல சுரப்பிகள் இருப்பதாலும் பெண் பாலுறுப்பு ஈரலிப்பாயிருப்பதும், அதிலிருந்து சிறிதளவு 'திரவம் சுரப்பதும் இயற்கையானதே. இவ்விதம் சுரக்கும் திரவம் அசட்டை பண்ண முடியாத அளவிற்கு அதிகமாகும் போதே அது வெள்ளை படுதல் என கூறப்படுகிறது.

✶ வெள்ளை படுதல் பல தருணங்களில் எவ்வித நோய் காரணமாகவும் அல்லாது, சாதாரண உடற் தொழிலியற் காரணமாக இருக்கலாம். உதாரணமாக கட்டிளம் பருவத்திலும் (Puberty), மாதவிடாய்க்கு முந்திய இரண்டு மூன்று தினங்களிலும், கர்ப்பக் காலத்திலும் அதிகளவு வெள்ளை படுவதை நீங்கள் உங்கள் அனுபவத்தில் கண்டிருக்கக் கூடும். இதில் சுரக்கும் திரவம் எச்சில் போலவோ, சளி போலவோ இருக்கலாம். துர்மணமோ, நிறமோ இருக்காது. அத்துடன் பாலுறுப்பில் எரிவு, நமைச்சல், சொறிவு போன்ற அசௌகரியங்களையும் ஏற்படுத்தாது. இதற்கு எத்தகைய வைத்தியமும் தேவையில்லை. முழு உடலையும் முக்கியமாகப் பாலுறுப்பை சுத்தமாக வைத்திருப்பதும், உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதும் போதுமானது. பல பள்ளி செல்லும் பெண்களை மனப்பதற்றமடைய வைப்பது இத்தகைய ஆபத்தற்ற வெள்ளை படுதலே என்பது கவனத்தில் எடுக்க வேண்டியதாகும்.

✶ நுரை போன்று அதிக அளவில். மிகவும் வெளிறிய பச்சை நிறத்தில். சிறிதளவு மணத்துடனும், சொறிவுடனும், ஏற்படும் வெள்ளை படுதல் ரைக்கோமோனியாசிஸ் (Tricomoniasis) எனும் தொற்று நோயால் ஏற்படுவதாகும்.

★ தடிப்பான, தயிர் போன்று வெள்ளை நிறமான, கடுமையான சொறிவும் கொண்ட வெள்ளை படுதல் ஒரு வகைபங்கசு கிருமித் தொற்றலால் உண்டாவது இது ·கன்டிடியாசிஸ் (Candidiasis) என்று சொல்லப்படும் நீரிழிவு நோயாளிகளிடையேயும், கர்ப்பிணிப் பெண்களிடையேயும் அதிகம் காணப்படும். சில கடுமையான நுண்ணுயிர் கொல்லி மருந்துகளை உட்கொள்ளும் போதும் சில கருத்தடை மாத்திரைகளை உட்கொள்பவர்களையும் இந் நோய் தாக்கக் கூடும். எனவே வைத்தியரிடம் செல்லும் போது. நீங்கள் ஏதாவது மருந்துகளை உட்கொண்டிருந்தால் அவற்றையும் மறக்காமல் சொல்லுங்கள்.

★ கொனரியா எனப்படும் .மேகவெட்டை நோயில் ஏற்படும் வெள்ளைபடுதல் பற்றி முன்பே வைத்தியகலசம் மூலம் அறிந்திருப்பீர்கள்.

★ கர்ப்பப்பையின் கழுத்தில் ஏற்படும் சில நோய்களால் (e-g Chronic Cerricitis Cerrical erosion) எச்சில் அல்லது சளி போன்ற வெள்ளைபடுதல் ஏற்படலாம்.

✶ சீழ் போன்ற கடுமையான மணத்துடன் கூடிய வெள்ளைபடுதல் அலட்சியப்படுத்தல் கூடாதது. இதில் சில வேளை இரத்தக் கறையும் கலந்திருக்கலாம். இது பெரும்பாலும் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.

✶ மாதவிடாய் நின்றுவிட்ட சில வயதான பெண்களிடையே, இரத்தக்கறையுடன் கூடிய வெள்ளை படுதல் புற்றுநோய் அல்லாத நோயாலும் உண்டாகலாம். (உதா.Senile Vaginitis) ஆயினும் இத்தகையவர்கள் வைத்திய ஆலோசனை பெற்றுத் தமக்கு கர்ப்பப்பையிலோ (Uteras), அல்லது அதன் கழுத்திலோ (Cervix) புற்றுநோய் இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

✶ சிறுபெண் குழந்தைகளிலும் வெள்ளைபடுவதை காண்பது பல பெற்ருேருக்கு அதிர்ச்சியளிக்கக் கூடிய விஷயமாயிருக்கலாம். இது தாளைப் பூச்சி (Thread-worm) தொற்றியதால் உண்டாகலாம். வேறு கிருமிகளும் காரணமாக இருக்கலாம். எதற்கும் வைத்திய ஆலோசனை பெறுவது அவசியம். அத்தகைய குழந்தைகளின் குறிப்பிட்ட பகுதியை இளஞ்சூட்டு வெந்நீரில் தினமும் கழுவுவதும் அவசியம். அத்துடன் தடித்த துணிகளையும் நைலோன், டெட்ரோன் போன்ற செயற்கைத்துணிகளையும் உள்ளாடைக்குப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். உள்ளாடைகளைத் தினமும் தோய்த்துச் சுத்தப்படுத்துவதும் முக்கியமானது.

✶ கர்ப்பப்பைஇறக்கத்தைக்கட்டுப்படுத்துவதற்குஉள்ளே வைக்கும் வளையத்தை (Vaginal Pessary) கவனியாது நீண்டகாலம் விடுவதாலும் வெள்ளைபடுதல் உண்டாகலாம். இதை அடிக்கடி வைத்தியரைக் கொண்டு எடுத்துச் சுத்தப்படுத்தி மீண்டும் வைக்க மறவாதீர்கள்.




# குழந்தை உள்ளம்

குறைகூறி வளர்க்கப் பெறும் குழந்தை வெறுக்கக் கற்றுக்கொள்கிறது.

✶ அடக்கி வளர்க்கப்படுகின்ற குழந்தை சண்டையிடக் கற்றுக் கொள்கிறது.

✶ கேலி செய்யப்படும் குழந்தை வெட்கத்தோடு வளர்கிறது.

✶ அவமானப்படுத்தப்படும் குழந்தை குற்றவாளியாகிறது.

உடைகள் கிழிந்துவிட்டால் அதனை மாற்றிக் கொள்ளலாம். ஆனுல் பெற்ருேரின் சுடு சொற்களால் உடைந்துபோன குழந்தையின் பிஞ்சு உள்ளத்தை மட்டும் யாராலும் மாற்ற முடியாது.

சாயி இ. அனுரதன்

# ஆண்களுக்கும் நாற்குணம்

பெண்களுக்குரிய நாற்குணங்கள் நாணம், மடம், அச்சம்,'பயிர்ப்பு, என்பன.

ஆண்களுக்கும் நாற்குணங்கள் உண்டு. அவை: அறிவு, நிறைவு, ஓர்ப்பு' கடைப்பிடி என்பன.

அறிவு: எப்பொருளாயினும் அப்பொருட்களின்று அம் மெய்ம்மை உணர்வது.

நிறை: காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம்.

ஓர்ப்பு: ஒரு பொருளை ஆராய்ந்துணர்தல்.

கடைப்பிடி: கொண்ட பொருள் மறவாமை.

# அவிச்சுவையும் கவிச்சுவையும்

உணவின் சுவைகள் ஆறு அவை; கைப்பு, இனிப்பு, புளிப்பு,உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்பன.

உணவில்ஆறுசுவை இருப்பது போல கவிதையிலே எட்டுச் சுவைகள் உண்டு. அவை; நகைச்சுவை, சோகச்சுவை, இளிவரற் சுவை, மருட்கைச்சுவை, அச்சச்சுவை, பெருமிதச் சுவை, வெகுளிச்சுவை, உவகைச்சுவை என்பன.

தமிழ் நூலார் சுவைகள் எட்டு என்பர். வடமொழி நூலார் சாந்தம் என்னும் ஒன்றையும் சேர்த்து ஒன்பது சுவை என்பார்கள். நவரசம் என்றும் சொல்வார்கள்.

# தமிழ் வளர்த்த சங்கங்கள்

தென் மதுரைத் தமிழ்ச்சங்கம்
மகேந்திர மலைத் தமிழ்ச்சங்கம்
பொதிய மலைத் தமிழ்ச்சங்கம்
மணி மலைத் தமிழ்ச்சங்கம்
குன்றம் எறிந்த குமரவேள் தமிழ்ச்சங்கம்
தலைச் சங்கம்
முது குடுமித் தமிழ்ச்சங்கம்
இடைச் சங்கம்
திருப்பரங் குன்றத்துத் தென் மதுரைத் தமிழ்ச்சங்கம்
கடைச் சங்கம்
வச்சிர நந்தி தமிழ்ச்சங்கம்
மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம்
கோவைத் தமிழ்ச்சங்கம்
கரந்தைத் தமிழ்ச்சங்கம்

# அவன் வென்றுவிட்டான்

ஒரு பெண்ணுக்கும்அவள் கணவனுக்கும் சொற்போருண்டாகி அவன் அவளைப் பழிவாங்கப் போவதாகச் சொன்னுன். அவன் எப்படிப் பழிவாங்குவாய் என்று கேட்டாள். கொல்லையில் இருக்கும் குளத்தில் விழுந்து விடுவேன்'' என்று அவன் சொன்னுன். "நீ விழுகிறதை நான் கண்ணுலே பார்க்க வேண்டும் வா'' என்று அவள் கூற அவன் குளத்தில் விழுவதாக ஓடிப் பின் அஞ்சிக் குளத்து ஓரத்தில் நின்றுவிட்டான்

அவனை அவள் ''நாணங்கெட்டவனே ஏன் குளத்தில் விழவில்லை'' என்று கேட்டாள். அதற்கு அவன் எனக்கு மனம்துணியவில்லை எனக்கு நீந்தத்தெரியுமானதால் நான் தப்பிவந்தாலும் வந்து விடுவேன்-நான் தப்பி வராதபடி என்னுடைய இரண்டு கைகளையும் கட்டிவிட்டுத் தூரத்திலிருந்து ஓடி வந்து என்னைக் குளத்தில் தள்ளிவிடு என்று சொல்லிக் குளத்தின் ஓரத்தில் நின்ருன்.

அவள் கணவனுடைய இருகைகளையும் பின்புறமாய்க்கட்டி விட்டு மிகு தொலைவில் பின்னிட்டுப் போய் அவனைத் தள்ளுவதற்காக மிக விரைவாக ஓடிவந்தாள். அவன் திடீரென அப்பால் விலகிவிட்டான் அவள் ஓடிவந்த வேகத்தினுல் குளத்தில் விழுந்துவிட்டாள். உடனே தன்னைத்தூக்கும்படி கத்தினுள். 'நீ என் கைகளை கட்டிவிட்டாயே நான் என்ன செய்ய முடியும்'' என்று கூறி விட்டுக் கணவன் போய்விட்டான்.

(பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து)

# கவிஎழுதிக் கை சோர்ந்தார்

உ. வே. சாமிநாதையரின் குருவாகிய மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை கவி பாடுவதில் வல்லவர். பல ஆயிரக்கணக்கான பாடல்களை இயற்றிய அவர் தமது கையினுல் பாடல்களை எழுதுவதில்லை எவ்விததடையுமின்றி மிக வேகமாக அவர் பாடல்களைச் சொல்லுவார். அவருடைய மாணவர்கள் எழுதிக்கொள்வார்கள்.

பெரும்பாலும் கோபால பிள்ளை என்ற மாணவரே எழுதுவார். ஏடும் எழுத்தாணியும் அவர் கையில் எப்போதும் இருக்கும். வேகமாக எழுதும் ஆற்றல் பெற்றவர். தம்முடைய எழுதும் வேகத்துக்குத் தகுந்தாற்போல் மீனுட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் பாடுவதில்லை என்று கோபாலபிள்ளை சிலருக்குச் சொல்லி இருந்தார். இச் செய்தி எப்படியோ பிள்ளை அவர்களுக்கு எட்டிவிட்டது

அடுத்த நாட் காலை பிள்ளை பாடல்சொல் ஆரம்பித்தார். கோபாலபிள்ளை ஏட்டில் எழுதத் தொடங்கினுர் மாரி மேகம் மழை பொழிவதுபோலப் பிள்ளை கவிமழை பொழிந்து கொண்டிருந்தார். காலையில் ஆரம்பித்த கவிதை எழுதும்பணி ஒருமணி நேரம் இரண்டுமணி நேரம் என்றுபல மணிநேரங்களைக் கடந்து உச்சிப் பொழுதையும் தாண்டியது. கவிதை நிற்கவில்லை. கோபாலபிள்ளையின் விரல்கள் தவித்தன இரத்தம் கட்டி வீங்கத் தொடங்கின. பிள்ளையவர்கள் காணுதவர் போலப் பாடிக்கொண்டே இருந்தார்.

எழுத முடியாத நிலை ஏற்பட்டதும் கோபால பிள்ளை குருவின் காலில் விழுந்து ''என்கர்வத்துக்கு தகுந்த தண்டனை கிடைத்துவிட்டது. என்னை மன்னித்துவிடுங்கள்'' என்ருர் மீனுட்சி சுந்தரம்பிள்ளை ஒரு புன்முறுவலுடன் அவரை மன்னித்தார்.

# தெரிந்து கொள்ளுங்கள்

✶ எவர் சில்வரில் இரும்பு. குரோமியம், நிக்கல் மூன்றும் 70,20,10,என்ற வீதத்தில் கலந்துள்ளன.

✶ உலகில் மிக ஆழமான எரிபைக்கல் ஆகும். இது சுமார் ஒரு மைல் ஆழமானது.

★ உலகில் மிகப்பெரிய பாலைவனம் சகாரா இது 35 லட்சம் சதுர மைல்கள் பரப்பளவை உடையது.

★ தென்றல் காற்று சுமார் ஆறு மைல்கள் வேகத்திலும்,சூறாவளி, சுமார் அறுபது மைல்கள் வேகத்திலும் வீசுகிறது.

✶ இலட்சத் தீவில் காகங்கள் இல்லை.

✶ அமெரிக்கர்கள் ''காதல் அப்பிள்'' என்று தக்காளிப் பழத்தைக் குறிப்பிடுகிருர்கள்.

★ அரஸ்

# காலங்கள் மாறும்



அத்தியாயம் மூன்று

சமூக நவீனம்

கே.எஸ்.ஆனந்தன்

ஜன்னலோரத்தில் உட்கார்ந்திருந்தான் ரகுவரன். கண்ணுக்கெட்டிய தூரத்துக்கு பச்சைப்பசேல் என மரஞ்செடி கொடிகளும் இடையிடையே உயர்ந்த கட்டிடங்களும் தெரிந்தன. அறிவு ஜீவிகளை வளர்த்தெடுத்து நாட்டின் பலபாகங்களுக்கும் அனுப்பிவைக்கும் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு சமீபமாக அவன் தங்கியிருந்த சமரசிங்காவின் 'சந்திரிகா' என்ற மாடிக்கட்டிடம் அமைந்திருந்தது. அந்த மண்ணின் மாண்போ என்னவோ அந்தப் பிரதேசத்திற்குள் வந்தவுடனேயே படிக்க வேண்டும்; பட்டம் பெறவேண்டும் என்ற ஓர் உணர்வு அனேக மாணவருக்கு வந்து விடுகின்றது என எண்ணிய பொழுது, அவனுக்கே சிரிப்பாயிருந்தது.

'மே ஐ கம் இன்' இனிமையான குரல் கேட்டு திரும்பினான். கதவருகே சந்திரிகா நின்றிருந்தாள். அவளைப் பார்த்து புன்னகைத்தானே தவிர எதுவும் சொல்லவில்லை.

'மே ஐ கம் இன்? நான் கேட்டது காதில் பட்டதோ?' மீண்டும் கேட்டுவிட்டு சிணுங்கினாள்.

'எப்படி பதில் சொல்வேன் என எதிர்பார்க்கின்றாய்?'

'......' மௌனமாய் அவனை உற்றுப் பார்த்தாள்.

'என்ன அப்படிப் பார்க்கிறாய்?'

'மே ஐ கம் இன்'

'வேண்டாம் என்றால் வராமலே போய்விடுவியா?'

'இனி அப்படித்தான் சொல்வீங்க, ஏனென்றால் நீங்க பெரிய......'

'என்ன பெரிய...'

'இது......என்று அவள் சொல்லி முடிப்பதற்குள் எழுந்து வந்து அவளுடைய காதில் பிடித்து உள்ளே இழுத்துச் சென்றான்.

'காது வலிக்குதுங்க'

'வலிக்கட்டும். என்ன புதுசா பெரிய ஆளாட்டம் மே ஐ கம் இன்' என்றான்.

'ஐ ஆம் சொறி ரகு.'

'சரி இனிச் சொல்ல வந்ததைச் சொல் என்றான்''

'ரகு'

'ம் சொல்லேன்.'

'நான் உண்மையாகத்தான் சொல்லுறன் ரகு நீங்கள் கோபிக்கக் கூடாது. இவ்வளவு காலமாக நாங்கள் பழகின போது எனக்கு நீங்கள் எப்படியானவர்? உங்கள் தகுதி என்ன? என்றெல்லாம் புரிந்து கொள்ளவில்லை?' தயங்கி தயங்கி குழந்தைபோல பேசும் அவளுடைய அழகு தமிழைச் சுவைத்துக் கேட்டுக் கொண்டிருந்தான்.'

'இன்றுதான் புரிந்து கொண்டாயாக்கும்?'

'உண்மையாகத்தான் ரகு. யூனிவர்ட்சிடியில் எல்லோரும் உங்களைப் பற்றித்தான் கதைத்தார்கள். அதுவும் சிங்கள ஸ்ருடன்ஸ்தான் உங்களைப்பற்றிய மிகவும் சுவாரஸ்யமாகவும்...... உயர்வாகவும் பேசிக் கொண்டாங்கள்.'

'அதனாலே......'

'நீங்கள் ஓர் நிர்வாக அதிகாரியாக வந்தால் உங்களோடு எப்படி எப்படியெல்லாம் கதைக்கலாம் என்று ஒத்திகை பார்க்கத்தான் இப்படி......'

'சந்திரி நான் என்னைப் பொறுத்தளவில் எந்தப்பதவியிலிருந்தாலும் ரகுதான். எனக்கு இரு கொம்புகள் முளைத்துவிடாது' என்று இரு கைகளையும் தலையின் இருபக்கத்துக்கு முயர்த்தி ஆள்காட்டி விரல்களால் சைகை பண்ணிக் காண்பித்தான்.

சந்திரிக்காவுக்கு சிரிக்காமலிருக்க முடியவில்லை. குபீர் எனச் சிரித்து விட்டாள்.

'ஏன் சிரிக்கிறே?'

'உங்களுக்கு கொம்புமுளைத்தால் எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்த்தேன்'.

'ஸ்ருபிட், எனக்கு கோபம் வரும்.'

'அடடே உங்களுக்கு கோபம் கூட வருமா? பார்த்தாலே தெரியுதே' என்று கூறிவிட்டுஅறையைவிட்டுவெளியே ஓடிவிட்டாள்.'

சந்திரிகாவை நினைக்கும் போது அவனுக்கு மனதில் வேறு நினைவுகள் எதுவும் தோன்றுவதில்லை. தனக்கு ஒரு தங்கையிருந்தால் இப்படித்தானேயிருப்பாள். சண்டை பிடிப்பாள். வம்பு பேசுவாள் என்று நினைக்கும் போது அவளுடைய வெகுளித்தனமும் களங்கமில்லாத உள்ளமும் அவள் மீது மிகுந்த ஈடுபாடு ஏற்படும்படி தோன்றும். பெரும் பணக்காரரான சமரசிங்காவுக்கு ஒரே ஒருசெல்லப்பெண்.

அவளுக்கு எதிலும்குறைவிருக்கவில்லை. அவளைப்பார்பவர்கள் அவள் சிங்களப்பெண்ணா தமிழ்பெண்ணாஎன்றுதடுமாறுவார்கள். மூன்று மொழிகளிலும்சரளமாகஉரையாடுவாள் கழுத்தில் தங்கத்தாலான சிலுவையணிந்த ஒற்றைச் சங்கிலியைத்தவிர வேறு ஆபரணங்களே இல்லாத எளிமையான அலங்காரம். பல்வேறு சமூகங்களிடையே அவர்கள் குடும்பம் ஓர் தனித்துவமான குடும்பமாக விளங்கியது.

மனிதர்களாகப் பிறந்துவிட்டவர்களுக் கிடையேதான் எத்தனை வித்தியாசங்கள். இனபாகுபாடு-மதப்பாகுபாடு -மொழிப்பாகுபாடு இப்படியான நிலைமைகளை மறந்து ஓர் குடும்பம் ஓரினம் என்று வாழ்ந்துவிட்டால் .. மனிதப் பண்புகளை மீறாத காலப் பரிமாணங்களுக்கமைந்து வர்க்க பேதங்களைத் துறந்த ஓர் சமுதாய அமைப்பு புத்துயிர் பெற்று திகழ்ந்து கொண்டிருக்குமே என நினைத்தவன் கீழே பெண்களின் சிரிப்பொலி கேட்டு சிந்தனை தடைப்பட்டவனாய் மேசைமீதிருந்த ஒரு சஞ்சிகையை எடுத்துப் புரட்டினான்.

வாழ்க்கையில் நாம் எதை நினைக்கிறோமோ அது நடப்பதில்லை. நினைக்காதவை நடந்து விடுவதுண்டு. ஆனால் ரகுவரனைப் பொறுத்தளவில் அவனுடைய ஒரே குறிக்கோள் படித்துமுன்னுக்கு வர வேண்டும் என்பதுதான். அது நிறைவு பெற்றுக் கொண்டே வந்தது.

தாய் யார்? அவள் என்னவானாள்? இறந்து போனதாக அவன் தந்தை சொல்லியிருந்தான். அப்படிப் பட்ட தந்தையே தன் ஊர்பேர், உறவு என்று சொல்லிக் கொள்ள முடியாத புதிய ஊரில்-புதிய மனிதர்கள் மத்தியில் தன்னை அனாதையாக விட்டுச்சென்று விட்டதையும் -திக்குத்தெரியாத காட்டில் திகைத்து நின்றவனுக்கு அன்பும், ஆதரவும் தந்து தன் சொந்த மகனைப்போல வளர்த்து படிப்பித்து ஆளாக்கிய சமரசிங்காவையும் அவர் மனைவியையும் தவிர வேறு தாய்தந்தையரை நினைத்துப் பார்க்கவும் அவனால் முடியவில்லை. என்னதான் சுகபோகமாக வாழ்ந்தாலும் தான் ஓர் அனாதை என்ற நினைவு அவன் அடிமனதில் நீறுபூத்த நெருப்பாய் கனன்று கொண்டிருந்தது.

மாடிப்படிகளில் காலடியோசை கேட்டுத்திரும்பினான். சந்திரிகா நின்றிருந்தாள். அவளுக்கு பின்னே யாரோ நின்றிருக்க வேண்டும். அவள் அடிக்கடி பின்னுக்கு திரும்பிப் பார்த்து சிரிப்பதிலிருந்து அவனால் ஊகிக்க முடிந்தது

'என்ன ரகு ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?'

'இல்லையே எப்போதும் போலத்தானிருக்கிறேன்,' என்று கூறியவாறே பின்னால் யார் நிற்பது என்று சைகையால் கேட்டான்.

'கீழே அம்மா நிற்கிறா'

'பெண்கள் பட்டாளத்தின் சிரிப்பொலி கேட்டதே.'

'என் 'கிளாஸ் மேட்ஸ் போயிட்டாங்க'

'நீ போகலை'

'க்கும்'

'ஏன்?'

'நீங்கள் சொல்லுங்கோ பார்க்கலாம்.'

'எனக்கென்ன தெரியும்?'

'இன்னும் பதினைந்து நாளைக்குதானே இங்கிருப்பீர்கள் அப்புறம் றெயினிங் முடிஞ்சா எங்கெங்கே போகிறீங்களோ'

'போனா இங்கே வரமாட்டேனா?'

'யாருக்கு தெரியும்? கடமை வீரனாச்சே. லீவு கூட எடுக்க மாட்டீங்களே.'

'அதனாலே உனக்கென்ன வந்தது?'

'இந்தப் பத்து பதினைந்து நாளும் உங்கள் கூடவே இருந்து அரட்டையடிக்கப் போறேன்'

'பைத்தியம் பைத்தியம். எக்ஸாம் வருதில்லையா?'

'எக்ஸாம் தானே? படிச்சு பாஸ்பண்ணி என்ன உத்தியோகம் பார்க்கவா போறேன்?'

'ஏன்?'

'அப்பா என்னை அனுமதிப் பாரா?'

'டோன் பீ ஸ்ருப்பிட்'

'ஏன் நான் உங்க கூட இருந்து கதைக்கிறது பிடிக்கலை என்றால் சொல்லிடுங்க என்று திரும்பினாள்.

'ஏய் ஏய் சந்திரி......'

சிரித்துக்கொண்டே திரும்ப வந்து உட்கார்ந்தாள் சந்திரிகா. அவள் வளர்ந்து பருவ மங்கையாகி விட்ட போதும் ஒரு குழந்தைபோல இருந்தாள். அவள் பேச்சு நடை உடை பாவனை எல்லாம் சிறுபிள்ளைத்தனமாகவேயிருந்தது. அவளை உற்றுப் பார்த்தான் ரகுவரன்.

அம்மாவைப் போல தோற்றம் நிறம் கொஞ்சம் கறுப்பு என்றாலும் பார்பதற்கு கவர்ச்சி நிறைந்து விளங்கினாள். வட்ட முகமும் எடுப்பான நாசியும் அடுக்கான சின்னப்பல்வரிசையும் அவளுடைய முகத்தில் ஒரு பிரகாசத்தை கொடுத்தன.

''என்ன அப்படிப் பார்க்க நீங்க?''

''உன்னை என்னால் புரிஞ்சுக்க முடியவில்லை. அதுதான் பார்க்கிறன்''

''நீங்கள் என்னை...,' என்று கூறியவள்' ஐ ஆம் வெறி வெறி சொறி ரகு''

''வட் டூயூ மீன்...?''

''நான்தான் சொறி சொல்லிட்டேனே ரகு நீங்கள் அடிக்கடி தனிமையிலிருந்து துன்பப்படுவதை அவதானித்திருக்கின்றேன். இன்னும் நீங்கள் உங்களை அந்நியப்படுத்திக்கின்றீர்களே என்றுதான் வருத்தப் படுகின்றேன்'' அவள் குரல் தழுதழுத்தது.

''நீ ஏன் அப்படி நினைக்கிறே சந்திரி.

''ரகு! என்ன இருந்தாலும் நாங்கள் சிங்களவர். நீங்கள் தமிழர்''

''சந்திரி ஸ்டொப் இட்'' என்றவன் ''நான் தமிழனோ சிங்களவனோ, முஸ்லிமோ அது வேறு விடயம். நான் மனிதன் மனிதனாகத்தான் வாழ விரும்புகிறன் உங்கள் வீட்டிலே வாழ்ந்ததினால் நான் என்னை சிறுமைப் படுத்திக் கொண்டுதான் இப்படி தனியேயிருந்து சிந்திப்பதாக நீ நினைத்தால்... அது தவறு சந்திரி.''

''சொறி ரகு நான் உங்க மனதைப் புண்படுத்தி விட்டேன் போலும்.

''நோ, நோ சந்திரி நான் சமுதாயத்திலிருந்து ஒதுங்கி வாழ முடியாது. அந்த நிலைக்கு உன் அப்பா என்னை உயர்த்தி விட்டிருக்கின்றார். என் அப்பா நண்பன் என்ற முறையில் என்னை உன் தந்தையிடம் விட்டுச் சென்ற பொறுப்பை அவர் தட்டிக் கழித்திருக்கலாம். ஆனால் அங்கிளிடமிருந்த பெருந்தன்மை என்னைப் படிக்க வைத்து தன் பிள்ளையைப் போல பராமரித்து சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் என்னை வைத்துள்ளார். உன் தந்தை உருவாக்கியது ஓர் ரகுவரனை. அதன் மூலம் அவர் எத்தனையோ ஏழை மக்களுக்கு உதவப்போகின்றார். றியலி ஹி இஸ் ஏ கிறேட் ஜென்டில்மன் தெய்வத்தை நான் நேரில் பார்க்க வில்லையானாலும் உன் பேரண்ட்ஸ் வடிவில் பார்க்கின்றேன், வணங்குகின்றேன்'' என்று கூறியபொழுது அவன் விழிகளில் நீர் யுதங்கி முத்தாக உதிர்ந்தன.

''ரகு என்ன இது? நான் ஏதோ கேட்க நீங்கள் பெரிய பெரிய வார்த்தையெல்லாம் பேசுறீங்கள்?'' என்று அவன் விழிகளில் பெருகிய நீரைத் துடைத்துவிட்டாள் சந்திரிகா.

''நான் இதற்காகத்தான் வாய்திறந்து அதிகம் பேசுவதில்லை.''

''உங்கள் அப்பாவை தன் உயிர்காத்த தெய்வம் என்றல்லவா டாடி அடிக்கடி கூறுவார்.''

''என்னவோ அது எனக்குத் தெரியாத விடயம்''

''நீங்கள் என் கூடப்பிறக்கவில்லையானாலும் நீங்கள் என் உடன்பிறப்புத்தான். அண்ணன் என்று நான் அழைக்கவில்லையே தவிர என்றைக்கும் நான் உங்கள் தங்கைதான். நீங்கள் எந்தப் பதவியிலிருந்தாலும் இவளை மறந்திடக் கூடாது.''

''சந்திரி நீ.. நீ..'' அவனால் பேசமுடியவில்லை. அவள் கரங்களை எடுத்து தன் கன்னங்களில் அழுத்தியவாறே

''நான் அனாதையில்லை நான் அனாதையில்லை'' என்றான்.

ஒரு பெண்ணுடைய மன இயல்புகளை யாராலும் எடை போட்டுவிட முடியாது என்பதினால் தானே அவர்கள் மனதை சமுத்திரத்திற்கு ஒப்பிட்டுள்ளார்கள். பெரியவர்கள். ஒருவருடைய உணர்வுகளை மற்றவர்கள் புரிந்துணரும் சக்தியில்லாத வேளைகளில் மனப்போராட்டமே மிஞ்சுகின்றது. அவள் என்ன கேட்பாள் என்ன சொல்வோம் என்றிருந்தவனுக்கு அவளுடைய எதிர்பாராத பதில்கள் அவனை மீண்டும் பேசாமடந்தையாக்கி விட்டது.

''என்ன ரகு மீண்டும் மௌனமமாயிட்டீங்கள்''

''பேசுவதற்கு என்னதான் இருக்கு?''

''நிறைய இருக்கு ரகு. ஆனால் உங்களுடன் கதைக்கக் கூடியதாயில்லை என் 'பிரண்ட்ஸ்' என்றால் எப்படியெல்லாமோ கதைப்பேன். உங்களோடு கதைக்கும் போது எனக்கு என்னையறியாமலே ஒரு பயம்.''

''எனக்கு நீ பயமா? அட கடவுளே ஏன்தான் பொய் சொல்லுறியோ''

"ரகு ஒரு தங்கை தன் அண்ணனுடன் பேசக்கூடாத விடயங்களை பேசலாமா?''

''உண்மைதான் சந்திரி நான் உன்னை இன்றுதான் முழுமையாக புரிந்து கொண்டேன் சிறுவயதிலிருந்து உன்னுடன் நான் சேர்ந்து வளர்ந்தாலும் நீ ஓர் அந்நியப்பெண் என்ற உள்ளுணர்வு அடிக்கடி என் மனதில் தோன்றும். ஆனால் உன்பேச்சும், பழக்கமும் நீ பெரியவளானதும் கொஞ்சம் மாறுபட்ட நிலையிலிருந்தது. சிலவேளை நீ...'' என்று நிறுத்தினான்.

''நான் அவ்வளவு பேராசைக்காரியில்லை ரகு என் மனதில் விளையாட்டாகக் கூட நான் அப்படி நினைத்துப் பார்த்ததில்லை உங்களைப் பார்க்கும்போது ஒருவித மரியாதை, பயம் இப்படிப்பட்ட உணர்வுகளே எனக்குத் தோன்றும் உங்களை என் அண்ணனாக நினைத்ததினால் தான்'' என்று கூறியவள் அடுத்துக் கேட்ட கேள்வி அவனை வியப்பிலாழ்த்தும் கேள்வியாக மட்டுமல்ல அவன் மனதை உரைத்துப் பார்க்கும், கேள்வியுமாகவிருந்தது.

(வளரும்)

# உடல் நலன் உணர்வு நலன் உணவின் தரத்தால் அமையும்

பரமேஸ்வரி சிவராமலிங்கம்

உணவு, உடை, உறையுள் மூன்றும் மனிதனின் அடிப்படைத் தேவைகள் இவற்றுள் உணவு முதற்கண் கூறப்பட்டிருப்பது "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று புறநானூறு சிறப்பித்துரைப்பதற்குப் பொருந்தியதாகும்.

தொல்காப்பியம் பொருளதிகாரத்தின் முற்பகுதியில் தெய்வத்திற்கு அடுத்ததாக உணவு குறிப்பிடப்பட்டுள்ளது. "தெய்வம் உணாவே மாமரம் புள்பறை செய்தி யாழின் பகுதி" என்பது இதனை உணர்த்தும் உணவு என்ற சொல்லிற்கு 'உண்' அடிச்சொல் என்றும் உண்ணப்படுவன அனைத்தும் உணவு என்றும் உயிர் வாழ்வதற்கும், உடல்நலத்திற்கும் தீங்கு விளைவிக்காத இன்றியமையாத பொருள் உணவு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உணா வல்சி, உண்டி ஓதனம், அசனம், பதம், இரை, ஆகாரம் உறை, ஊட்டம் ஆகிய பத்துச் சொற்களும் உணவ என்னும் பொருளை உணர்த்துவதாக பிங்கள நிகண்டு குறிப்பிடுகின்றது.

## திருமூலர் கூற்று

உயிர் வாழ்க்கைக்கு உணவு மிக அவசியமானது உணவில்லா மனிதன் உயிரற்ற மனிதனாகச் சிறப்பிழந்து விடுகின்றான் உடல் வளர்ச்சியுறுதற்கும், உயிர் ஆற்றல் பெறுதற்கும் உணவு அவசியமாகும் எனவே உடம்பைப் பேணுதல் உயிரைப் பேணுதலாக அமைகின்றது. இதனை திருமூலர், தெளிவாகக் கூறியுள்ளார்.

உடம்பார் அழியின்
உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம்
சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும்
உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன்
உயிர் வளர்த்தேனே.

உலகில் ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு படைத்த மனிதன் வரை அனைத்து உயிர்கட்கும் உணவு அவசியமாகும். விலங்குகள் தமது உடல் வளர்ச்சிக்கும் உறுப்புக்களின் செயற்பாட்டிற்கும் உணவை நாடுகின்றன. ஆனால் மனிதன் உடல் வளர்ச்சிக்கும், உறுப்புக்கள் இயங்கவும் மட்டுமன்றி தன்னுணர்வு வளர்ச்சிக்கும் உணவை நாடுகின்றான். ஆயுள் வளர்ச்சிக்கும், அதன் குறைவிற்கும் உண்ணும் உணவு காரணமாகின்றது.

## பசியும் பண்பும்

உயிரினங்களுக்கு ஒழுங்குற உணவுப் பொருள்கள் கிடைக்காமையால், பசி, பஞ்சம், பட்டினி போன்ற அவதிகள் ஏற்படுகின்றன. இதனால் ஒழுக்க நெறி கெட்டுவிடுகின்றது. பசித்துன்பம் மிகக் கொடியது. இதனால் தான் அதனை 'அழிபசி' என்றார் வள்ளுவர். பசி வந்திடப் பத்தும் பறந்து போகும். மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை தேனின் கனிவந்த சொல்லியர் மேற்காமுறுத்தல் பத்தும் பசி வந்திடப் பறந்து போம். எனவே பசிப்பிணியின்றி வசதியும், வளமும் பெற்று வாழ வேண்டும்.

உணவில்லாமல் ஒருயிர் நீண்டகாலம் வாழ முடியாது. இதனால் தான் ஆதி மனிதன் முதல் தொழிலாகவும், முழுநேரத் தொழிலாகவும் உணவு தேடுதல் அமைந்தது இயற்கை உதவிய காய், கனிகளை உண்டு பசியாறியவன் இன்று இராப் பகலாக உணவு உற்பத்தியில் முழு அக்கறை காட்டி வருகின்றான். நாகரிகம் அரும்பாத தொடக்க காலத்தில் காட்டு மாந்தர் தமக்கு எளிதில் கிடைத்த காய் கனிகளையும் இலை, தழைகளையும் பச்சையாகவே உண்டனர். காலம் செல்லச் செல்ல அவர்கள் உணவு முறையில் மாற்றம் ஏற்பட்டது. தற்பாதுகாப்பிற்காக விலங்குகளை வேட்டையாடியவர் பின்னர் அவற்றின் இறைச்சியை உண்டனர். பச்சையாக உணவைச் சாப்பிட்ட மக்கள் கல்லால் நெருப்பை உண்டுபண்ணி குச்சியில் ஊனைச் செருகி வாட்டி உண்டனர். இவ்வாறே சமையற்கலையின் ஆரம்பம் ஏற்பட்டது.

## உணவில் நாகரிகம்

கூட்டமாகவும், குடும்பமாகவும் வாழும் நிலை எய்திய பின்னர் தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தேடி அலையாமல், நிலத்தை உழுது பயிரிடும் முறையை அறிந்தனர். தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை நிலத்திலே விளைவித்தனர். மேலும், விலங்குகளையும், பறவைகளையும் உணவுக்காக வளர்த்து வந்தனர். சிலவகை உணவுகள் நோயை ஏற்படுத்துவதை அறிந்து அவற்றிற்கு மாற்று மருந்தாக வேறு வகையான உணவுகளைப் பயன்படுத்தினர். மூலிகை மருத்துவம் இந்த உணவு வகையில் தான் தோற்றமெடுத்தது.

மரத்தாலும், மண்ணாலும், உலோகத்தினாலும் பாத்திரங்கள் அமைத்து அதனுள் நீர் விட்டு உணவை வேகவைக்கும் முறையை அறிந்து கொண்டனர். பின்னர் கறிச்சரக்கு வகைகளைப் பயன்படுத்தி உணவிற்குச் சுவையூட்டினர். பசியைப் போக்குவதாக அமைந்த உணவு காலப்போக்கில் பலப்பல வகையாகவும் நாவிற்கு ருசியாகவும் மாற்றமடைந்தது சமையற் கலைவளர உணவு வகைகளும் மாற்றமடைந்தன.

மனிதனுடைய நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ப பழக்க வழக்கங்களும் மாறிக் கொண்டே வருகின்றன. அவற்றில் உணவு வகைகளும் மாற்றமடைந்துள்ளன. பழங்கால மனிதனுடைய உணவு வகைகளுக்கும் தற்கால உணவு வகைகளுக்கும் அதிக வேறுபாடுகள் உள்ளன.

## உணவும் தட்ப வெப்பமும்

உணவுப் பழக்கம் நாட்டிற்கு நாடு காலத்திற்குக் காலம் தட்பவெப்ப நிலைமைகளுக்கு ஏற்ப, சமய அனுட்டானங்களுக்கேற்ப மாறுபடுவதுண்டு.

தமிழ் மக்களுடைய உணவு வகைகளுக்கும், சிங்கள மக்களுடைய உணவு வகைகளுக்கும் முஸ்லிம் மக்களுடைய உணவு வகைகளுக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. வட இந்தியரின் உணவு வகைகளுக்கும் தென்னிந்தியரின் உணவு வகைகளுக்கும் இடையில் வேறுபாடுள்ளது. இதே போன்று ஆட்டிப்பிரதேச மக்கள் உணவு இடைவெப்ப வலய மக்கள் உணவிலும் வேறுபட்டுள்ளது. ஒருவருக்கு நஞ்சாக இருப்பது இன்னொருவருக்கு நல்லதாக அமைகின்றது. உணவுப் பழக்கம் ஒரு சமூகத்தில் நிலைத்திருப்பதாகும். அப்பழக்கத்தை உடனடியாக மாற்றிவிடமுடியாது. ஆனால் தற்போது நாகரிக மோகத்தால் உணவுப்பழக்கம் மாறி வருவதை அவதானிக்க முடிகின்றது.

சமூகத்திலுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வினாலும் உணவு வகைகள் மாற்றமடைந்துள்ளன. ஏழைமக்கள் வறிய உணவையும் செல்வந்தர் சிறந்த உணவையும் உட்கொண்டனர். வறிய மக்கள் வெறும் கூழைக் காய்ச்சிக் குடித்தும் குப்பைக்கீரையை உப்பிடாமலும் அவித்துத் தின்றும் பசியாற்றினர். ஆனால் செல்வவளம் உள்ளவர்கள் பாலை உலையிலிட்டு அரிசியிட்டு சோறு செய்து நெய் முதலிய வற்றை சேர்த்து உண்டு களித்தனர்.

ஐவகை நிலப்பிரிவுகளுக்கு ஏற்ப அங்கு காணப்பட்ட பொருட்கள் அப்பகுதி மக்களின் உணவாக இருந்தன. குறிஞ்சி நிலமக்கள் உடும்பின் இறைச்சி, பன்றியின்தசை மூங்கிலரிசிச் சோறு, கள் ஆகியவற்றை உணவாகக் கொண்டனர். அத்துடன் அவரை இஞ்சி, மஞ்சள் வாழை பலா, கிழங்கு வகைகள் என்பவற்றையும் உணவாகக் கொண்டனர். முல்லை நிலமக்கள் பால், தயிர் மோர், நெய் போன்றவற்றை உணவாகக் கொண்டனர் அவரைப் பருப்பும், வரகரிசிச் சோறும் அவர்களது உணவாய் இருந்தது மருத நிலமக்கள் நெல் அரிசிச் சோற்றையும் மா, பலா, வாழை ஆகிய கனிவகைகளையும் உணவாகக் கொண்டனர். நெய்தல் நில மக்கள் மீன், கள் என்பவற்றை உணவாகக் கொண்டனர்.

பாலைநில மக்கள் பன்றி, ஆமை ஆகியவற்றின் இறைச்சியை உணடனர்.

புலால் உணவு போர் வீரருக்கு ஊக்கமளிக்க உதவுவது என்ற கருத்துள்ளது. புலால் உணவை உண்ணுவிட்டால் மனித உடலின் வளர்ச்சியும் நலமும் கெடும் என்றும் குறிப்பிடப்படுகின்றது வீர உணர்வு, காதல் உணர்வு என்பவற்றில் மேலோங்கி நின்ற தமிழர் சுவையுணவு உண்டனர் என்பது தெளிவு.

## சுவைகளும் குணங்களும்

உணவில் அறுவகைச் சுவைகளும் செறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். துவர்ப்பு, கயர்ப்பு, இனிப்பு, உவர்ப்பு, கைப்பு, புளிப்பு என்னும் ஆறுசுவைகளில் துவர்ப்பு ஆற்றலையும், கார்ப்பு வீறினையும், இனிப்பு வளத்தையும், புளிப்பு இனிமையையும், உவர்ப்புத் தெளிவையும், கைப்பு மென்மையையும் கொடுக்கும் தன்மை உடையவை. மேலும் அறுவகைச் சுவைகளும் அறுவகைத் தாதுக்களை வலுப்படுத்துவனவாகும். துவர்ப்புச்சுவைக் குருதியைப் பெருக்கித் தூய்மையாக்குகின்றது. உவர்ப்புச் சுவை எலும்பை வளர்க்கின்றது. இனிப்புச் சுவை தசையை வளர்க்கின்றது. காரச்சுவை உமிழ்நீரை சுரப்பிக்கச் செய்கின்றது. புளிப்புச் சுவை கொழுப்பைப் பெருக்குகின்றது. கசப்புச் சுவை நரம்பை உறுதிசெய்கின்றது.

இன்று உலகில் உணவுப் பிரச்சனை என்னும்போது எல்லாமக்களுக்கும் போதிய உணவு இல்லாமையும் சத்துள்ள உணவு கிடைக்காமையுமாகும். சில நாடுகளில் அதிக அளவில் உணவு உற்பத்தி செய்யப்படுவதும் சில நாடுகளுக்கு அவை கிடைக்காமையும் ஆகும். சீரான உணவு விநியோகம் இல்லாததினாலும் உணவுப் பிரச்சனை உருவாகியுள்ளது. சத்துணவு இல்லாமல் சாகும் குழந்தைகள் அநேகம். இந்நிலை நிவர்த்தி செய்யப்பட வேண்டிய தொன்றாகும்.

## உணவும் உணர்வும்

மனிதனிடத்தில் நல்லுணர்வுகளை உருவாக்கி வளர்ப்பது உணவேயாகும் உணவுக்குப் பொருத்தமாகவே மனிதன் உணர்வுகளைப் பெறுகின்றான். உதாரணமாக எல்லா நிலையிலும் சமமாகவுள்ள இருவரை எடுத்துக்கொண்டு ஒருவருக்கு நல்ல உணவையும், மற்றவருக்கு வறிய உணவையும் அளித்துவந்தால் சில மாதங்களில் நல்ல உணவு பெற்றவன் செயல், திறன், நுண்ணறிவு, சுறுசுறுப்பு ஆகியவற்றை உடையவனாகவும் வறிய உணவைப்பெற்றவன் சோம்பலுக்கு ஆட்பட்டு தாழ்நிலையுற்று அவன் திறன்கள் யாவும் அழிந்து அவர்கள் இருவருக்கும் கடலளைய வேறுபாடு ஏற்படும். எனவே நல்லுணர்வைப் பெற நல்லுணவு அவசியம். நல்லுணர்வுகளே வாழ்க்கைக்கு அவசியமாகும். நல்ல உண

(15ம் பக்கம் பார்க்க)

# பிறவிகள்தோறும் தொடரும் பிராரத்துவ வினை

கிஷ்கிந்தையில் வானர அரசனாக முடிசூடப் பெற்று ஆட்சி செய்து வந்தான்வாலி. தேவேந்திர குமாரனான வாலி மகா பலசாலி. இராவணனை விட ஆயிரம் மடங்கு வலிமை கொண்ட வச்சிர தேகத்தை உடையவன். தன்னை எதிர்த்துப் போரிடுபவர்களுடைய உடல் வலிமை சிறிது சிறிதாகத் தனக்கு வந்து சேர்ந்து விடவேண்டும் என்பது அவன் பெற்ற அபூர்வமான வரங்களில் ஒன்று. ஆகையால் வாலியை எதிர்த்துப் போரிடப் பூவுலகில் எவருமே இல்லாதிருந்தனர்.

வாலியின் தம்பி சுக்ரீவன் சுக்ரீவனுக்கும் வாலிக்கும் இடையே உண்டான, விரோதம் காரணமாக வாலிக்குப் பயந்த சுக்ரீவன் வனத்திலும், மலைச் சாரல்களிலும், அங்குமிங்குமாக ஒளித்துத் திரிந்து வாழ்ந்து வந்தான். சுக்ரீவனுடைய மந்திரியாகிய அனுமனும் வேறு சில வானரர்களும் அவனுடன் பிரிந்து வந்து விட்டனர்.

சீதையைத் தேடிக் காடுகளிலும் மலைகளிலும் அலைந்து கொண்டிருந்த இராமனும் இலக்குமணனும் கிஷ்கிந்தையை அடைந்தார்கள். சுக்ரீவனும் இராமனும் நண்பர்களாகி, ஒருவருக்கொருவர் உதவத் தீர்மானித்தார்கள். சுக்ரீவனுடைய கவலையைத் தீர்க்க எண்ணிய இராமன் 'உன்னுடைய பகைவனான வாலியைக் கொன்று உனது மனைவியையும், இராச்சியத்தையும் மீட்டுத் தருவேன்' என்று அக்கினி சாட்சியாகச் சத்தியம் செய்து கொடுத்தான்.

சுக்ரீவனுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற, வாலியைக் கொல்லத் தீர்மானித்தான் இராமன். வாலியும் இராமனும் முன்பு ஒருவரையொருவர் கண்டு அறியாதவர்கள். அவர்களிருவருக்குமிடையில் எதுவித மான பகையோ கோபமோ இருந்ததில்லை. அப்படியிருக்க காரணமெதுவுமின்றி, வாலியை எப்படிக் கொல்லலாம் என எண்ணி இராமன் கவலையடைந்தான். மேலும் வாலி பெற்றிருந்த அபூர்வமான வரத்தின் தன்மையையும் சுக்ரீவன் மூலமாக அறிந்திருந்ததால், சுக்ரீவனும் வாலியும் போர் செய்யும் பொழுது மறைந்திருந்து அம்பு எய்து வாலியைக் கொல்லத் தீர்மானித்தான் இராமன்.

அழகு அருணாசலம்

சுக்ரீவனுக்கு இராமனின் துணை இருந்ததால், வாலியை வலியப் போருக்கு அழைத்தான். இவ்வளவு காலமும் காடுகளிலும் மலைகளிலும் மறைந்து திரிந்த சுக்ரீவன் போருக்கு அழைக்கிறானே என்று ஆச்சரியமடைந்த வாலி போருக்குப் புறப்பட்டு வந்தான்.

வாலிக்கும் சுக்ரீவனுக்குமிடையில் மிகப் பயங்கரமான போர் நடந்து கொண்டிருந்தது நேரம்ஆக வாலியின்பலம் அதிகரிக்கச் சுக்ரீவனின் பலம் குறையத் தொடங்கியது. இனியும் தாமதம் செய்தால் சுக்ரீவன் இறந்து விடுவான் என எண்ணிய இராமன், வில்லை வளைத்துவாலிக்கு இலக்கு வைத்துப் பாணத்தை விட்டான். வாலியின் வைரமான மார்பை இராமனுடைய பாணம் துளைத்து விட்டது. அம்பு துளைத்த இடத்திலிருந்து இரத்தம் பீரிட்டுப் பாய, வேதனையுடன் அடியற்ற பாரிய மரம் போல வாலி நிலத்தில் விழுந்தான்.

தன்மார்பைத் துளைத்த பாணம் எங்கிருந்து வந்தது என்பதை அறிய சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, பாணத்தின் அடியில் இராம இலச்சனை பொறிக்கப்பட்டிருந்தது கண்டு மிகவும் ஆச்சரியமும், கோபமும் கொண்டான். அந்தச் சமயம் இராமனும் இலக்குமணனும் மெதுவாக வாலியின் பக்கத்தில் வந்தார்கள்.

இராமனைக் கண்ட வாலி 'ஏ தசரதகுமாரா உத்தம குலத்தில் பிறந்து பெரும் புகழ் பெற்ற சத்திய வந்தனை நீயா இந்த இழி தொழிலைச் செய்தாய். நீ அரசபதவிக்கு ஏற்றவனல்ல. உன்னைப் பூமாதேவி ஏற்றுக் கொள்ள மாட்டாள். முறை தவறி நீ எனக்கு அம்பு எய்த பெரும் பழிக்கு ஏற்ற தண்டனையை அனுபவிப்பாய்' என்று கூறி உயிர்துறந்தான்.

விரோதம் எதுவும் இல்லாமல் வாலியை மறைந்திருந்து கொன்ற துக்கத்தைத் தாளாத இராமன் வாய்மூடி மௌனியாக நின்றான். ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் அம்சம் பெற்று, மானிட உருவுடன் மண்ணுலகில் பிறந்தாலும் அவதார இரகசியத்தை அறியாதபடியினால், சாதாரண மனிதர்போன்று, கவலை, துன்பம் போன்ற பூவுலக நியதிகளிலிருந்து இராமனால் தவற முடியவில்லை.

மிதிலையில் ஜானகியை மணந்து, பின் வனத்துக்குச் சென்று இராவணவதம் முடிந்தபின், அயோத்தியையடைந்து பதினொரு ஆயிரம் ஆண்டுகள் ஆட்சி புரிந்தபின் காலதேவனின் அறிவிப்பின்

(15-ம் பக்கம் பார்க்க)

# ராணித் தேனீயின் ரகசியங்கள்

தேனீக்களின் உயிரியல் வரலாற்றில் நெடுங்காலமாகப் புரியாமலிருந்த ஒரு மர்மம் இப்போது வெளிப்பட்டுள்ளது.

கெயித் ஸ்லெஸ்ஸர் என்ற ஆய்வரின் தலைமையிலான குழு, ராணித் தேனீயை வேலைக்காரத் தேனீக்கள் அடையாளம் காண உதவுகிற ஐந்து வகையான கூட்டு ரசாயனப் பொருள்களை இனம் கண்டுள்ளது.

சோதனை முறை உயிரியலிலும்,பகுப்பாய்வு ரசாயனத்திலும் இந்தக் கண்டுபிடிப்பு ஒரு பெரும் சாதனை. தேனீக்கள் ஒன்றோடொன்று செய்தித் தொடர்பு செய்துகொள்ளும் செயல்முறையின் சிக்கலான தன்மையை அவை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

தேன் கூடுகளில் சுமார் 80 ஆயிரம் வரை வேலைக்காரத் தேனீக்கள் இருக்கும். அவை ஒரு மிகுந்த ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் பணியாற்றுகின்றன. இதன் காரணத்தைக் கண்டுபிடிக்கவும், தேனீக்களினால் ஏற்படுகிற பொருளாதார லாபத்தைக் கருத்தில் கொண்டும் அவற்றின் நடத்தைகளைக் கண்டறிய ஆதிகாலத்திலிருந்தே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன,

விதவிதமான நடனங்களை ஆடிக்காட்டுவதன் மூலம் தேனீக்கள் உணவு இருக்குமிடங்களைத் தனது தோழர்களுக்குத் தெரிவிக்கின்றன என்று கார்ல்வான் ஃபிரிஷ் கண்டுபிடித்தார். அதிலிருந்து தேனீக்களின் நடத்தைகளைப் பற்றிய நவீனமான ஆய்வுகளுக்கு ஊக்கம் பிறந்தது.

ஸ்லெஸ்ஸரும் அவருடைய சகாக்களும் தேன் கூட்டுக்குள் நிலவுகிற சமூக ஒருமித்தலுக்கான காரணங்களை அறிவதில் கவனத்தைச் செலுத்தினர். பெருமளவில் முட்டையிட்டுத் தள்ளக் கூடியதிறமை பெற்றிருக்கிற ராணித் தேனீயின் தாடைகளுக்கருகிலுள்ள மாண்டிபுலர் சுரப்பிகளில் (Mandibular gland) உள்ள ஒரு பொருளின் காரணமாகவே இந்தச் சமூக ஒருமித்தல் ஏற்படுகிறது எனத் தெரியவந்திருக்கிறது.

இந்தப் பொருள் பெரொமோன்கள் அல்லது செமியோ கெமிகல்ஸ் எனப்படும் பல ரசாயனங்கள் அடங்கிய ஒரு கலவையாகும். அந்த ரசாயனங்கள் ராணித் தேனீயின் செய்திகளை வேலையாள்களுக்குத் தெரிவிக்கின்றன.

## தேன்கூட்டில் 80000 வரை வேலைக்காரத் தேனீக்கள் இருக்கும்

அந்த ரசாயனப் பொருள்களை உணர்ந்ததும் வேலையாள்கள் ராணியைச் சுற்றிக் குழுமுகின்றன. ராணியை நக்கிச் சுத்தம் செய்து தமது உணர்கொம்புகளால் தடவிக் கொடுத்துப் பணிவிடை செய்கின்றன அதன் பிறகு அவை வெளியே வந்து மற்றத் தேனீக்களுக்கு ராணியின் விஜயத்தைப் பற்றித் தெரிவிக்கின்றன.

இந்த ரசாயனக் கலவையைக் கடந்த 20 ஆண்டுகளாகப் பகுப்பாய்வு செய்திருக்கிறார்கள். ஆனால், அதிலுள்ள ரசாயனப் பொருள் எதுவும் இந்தப் பணிவிடை நடத்தையைத் தூண்டிவிடக் கூடியதாகத் தெரியவில்லை.

தேனீக்களை ராணியின் அருகில் குழுமச் செய்யும் பொருள் ராணி ஈக்களின் தாடைச் சுரப்பிகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு அதன் ஆக்கக்கூறுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. அதற்குப் பிளவில்லா நுண்புழை வாயு நிறக்குறி வரைவு என்ற உத்தி பயன்பட்டது. அந்த இரசாயனங்கள் தனித்தனியாக இருத்தல் அவை தேனீக்களில் பணிவிடை செய்யும் உணர்வைத் தூண்டாது என்று கற்பிதம் செய்து கொள்ளப்பட்டது.

அவை கூட்டமைப்பாக இருந்தால்தான் அந்தவிளைவு ஏற்படும். அந்த ஆக்கக் கூறுகள் ரசாயனங்களை இரண்டிரண்டாகக் கலந்து அவற்றைத் தேனீக்களின் முன் வைத்தபோது என்ன நிகழ்கிறது என்று ஆய்வர்கள் பரிசோதித்துப் பார்த்தனர்.

அவற்றில் ஐந்து ரசாயனப் பொருள்கள் தேனீக்களில் பெருமளவுக்குப் பணிவிடை நடத்தையைத்தூண்டி விடுகிறதாகத் தெரியவந்தது. அவற்றைத் தனித்தனியாகப் பிரயோகித்துப் பார்த்தபோது எதுவும் முழுமையான பணிவிடைநடந்ததாக தூண்டிவிடவில்லை.

ஆனால், கிட்டத்தட்ட இயற்கையில் காணப்படுகிற விகிதத்தில் அவற்றைக்கலந்து வைத்தபோது முழுமையான பணிவிடை நடத்தை தேனீக்களிடம் தோன்றியது இயற்கையில் காணப்படுகிறதில் ஒருகோடியில் ஒரு பங்கு அளவில் செறிவு இருந்தால்கூட அந்தக்கலவையைக் கண்டதும். தேனீக்கள் பணிவிடை நடத்தையைக் காட்டத் தொடங்கின.

இன்னும் எவ்வளவோ கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது எடுத்துக்காட்டாக, ஒரு தேன்கூட்டுச்சட்டத்தை வெயிலில் வைத்தபோது ராணியின் சொந்த ரசாயனப் பொருள், செயற்கைப்பொருளைவிட அதிக அளவில் வேலையாள்களின் பணிவிடை நடத்தையைத் தூண்டிவிடுவது காணப்பட்டது.

இதிலிருந்து பெரமோன்கள் அல்லது ரசாயனப் பொருள்களைத் தவிர வேறுஏதோ ஒரு அச்சமும் தேனீக்களின் நடத்தைக்குக் காரணமாக அமைகிறது. என்று ஊகிக்கமுடிகிறது. ஆய்வர்கள் உருவாக்கியிருக்கிற ஐந்து ரசாயனப் பொருள்கள் ராணியை அடை

(15-ம் பக்கம் பார்க்க)

# சிரிக்கவைக்கும் சிகிச்சை நோயாளியைக் குணமாக்கும்

தினம் ஒரு சிரிப்பு டாக்டரை விரட்டும் (A Laugh A Day Keeps the Doctor Away) என்பது முதுமொழி. இது, சிரிப்பின் மகத்துவத்தை மிகப்படுத்தும் வெறும் வார்த்தையல்ல; இதில் விஞ்ஞான ரீதியாக நிரூபணமாகும் உண்மையும் இருக்கலாம். அமெரிக்க வைத்தியக் கழகத்தின் உத்தியோகபூர்வ வெளியீட்டுச் சஞ்சிகையின் இவ்வார இதழ் இதனைப் பிரசுரித்துள்ளது. சுவிடிஷ் ஆய்வாளர் அறிக்கையொன்றில் இது தொடர்பான தகவல்கள் இடம் பெறுவதாகச் சஞ்சிகை மேற்கோள் காட்டுகிறது.

சுவீடனிலுள்ள மொட்டாலா பட்டினத்தில் அமைந்த விக்கோர்ணுபிறைமறிஹெல்த்-கெயர் ஸென்ரர் ஆராய்ச்சியாளர்கள் இந்த ஆய்வை மேற்கொண்டனர். தசை-எலும்பு தொடர்பான கோளாறுகளின் உபாதையால், ஆறு பெண்கள் மனம் சோர்ந்த நிலையில் இருந்தனர் நகைச்சுவையூட்டும்குழு அமர்வுகளிற் பங்குபற்றும் வாய்ப்பு இவர்களுக்கு அளிக்கப்பட்டது. இப்படியான பதின்மூன்று அமர்வுகளில் இம்மாதர்கள் பங்குபற்றினர். அவ்வேளை, சிரிக்கவைக்கும் கதைகள், நூல்கள், திரைப்படங்கள் தாராளமாக இடம்பெற்றன. இப்பேர்ப்பட்ட ஹாஸ்யக் காரணிகள் எவையேனும் இவர்களுடைய நோயுடன் சம்பந்தப்பட்டனவல்ல.

இப்பெண் நோயாளிகள், பகிடி விட்டுச் சிரித்துக் கொண்டு இருந்த குழுக்கள் மத்தியில் பொழுது போக்கியதை உடனடுத்து, மனோதத்துவ வகையில் அவர்களுடைய உளநலம் மேலோங்கியது. உடலில் உணரப்பட்ட வேதனை அறிகுறிகள் தணிந்தன.

நெடுநாளைய அசௌக்கியம் உத்தரிப்போரின் வாழ்க்கைத்தர நலம் சிரிக்கவைத்தற் சிகிச்சை முறையால் மேம்படுகிறது. சிரிப்பதால் இவர்களது நோயறிகுறிகள் உடனேயே உக்கிரம் தணிந்துவிடுகின்றன. இவ்வாறு மேற்படி சுவீடிஷ் ஆய்வறிக்கையிற் காணப்படுவதாக அமெரிக்க வைத்திய கழக உத்தியோகபூர்வசஞ்சிகைகுறிப்பிடுகிறது.

# தொடர் காவியம்

# காவேரி

காரை. செ. சுந்தரம்பிள்ளை

## 3

### பேரழகுச் சுந்தரியாள்

செந்தமிழர் பண்பாடு சேர்ந்திலங்கப் பேரழகுச்
சுந்தரியாள் காவேரி தாயவளாய் வந்துதித்தாள்
புலவரெல்லாம் போற்றும் பொலிவுமிகு லட்சணங்கள்
குலவு திருமகளாய்க் கோதையிவள் தான்பிறந்தாள்
அன்பின் இருப்பிடமாய் அறிவின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்ப் பாவையிவள் காணுகிறாள்
பாட்டும் பரதமொடு பண்பான ஓவியமும்
காட்டும் கலையரசி கண்ணான காவேரி.

அன்ன நடையெனவும் அழகுமயில் சாயலென்றும்
சொன்ன புலவரிவட் கென்ன சொல்லப் போகின்றார்
முல்லைச் சிரிப்பென்றும் முலைகள் இரு செம்பென்றும்
இல்லையிடை என்றேரும் இவள் அழகுக் கென்ன
சொல்வர்
காந்தவிழி என்பர்; கயல்மீன் வடிவென்பர்
கூந்தல் புயல் என்பர் கோதையிவட் கென்ன சொல்வர்
வில்லோ புருவங்கள் வேலோ இருவிழிகள்
சொல்லே அமுதமென்பர் தோகையைப் பார்த் தென்ன
சொல்வர்
சங்கோ கழுத்துமுகம் தாமரையோ சந்திரனோ
எங்கோ உவமைஎன் பார்இவள் எழிலுக்கென்ன
சொல்வர்
தங்கச் சிலையோ தமிழ்வடிவோ என்றிவளின்
அங்கத்தைச் சொன்னாலும் அஃதுவமை யாகாதே
பவள இதழ் திறந்தால் பாகுதிரும் என்றாலும்
இவளின் குதலை மொழிக் கீடெதனைச் சொல்வதுவோ
அழகுக் கழகு செய்தார் ஆயிழைமார் என்றலுத்த
பழகுமொழிக் கம்பனும்இப் பாவையைப்பார்த் தென்ன
சொல்வான்

கண்ணென்ற பேராலே காளையரைக் கொல்வதற்குப்
பெண்ணென்ற அந்தப் பிரமன் படைத்தானோ
மன்மதனை வென்றரதி மற்றவரை வெல்வதற்கு
இந்நிலத்திற் காவேரி யாகப் பிறந்தாளோ
பண்ணார்ந்த சொல்லாலே பாரையெலாம்
தோற்கடிக்கப்
பெண்ணாகக் காவேரி பிறப்பெடுத்து வந்தாளோ
கொங்கை யென இரண்டு கூற்றுவனைக் கொண்டாலும்
மங்கைமுகம் காவல் மந்திரமாய்க் காண்கிறதே
ஆடவரைக் கொல்லவரும் அணங்குவடி வானாலும்
பேடிவளின் பார்வையிலே போனவுயிர் மீண்டிடுமே
வானுலகப் பெண்களெலாம் வந்தவளின் பக்கல் நின்றால்
ஏனிவர்கள் தான்பிறந்தார் என்றெண்ணத்
தோன்றிடுமே
கண்ணகியும் மாதவியும் கற்புள்ள சீதையும் இப்
பெண்ணரசி யாகப் பிறப்பெடுத்து வந்தனரோ
எவ்வா றுவமித்து இவள்பெருமை சொன்னாலும்
ஒவ்வா உவமையவை இவளுக் கிவளிணையே

பேராதனை தனிலே பேர் பெற்ற மருத்துவத்தை
ஆராய்ந்து கற்றுணர்ந்த ஆயிழையிக் காவேரி
அரச துருப்புகளால் அடியுதையே பட்டவரைக்
கரிசனையாய்க் காப்பாற்றும் கடவுள் இந்தக் காவேரி
கைகால் இழந்தவர்க்கும் கண்கா திழந்தவர்க்கும்
உய்காலாய் நின்றுமிக உதவிடுவாள் காவேரி
குண்டாலும் செல்லாலும் கூறிநிதுப் பாக்கியாலும்
துண்டான பேர்களுக்குத் துணை நிற்பாள் காவேரி
ஏழைபணக் காரரெனும் ஏற்றத்தாழ் வேதுமின்றி
நாளும் மகிழ்ச்சியுடன் நல்லபணி செய்திடுவாள்
ஊரார் உவந்திடவே ஒப்பிலாச் சேவைபல
சீராகச் செய்துவரும் செல்விகதை தான்தொடர்வோம்
(தொடரும்)

# இல: 13 + வெள்ளிக்கிழமை

மேல் நாட்டில் பலவிதமான மூடநம்பிக்கைகள் உண்டு அதில் ஒன்று பதின்மூன்றும் எண்ணைக் கண்டு பயப்படுவது. அதிலும் ஓர் வெள்ளிக் கிழமையன்று பதின்மூன்றும் திகதியாகி விட்டால் கேட்கவே வேண்டாம். பலரும் அஞ்சிநடுங்குவார்கள்.

இவ்வாண்டு ஜனவரி 13-ம் திகதி இவையிரண்டும் ஒன்று சேர்ந்தநாள். இதேபோல் இவ்வருடஒக்டோபர் பதின்மூன்றும் வெள்ளிக்கிழமையாகும் ஐரோப்பியர் இந்த பதின்மூன்றுக்கு பயப்படுவது ஏன்? இந்த நம்பிக்கை எந்தக் காலத்தில் தோன்றியது என்பது தெரியவில்லை.

ஆனால் கிறிஸ்தவர்கள் வெள்ளிக்கிழமையை துரதிஷ்டவசமாக நினைக்கின்றனர். ஏனெனில் ஒரு வெள்ளியன்றுதான் யேசுபெருமான் சிலுவையில் அறையப்பட்டார். ஆதாமும், ஏவாளும் தடைசெய்யப்பட்ட ஓர் கனியை உண்டதும் வெள்ளிக்கிழமை "லாஸ்ற்சப்பர்" என்றழைக்கப்படும் நிகழ்ச்சியில் பதின்மூன்று பேர் இருந்ததால் இப்போதும் கூட கிறிஸ்தவர் பலர் பதின்மூன்றுபேராக ஒரே மேசையில் இருந்து சாப்பிட அஞ்சுவார்கள். ஹோட்டல்களில் பதின்மூன்றும் எண் உள்ள அறையில் பயணிகள் தங்க அஞ்சி மறுப்பதால் பல ஹோட்டல்களில் அந்த எண்ணுடன் அறை இருக்கமாட்டாது. பன்னிரண்டுக்குப் பின் பதினான்குதான் இருக்கும். அமெரிக்காவில் பல மாடிக்கட்டிடங்களில் கூட பன்னிரண்டாவது மாடிக்குப்பின் பதினான்காவது மாடி தான் இருக்கும். ஆனால் கிறிஸ்தவ மதம் தோன்ற முன்னமே உரோமர் பதின்மூன்றைத் துரதிஷ்ட எண்ணாகவும் அழிவு, மரணம் ஆகியவற்றின் எண்ணாகவும் கருதிவந்தனர். வெள்ளிக்கிழமையும் பதின்மூன்றும் சேர்ந்து வந்து ஒன்றும் நடக்காது விட்டால் கூட அதன்மீது மக்களுக்கு ஓர் அவநம்பிக்கையே இருந்து வருகிறது. இதனால் தான் இதை மூட நம்பிக்கை என அழைக்கிறார்கள் போலும்.

# இந்துபோர்ட் இராசரத்தினம்
## காலமும் வாழ்வும்

க.சி.குலரத்தினம்

19

இந்துபோட் இராசரத்தினம் முழுநேரமும் கல்விப்பணி புரிவதற்காகவே தமது வருவாய் மிகுந்த நியாயவாதித் தொழிலையும் புறக்கணித்தவர். அவர் அன்று நிலவிய கல்வித்திணைக்களத்தின் கண் மூடித்தனத்தை வெளி வெளியாகஎடுத்துக்காட்டிவந்தார். பலசமூகங்கள்வாழுகின்ற ஒரு நாட்டில் ஒரு சமூகம் இன்னொரு சமூகத்திலும் பார்க்க ஏற்றம் பெறுவதையோ, ஏற்றமுள்ள சலுகைகள் பெறுவதையோ அவர் விரும்பவில்லை. அது தருமத்துக்கு மாருன செயல். இலங்கையில் தமிழர்என்ரெரு இனமுண்டு. அந்த இனத்தவரின் சனுதனமான சமயம் சைவம். சைவத்தை மறுமலர்ச்சி செய்யவே ஆறுமுகநாவலர் அவர்கள் சென்றவழியில் சைவவித்தியாவிருத்திச் சங்கம் ஆரம்பிக்கப் பெற்றதாகும். அன்றைய குடிசனமதிப்பின் பிரகாரம் கிடைத்த புள்ளி விபரப்படி 22 வீதமான சைவசமயத்தவரின் ஒரு லட்சம் பிள்ளைகளுள் 28,000 பிள்ளைகளே தங்கள் சமயம் சார்ந்த 163 பாடசாலைகளிற் படித்துவந்தார்கள். அவர்கள் பெற்ற நன்கொடை 5,51,000 ரூபாவாகும்.

அன்று கல்வியின் பொருட்டுச் செலவான அறுபத்தைந்து லட்சம் ரூபாவில் சைவர், பௌத்தர், முஸ்லிம்கள் பெற்ற தொகை குறைவானவையேயாம். சைவர், பௌத்தர், முஸ்லிம்கள் ஆகியோரிடையே 2,70,000 பிள்ளைகள் படிக்காமலே இருந்தார்கள். இதை அவர் மேலும் விளக்கிய போது 3,85,000 பௌத்த பிள்ளைகளுள் 2,85 000 பிள்ளைகள் அரசினர் பாடசாலைகளிலும் 1,20,000 பௌத்த பாடசாலைகளிலும் பிற பாடசாலைகளிலும் படித்தார்கள். இன்னும் 60,000 கிறிஸ்தவ பாடசாலைகளில் படித்தார்கள், 1,50,000 பிள்ளைகள் படிப்பு வாசனையின்றி இருந்தார்கள்.

அக்காலத்தில் நாட்டில் 5145 பாடசாலைகளில் 6,31,000 பிள்ளைகள் பயின்று வந்தார்கள். அவர்களை18,121 ஆசிரியர்கள் பயிற்றி வந்தார்கள். இதை இராசரத்தினம் அவர்கள் மேலும் விபரமாகக் கூறியபோது அரசினர் பாடசாலைகள் 1560, பிள்ளைகள் 2,26,000. இன அடிப்படையில் கணித்த போது, சிங்களப் பாடசாலைகள் 1267, பிள்ளைகள் 1,95,000. தமிழ்ப் பாடசாலைகள் 185, பிள்ளைகள் 17,000. துவிபாஷா பாடசாலைகள் 53. துவிபாஷா பாடசாலைகள் சிங்களவர்கள் மத்தியில் ஆங்கிலமும் சிங்களமும் தமிழர் மத்தியில் ஆங்கிலமும் தமிழும் என இருமொழிப்பாடசாலைகளாம். இங்கே 12,500 பிள்ளைகள் பயின்றார்கள். இனி உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் 2652, பிள்ளைகள் 3,68,500, இன அடிப்படையில் பார்க்கும் போது சிங்களப் பாடசாலைகள் 1106, பிள்ளை 1,94,000, தமிழ்ப் பாடசாலைகள் 585, பிள்ளைகள் 65,000. தோட்டப் பாடசாலைகள் 578, பிள்ளைகள் 34,500, துவிபாஷா பாடசாலைகள் 295, பிள்ளைகள் 68,000. பௌத்த பிரிவேனுக்கள் 48, பிள்ளைகள் 4000, நன்கொடை பெருப்பாடசாலைகள் 933, பிள்ளைகள் 36,000. இவை இன அடிப்படையில் சிங்களம் 121, பிள்ளைகள் 8000, தமிழ் 145, பிள்ளைகள் 5000, குருன் பாடசாலைகள் 277, பிள்ளைகள் 13,000, பர்ணசாலைகள் 241, பிள்ளைகள் 2,500.

இனி சமய அடிப்படையில் பார்க்கும் போது, புரட்டஸ்தன் பாடசாலைகள் 682, பிள்ளைகள் 16,500 இவர்களுள் வேறு மதத்தவர் 78,500, இவர்கள் பெற்ற நன்கொடை 18,18,500. ரூபா. இவ்வாறே ரோமன் கத்தோலிக்க பாடசாலைகள் 591, பிள்ளைகள் 69,000. வேறுமதத்வர்கள் 2000. பெற்ற நன்கொடை 19,17,000. ரூபா.

இனி பௌத்தரின் கல்வி நிலையில் 61 வீதத்தினராய குடி சனங்களின் 3,85, 000 பிள்ளைகள் 261 பாடசாலைகளில் படித்தவாறு பெற்ற நன்கொடை 8, 75, 000 ரூபாவாகும். இவ்வாறே குடிசனத்தில் 7 வீதத்திரான முஸ்லிம்களின் பிள்ளைகளுள் 2 500 பிள்ளைகளே தங்கள் மதம் சார்ந்த 14 பாடசாலைகளில் பயின்று 50,000 ரூபா நன்கொடை பெற்றனர்.

சைவப்பிள்ளைகளுள் 28,000 குழந்தைகள் சைவச் சூழலிற் கல்வி பெறும்போது, 10, 000 பிள்ளைகள் சைவவித்தியாவிருத்திச் சங்கப் பாடசாலைகளில் பயின்றார்கள். இன்னும் 26,000 பிள்ளைகள் பிரத்தியேக பாடசாலைகளிலும் அரசினர் பாடசாலைகளிலும் பயின்றார்கள். இன்னும் பலர் பாடசாலைகளை அறியாமலே வீட்டில் இருக்கிறார்கள்.

இத்தகைய தகவல்களை இராசர் துருவியாராய்ந்து தேடித்தொகுத்து நிலைமையை எடுத்துக்காட்டியமை அவரின் அறிவாற்றலை எடுத்துக் காட்டும். நிரந்தரக் காரியதரிசிகளாவோர் அரிதின் முயன்று தமது மந்திரிகளுக்குத் தகவல் தொகுக்கும் வகையில் இவர் இவற்றைப் பொது மக்களுக்குத் தொகுத்துக் காட்டினார். இது உண்மையை உணரவைப்பதற்காகவேயாம்

### ரி. முத்துக்குமாரு அவர்கள் செய்த ஆய்வு

முன்னர் இராசரத்தினம் அவர்கள் திரட்டி வெளியிட்ட விபரங்கள் ஒரு சிலர் மத்தியில் மனக் கொதிப்பை உண்டாக்கி விட்டன. அவ்வேளையில் தில்லையம்பலம் முத்துக்குமாரு என்னும் ஆசிரியர் தாமே முயன்று ஒரு ஆய்வினை வெளியிட்டார். அவர் ஆங்கிலம், லத்தீன், வரலாறு ஆகிய துறைகளில் வல்லவரும், பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராயிருந்து பின் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபரானவருமாவர்.

கல்வி மனிதரை உருவாக்கப் பயன்தந்து, பிள்ளைகளின் இயல்பான அறிவாற்றலை நாட்டின் நன்மைக்குப் பயன்தரச் செய்வதோடு, உலக அமைதிக்கும், சமாதான சகசீவனத்துக்கும்வழி காண்பிப்பதுமாகும். இன்னும் ஒவ்வொரு இனமும் சுதந்திரமாகவும் அமைதியாகவும் மனமகிழ்ச்சியாகவும் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழி காட்டுவதுமாகும்.

நாங்கள் நானூறுண்டுகள் பிற நாட்டவர்களின் பிடிகளிலிருந்து ஒருவாறு விலகிவரும் வேளையில், இங்கிலாந்தின் நாற்று மேடைகளிலிருந்து பெயர்த்து வந்த கல்விச்செடிகளின் சூழலில் இறுக்கமாக அகப்பட்டுள்ளோம். அமெரிக்க ஐரோப்பிய மிசனரிமார் இலங்கைப் பிள்ளைகளின் கல்விக்கண் திறமைக்கு நன்றியுள்ளவர்களாயிருப்பதோடு நாம் நடு நிலைமையையும் ஆராய்தல் வேண்டும்.

இன்று இலங்கையில் படிப்பாற்றல்பற்றுக் குறையாகவே நிலவுகின்றது. கட்டாய ஆரம்பக்கல்வியோடு ஆங்கிலக்கல்வியும் ஊட்டப் பெற்று வருகின்ற இலங்கையில் உலகத்தை உய்விக்கத்தக்க தலைவன் இன்னும் முன்வரவில்லை.

இதற்குப் பெரியார் சி எவ் அன்றூஸ் அவர்களைப்போன்ற சேவையாளர் இலங்கையில் பணி புரியவில்லை எனலாம். இன்னும் நம்மவர் பலர் கண்ட பாவனையிற் கொண்டை முடித்துப் பிஞ்சுள்ளம் கொண்ட பாலர்களை, பப்பா, மம்மி, டடி, அன்றி சொல்லிக்கொடுத்துப் பழக்கி வந்தால் எம் பண்பாடு பறிமுதலாகப் போகாமல் என்னவாகும். ஆளும் ஆங்கிலேயருக்கு நாம் அடிவருடிகளாவோம்.

இத்தகைய பாவனைகளைக் கைவிட்டுப் பிள்ளைகளின் இயற்கை அறிவாற்றலை வளர்த்து அபிவிருத்தி செய்வதற்குத்தக்க முறையில் கல்வி நீர்பாய்ச்சுதல் கடமையாகும். வாழ்வை வளம்படுத்தும் வழியில் நடத்த வேண்டும்.

தாய்மொழிக் கல்வியில் அமைந்த போதிலும் ஆரம்ப நிலை, கனிஷ்டநிலை, சிரேட்ட நிலைகளில் ஆங்கிலப் பாணியில் கல்வி கற்பித்தால் எங்கள் கலாசாரம் விளைந்து வீடு வந்து சேராது. துடுப்பில்லாமல் ஓடம் விட்ட வழியில் வாழ்க்கைப் படகு போனுல் குறிக்கோளில்லாது கெட்டேன் என்ற முறையிலேதான் சேர வேண்டிவரும்.

சிந்தனையாளர் ஒன்று கூடிப் பழைய சிங்கள, தமிழ்க்கல்வி கலாசார முறைகளுக்கு அனுகூலமாகப் படிப்பிக்கத்தக்க பாடசாலைகளை நடத்துதல் இன்றியமையாததாகும். குழந்தைகள் வகுப்புகள், ஆரம்ப வகுப்புகள், கனிஷ்ட வகுப்புகள், சிரேட்ட வகுப்புகள் யாவும் சீராயமைதல் சிறப்பாகும். இதற்கு முதற்படியாகச் சிங்கள, தமிழ் ஆசிரியர்களின் செல்வாக்கு ஆங்கில ஆசிரியரின் கௌரவத்துக்கு இணையாக உயர வேண்டும்.

இன்னும் இன்று நிலவும் துவிபாஷா பாடசாலைகள் இன்னும் பெருகி திரிபாஷா பாடசாலைகளாகி சிங்களம், தமிழ், ஆங்கிலம் கற்பித்துத் தேசிய ஒற்றுமைக்கும், பரஸ்பர நல்லெண்ணம், மரியாதை என்றித் திறந்த நற்பண்புகள் முளை கொள்ள வித்திடல் வேண்டும், சிங்கள ஆசிரியர்களுக்கும் தமிழாசிரியர்களுக்குமிடையில் சகோதரத்துவ முறையில் ஆசிரியத்துவம் என்னும் அடிப்படையில் இறுக்கமான பிணைப்பு உண்டாகுதல் வேண்டும்.

ஆசிரியர்களை வழிகாட்டிகளாகக் கொண்டு பாடசாலைகளை மையங்களாகக் கொண்டு சனசமுதாய நிலையங்கள் கால் கொண்டு, சமூகப்பணி புரிதல் வேண்டும். இத்தகைய சமுதாய வாழ்வில் நல்லவை, சரியானவை, உண்மையானவை, உறுதியானவை, உயர்ந்தவை, உகந்தவை எவையெனக் கண்டு கைக்கொள்ள வசதியளித்தல் வேண்டும். வாழ்வு மலர்தல் வேண்டும் அதற்குப் பன்முகப்பணி செய்வதற்கு, சைவம் பரப்பத் துறவு பூண்ட சந்நியாசிகள், சைவக் குருமார் பலவிடங்களிலும் தோன்றிப் பணியாற்றுதல் வேண்டும். அவர்கள் சின்னஞ் சிறிய குடியிருப்புகளிலிருந்து, பென்னம் பெரியசிந்தனைகளைஒளி வீசச்செய்யலாம்

இங்ஙனமெல்லாம் சிந்தித்துப்பார்க்கும்போது, சைவ வித்தியாவிருத்திச் சங்கம் சரியான வழியிலே உருவாகி வளர்ந்து முறையான வழியிலே முயன்று முழுமூச்சாகப் பணிசெய்கின்றது என்று சொல்லவேண்டும். தேசிய முறையில் சனநாயக அடிப்படையில், முகாமையாளர் அயரா அன்பில் அரும்பணி புரிகின்றார். இலங்கையன் ஒருவன் மீது படிந்துள்ள தூசினைத் துடைத்தால், அவனை ஒரு மன்னனுகக் காணலாம். பௌத்தர்களும், சைவர்களும் இலங்கையெங்கும் பாடசாலைகளால் பாலம் அமைத்தல் வேண்டும். தனிப்பட்டவர் பாடசாலைகள் சங்கப் பாடசாலைகளோடு இணைதல்வேண்டும். நல்ல முறையில் நாம் செயற்பட்டு இணைந்தால் நாம் பிரித்தானிய பொதுநலவாயத்தில் சமவுரிமையுள்ள சுதந்திரப்பறவைகளாய் வாழலாம். திருவாளர் தி. முத்துக்குமாரு அவர்கள் இலங்கைப் பொதுநலவாயத்தை அண்டுவதற்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே இதனை எழுதினுர் என்றுல் அவரின் தீர்க்க தரிசனத்தை என்னென்பது?

திரு. முத்துக்குமாரு அவர்களுக்கு சுவாமி விவேகானந்தர் மீது அதிகபற்று. அவர் வழியில் செயலாற்றத் துடித்த இளைஞர்களுள் அவரும் ஒருவர். அவர் கொண்ட கருத்துப்பலம் பெரிது. அவர் தம் கருத்தை வெளியிட்ட போது, நண்பர்கள் சிலர் அவர் பகற்கனு காண்பவர் என நையாண்டி செய்ததும் உண்டு. ஆனுல் அவர் செயல் வீரனுகவே இருந்து தொண்டு செய்து புகழ்பெற்றுர். அவரின் தமையனுரே சிதம்பரம் ஆறுமுகநாவலர் தர்மபாலகராயிருந்த திரு. இராசநாயகம் அவர்களாவர்.

### ஒரு சோதனைக் காலம்

இவ்வாறுக 1930 ஆண்டுக்கு முன் பின்னுக இராசரத்தினம் அவர்களுக்கு ஒரு சோதனைக்காலம் உண்டாயது. பலர் சேர்ந்து தொண்டு செய்யும் துறையில் அபிப்பிராய பேதம் உண்டாதல் வழக்கம். இந்த வகையில் இராசரத்தினம் அவர்கள் அன்றெழுந்த சமபோசனம், சமாசனம் ஆகிய விடயங்களில் பங்கெடுத்தார் என்று சிலர் குற்றஞ்சாட்டினர். அதற்கு இராசரத்தினம் அவர்கள் அன்றைய உள்ளூர்ச் சைவவார இதழ் ஒன்றில் பதில் எழுதியதோடு, புங்குடுதீவுச் சைவ வித்தியாசாலைப் பரிசளிப்பு விழாவில் தலைமை தாங்கிப் பேசிய போதும் குறிப்பிட்டார்.

புங்குடுதீவில் திரு. பசுபதிப்பிள்ளை அவர்கள் ஒரு வீரன் என்றும், அவ்வூரவர் அவ்வித்தியாசாலையை 1915 முதல் 1925 வரை அரசினர் உதவி பெறுமல் நடத்திவந்தார்கள் என்றும் பாராட்டினர். பின்னர் சமபோசனம் சம்பந்தமாக அவர் பேசிய போது, ஒரு கோபுரத்தின் கீழ் நிற்பவர் ஒருவர் ஒரேமுறையில் தாவி உச்சியை அடைய முடியாது என்றுர். எதுவும் படிப்படியாகவே நடைபெறுதல் வேண்டும் என்பதை விளக்கி, முதலில் சுத்தம், தூய்மை பிரதானமானவை என்றுர். அன்றைய முற்போக்கு இளைஞர்களின் தீவிர நடவடிக்கையைப் பற்றிப் பேசியபோது, புத்தியுள்ள பாகன் யானையின் போக்கில் சென்று, அதைப் பழக்கித் திருத்தும் வழக்கத்தைக் குறிப்பிட்டார். தாம் இளைஞர்களின் போக்குக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல், சேர்ந்து நிலைமையைச் சீராக்க முனைந்தத போது, சைவாசிரிய கலாசாலை மாணவர் விடுதிக் கொட்டில் ஆள்வாரிலி மாடுகள் போன்று விஷமிகளால் கொழுத்தப்பட்டது என்றுர். அன்றி வழிப் பாதைகளைத் தடுப்புகளால் மறித்தும், கிணற்றில் ஆசிரிய மாணுக்கர்கள் நீர் அள்ள முடியாது தடுத்தும் இடையூறு செய்தனர் என்றுர். முன்ஞெருநாள் நடைபெற்ற கூட்டமொன்றில் அக்காலத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் என வழங்கியவர்கள் நன்றுக நீராடித் தூய்மையாகி, வெண்ணீறணிந்து வந்திருந்த போதிலும் தாங்களாகவே ஒதுங்கி ஒரு மூலையில் இருந்தார்கள் என்றும் கூறினுர்.

இவ்வாறுகச் சூழ்நிலை நிலவியபோதுதான். இரண்டாம் நாள் கூட்டம் இளைஞர்களால் 'நிஜவே' மண்டபத்தில்நடைபெற நேர்ந்தது. சைவாசிரிய கலாசாலை இரண்டு வாரம் விடுதலை வழங்கப்பெற்று நிலைமை சீராயது. இதற்குள் இராசரத்தினம் அவர்கள் ஊரவர்களைக்கண்டு உரையாடி விளக்கியபோது, அவர்களும் அங்கு நடைபெற்ற துன்ப நிகழ்ச்சி யாரோ தூண்டிவிட்டதால் நடந்ததாகலாம் எனப் பச்சாதாபபட்டனர். தங்களைக்கேளாமல் அங்கே இளைஞர் மாநாடு கூடுவதற்கு இராசரத்தினம் அவர்கள் இடங்கொடுத்தமை குற்றம் என்றனர். அவர்களுள் சிலர் கண்டு முட்டு என்பதில் நம்பிக்கை உள்ளவர்கள். அஃதாவது ஆசாரம் இல்லாதவர்களைக் கண்டாலே ஆசௌசம் எனக்கருதிய வரட்டு ஆசாரசிலர்கள். அவர்களின் கொள்கை நித்தியா சௌசாவாசிகள் என ஒரு சமூகத்தவர் இருந்தார்களென்பதேயாம். அவர்களே ஒரு சமூகத்தவரை நிலத்தில் இருத்தாமல் சமாசனம் கொடுக்காமல் தனியாசனம் கொடுக்குமாறு ஆலோசனை வழங்கியவர்கள். முன்ஞெரு காலத்தில் நிலத்திலிருந்து படித்தவர்கள், நித்திரை தூங்கிச்சரிந்துவாங்கிலில் இருந்து படித்தவர்களின் முழங்காலில் முட்டியபோது தீண்டப்பட்டவர்களே தனியாசனம் அமைக்கச் சொன்னார்கள். இது இராசரத்தினம் அவர்கள் நகைச்சுவையாகக் கூறிய ஓர் அனுபவம். எனவே சமாசனமில்லாமல் அதாவது ஏகாசனம் இல்லாமல் சரியாசனமான தனியாசனம் கொடுத்தாயினும் நிலைமையைச் சமாளிக்கலாம் என்றவர்களும் இருந்தார்கள்.

இவ்வாறுகப் பேசிய இராசரதத்தினம் அவர்கள் அன்று பத்திரிகைகளில் எழுதிய விளக்கங்கள் நல்ல தமிழில் ஆற்றேட்டம்போல அமைந்தமையோடு, தர்க்கரீதியில் தகர்க்க முடியாத் தன்மையில் அமைந்தனவாயிருப்பக் காண அன்னாரின் தனியாற்றலைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இதனுல் அவர் கூறியவை வேதவாக்கு என்றே அவர் பரப்பிரமம் என்றே கருதல் நோக்கல்ல. அவர் காலப்போக்கில் மாறியமையும் சமூகஅமைப்பைத் தீர்க்கதரிசனமாக முன்னோடியாகக்கண்டுசிக்கல்களைத் தவிர்த்தநுண்ணறிவினர் எனலாம்.

(தொடரும்)

## விலங்குகள் விதம் விதம்: 17

# ராஜ நாகம்

நாகத்தில் பறநாகம், கருநாகம், ஒற்றைவளைய நாகம், இரட்டை வளைய நாகம் ராஜநாகம் எனஐந்துவகை உண்டு. இவற்றில் மேற்குறிப்பிட்ட நான்கும் ஓரினமாகும். ராஜநாகம் மட்டும் தனி இனமாகும்.

ராஜ நாகத்தை பொதுவாக அடர்ந்த காடுகளிலேயே காணமுடியும். 18 அடி4அங்குலம் வரையான நீளமுள்ளவை ராஜநாகங்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. நாக இனங்களில் ராஜநாகத்திற்கு மட்டும் நாமம் இருப்பதில்லை.

காடுகளில் வாழும் ராஜநாகம் பாம்புகளையே உண்ணும் கொடிய குணம் கொண்டது. பசியான வேளைகளில் உண்பதற்கு பிறபாம்புகளைத் தேடிச் செல்லும்.

இது தான் துன்புறுத்தப்படவில்லையென்றால் கூட மனிதர்களை பார்த்தவுடன் தாக்கும் திறன் கொண்டது இதன் விஷம் அவ்வளவு கொடியது அல்ல. இதன் விஷம் மனிதர்களை கொல்லும் தன்மையை குறைவாகக் கொண்டிருந்தாலும், அது தீண்டும் போது மிக அதிக விஷத்தை ஒரே வேளையில் செலுத்துவதால் மனிதனுக்கு 15முதல் 20 நிமிடங்கள் வரையில் மரணம் ஏற்பட்டுவிடும்.

பெண் ராஜ நாகம் விசித்திர குணமுடையது. அது முட்டையிடுவதற்கு கட்டும் கூடுதான் விசித்திர மானது முட்டை இடுவதற்காக பெண் ராஜநாகம் வாலால்மண்ணைத்திரட்டிக் குவிக்கும் அந்தக்குவியலில் பொந்து ஏற்படுத்தி அதன் மேல் இலைதழைகளை பரப்பி முட்டையிடும். இது தழை சேகரிக்க செய்யும் முயற்சிகளைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக இருக்கும். காட்டில் சிதறிக் கிடக்கும் இலை தழைகளை பார்த்ததும் வாலைச்சுருட்டி அதனுள் இலை தழைகளை வைத்துக் கொண்டு கூடு நோக்கிச் செல்வதைப் பார்த்தால் பரிதாபமாகத்தானே இருக்கும்.

இது தான் இட்ட முட்டைகள் மீது படுத்துக் கொள்ளும். அடை காக்கத் தான் படுக்கும் பெண் ராஜநாகம்ஒரே நாளில் 51 முட்டைகளை இடும். முட்டையில் இருந்து குட்டிகள் வர 10 முதல் 15 வாரங்கள் எடுக்கின்றன.

தி. தவபாலன்

---

## அப்படி எழுதாதீர்கள் — இப்படி எழுதுங்கள்

| அப்படி எழுதாதீர்கள் | | இப்படி எழுதுங்கள் |
|---|---|---|
| தேனீர் | — | தேநீர் |
| கோர்வை | — | கோவை |
| அருகாமை | — | அருகில் |
| ஐநூறு | — | ஐந்நூறு |
| இருபத்திநான்கு | — | இருபத்துநான்கு |
| புடவை | — | புடைவை |
| எண்ணை | — | எண்ணெய் |
| நாகரீகம் | — | நாகரிகம் |
| வாழ்த்துகள் | — | வாழ்த்துக்கள் |
| கலாச் சாரம் | — | கலாசாரம் |

---

## முரசொலி பூந்தோட்டம்
### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்: ........................................

வயது: ........................................

பாடசாலையின் பெயர்: ........................................

கல்விகற்கும் வகுப்பு: ........................................

வீட்டு முகவரி: ........................................

கையொப்பம்: ........................................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

.................... திகதி

.................... பெற்றோர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினான்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றாக நிரப்பி அனுப்ப வேண்டும்)

---




## குரும்பைத் தேர்

நான் குரும்பைஐந்து நண்பா கொண்டுவந்தேன்
நல்லஈர்க்கு எட்டுக் கொண்டு வாரும்
ஏனெனில் இன்றைக்குத் தேரொன்று செய்துமே
இழுத்து விளையாடி இன்புறு வோம்

பூக்கள்கொண்டுவாரும்பொலிவாகச்-சூட்டுவோம்
பூதனும் நாதனும் மேள தாளம்
பாக்குடன் வெற்றிலை பழவகை வைத்துமே
பண்பாகப் பூசனை செய்திடுவோம்

வெள்ளை சிவப்பு நிறக் கடதாசிகள்
விளங்கிட ஒட்டி அமைத்துள தேர்
கொள்ளை அழகு கொடுக்குது பாருங்கள்
பிள்ளைகளே ஓடி வாருங்களே

பாலனும் வேலனும் பாட்டுக்கள் பாடுங்கள்
பசுபதி ஆனந்தக் கூத்தை ஆடும்
பாலரே சாமியைப்பார்த்து வணங்கிடப்
பாய்ந்து வாரும் தேர்போய்விடுமே

விழிசைக்குயில்

---

## சுதந்திரதினங்கள்

| | | |
|---|---|---|
| அமெரிக்கா | — | ஆடி மாதம் 4-ம் திகதி |
| இலங்கை | — | மாசி மாதம் 4-ம் திகதி |
| இத்தாலி | — | பங்குனி மாதம்–26 ம் திகதி |
| இந்தியா | — | ஆவணி மாதம் 15-ம் திகதி |
| இந்தோனேசியா | — | ஆவணி மாதம் 17-ம் திகதி |
| கனடா | — | ஆடி மாதம் 1-ம் திகதி |
| சீனு | — | ஐப்பசி மாதம் 10-ம் திகதி |
| பிரான்ஸ் | — | ஆடி மாதம் 14-ம் திகதி |
| நோர்வே | — | வைகாசி மாதம் 17-ம் திகதி |
| ஜப்பான் | — | சித்திரை மாதம் 29-ம் திகதி |

சே. தயாளினி
அங்கத்தவர் இல: 125

---

## பூந்தோட்டம் அங்கத்தவர்கள்

இலக்கம் 191 அருமைநாயகம் அனற் அனுஜா
வயது 09, புனித திரேசா மகளிர் கல்லூரி, அச்சுவேலி

இலக்கம் 192 தே. மேரி அனிற்ரு பிரான்
வயது 13, புனித மரியாள் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்

இலக்கம் 193 கிறிஸ்ணபிள்ளை விஷ்ணுவர்த்தன்
வயது 13, விக்கினேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி

இலக்கம் 194 சக்தி சிவானந்தன்
வயது 09, ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப்பாணம்

இலக்கம் 195 ஞானசிலன் அமலன்
வயது 08, ட்றிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி

இலக்கம் 196 அனிஸ்ரன் ஸ்ரனிஸ்லோஸ்
வயது 08, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்

இலக்கம் 197 நடராசா குகானந்தராசா
வயது 11, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, வண்ணார்பண்ணை

இலக்கம் 198 பரமசீலன் கைலாசபிள்ளை
வயது 13, சாவகச்சேரி இந்துக் கல்லூரி,

இலக்கம் 199 தம்பையா தயாபரன்
வயது 12, ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை

இலக்கம் 200 இலாயீஷா இராசநாயகம்
வயது 11, சந்திரோதய வித்தியாலயம், உரும்பராய்

---

### விஞ்ஞானக் கதை

## நண்பர் இருவர்

விடை பெற்றுக் கொண்டிருந்த நித்திராதேவியை வலுக்கட்டாயமாய்ப் பிடித்திழுத்துவைத்துக் கொண்டு தூங்கிப் பார்த்தது கரடி.

கரிய இருளில் தனித்து நிற்கும் இயற்கைக் கன்னி, காட்டுக் கன்னி,கரடி வேறு அரவம் இல்லை.

காட்டுமல்லிகை மணத்தைச் சுமந்து வந்த காற்று முகத்தில் ஸ்பரிசித்ததும் கண்ணைத்திறந்து கொண்டது.

தனது கால்களை நீட்டி நக்கிக்கொண்டது.

மிகவும் கட்டையான கால்கள்.

''இந்தக் கால்கள் மட்டும் நீட்டாக இருந்தால் நான் காடு முழுவதும் ஓடித் திரிந்து எத்தனை தேன் கூடுகளைக் கண்டுபிடித்தவிடுவேன் சே சே ..''

என்று தனக்குள் கூறிக் கொண்டு மெதுவாக எழுந்து ... அந்தக் காட்டில் ஒரு எல்லைப்புற மரத்தின் கீழ் குந்திக் கொண்டது.

''நண்பன் வருவான்'' என்ற நம்பிக்கை அதன் முகத்தில் தெரிந்தது.

விடிகாலைப் பொழுதில் காட்டில் பறந்து திரிந்து தேன்கூடு ஒன்றைக் கண்டுகொண்ட தேன் வழி காட்டிக் குருவி, கரடி காவல் இருந்த இடத்தை அடைந்தது.

தானே தேன் கூட்டைக் கலைத்து நூற்றுக்கணக்கான தேனீக்கள் கொட்டும் பெருந்தாக்குதலைப் 'புத்திசாலித்தனமாகத் தவிர்த்துக் கொண்ட குருவி கரடியைக் காட்டுக்கு அழைத்துச் சென்றது.

சிறு குருவிதான்; ஆனால் பெரிய மூளை.

குருவி காட்டிய பாதையில் நேரே சென்ற கரடி தேன் கூட்டைத் தாக்கி அழித்து வயிறு முட்டத் தேன் குடித்தது.

தேன் என்றால் கரடிக்குக் ''கெடு''!

அதனுடைய தடித்த தோலும், மயிரும் தேனீக்களின் கொட்டுதலைத் தாங்கிக் கொள்ளும்.

இவ்வளவும் நடக்கும் வரை பொறுமையாகக் காத்திருந்த குருவி, எல்லாம் முடிந்தபின்னர்,

கூட்டிலிருந்து கீழே விழுந்த தேனீக்குடம்பிகளை ஆசை தீரத் தின்றுமுடித்தது.

''என் அருமை நண்பா... என் சிறிய நண்பா. நாளைக்கும் வருவாயா என்னிடம்?'' என்று கேட்டது கரடி.

''நிச்சயமாய் எப்போதும் நான் உன்னிடம் வருவேன். நாங்கள் என்ன மனிதர்களா? சுயநல எண்ணம் கொண்டு பிரிந்து போக... ?''என்று கேட்டுச் சிரித்தபடியே 'விசுக்' கென்று பறந்துபோனது குருவி.

★ பிரவீன்ஸ்

# விளையாட்டு மைதானம்

# ஒலிம்பிக் தங்கத்தை இழந்த ஜோன்சன் மீது விசாரணை

வி.என்.எஸ். உதயசந்திரன்

கனடிய ஓட்ட வீரரான பென் ஜோன்சன் மீதான போதைவஸ்து பாவனை குற்றச்சாட்டுப் பற்றிய கனடிய அரசாங்கத்தின் பகிரங்க விசாரணை கடந்த பதினொராந் திகதி முதல் டொரன்டோ நகரில் நடைபெற்று வருகின்றது.

கடந்த நவம்பர் மாதம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் விசாரணைகளை கனடிய ரோயல் விசாரணைக் குழு உடனடியாக ஒத்திவைத்திருந்தது.

ஒன்டாரியோ நகரின் பிரதம நீதியரசன் சார்ள்ஸ் டூபின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள கனடிய ரோயல் விசாரணைக்குழு பென் ஜோன்சன் விவகாரத்தை மட்டுமன்றி கனடிய விளையாட்டுலகில் நிலவும் போதைவஸ்து பாவனை தொடர்பாகவும் பொதுவாக விசாரணை செய்யவிருக்கின்றது.

மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் விசாரணைகள் ஒரு வருட காலத்துக்கு நடைபெறும் என்றும் விசாரணைக்காக பல லட்சம் டாலர்கள் செலவாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## முதல்விசாரணை

முதல் நாள் விசாரணையின் போது கனடிய விளையாட்டுத் துறை அமைச்சின் பிரதி அமைச்சர் கீல் மகோஸ்கி இந்த ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தார். கனடாவில் உள்ள விளையாட்டுத் துறை சம்மேளனங்கள் பற்றியும், ஒலிம்பிக் கமிட்டியின் பங்குபற்றியும் அவர் ஆணைக்குழு முன்பாக விளக்கமளித்தார்.

விசாரணைகள் ஆரம்பமான அன்று பென்ஜோன்சன் அவரது பயிற்சியாளர் சார்ளி பிரான்சிஸ், மருத்துவர் ஆஸ்த பென் ஆகியோரின் சட்டத்தரணிகள் உட்பட பல்வேறு கனடிய விளையாட்டுச் சம்மேளனங்களின் சார்பாகவும் பல சட்டத்தரணிகள் விசாரணை மண்டபத்தில் சமுகமளித்திருந்தனர். சாட்சிகளை இவர்கள் குறுக்கு விசாரணை செய்ய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. தொடர்ந்தும் வழங்கப்படும்.

முதற்கட்ட விசாரணையின் போது பென்ஜோன்சன் விவகாரம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படமாட்டாது. முதற்கட்டத்தில் விஞ்ஞானிகள், அதிகாரிகள் கனடிய ஒலிம்பிக் அதிகாரிகள் உட்பட 9 சாட்சிகள் அழைக்கப்படுவார்கள்.

இதன் பின்னர் அடுத்த கட்ட விசாரணை மான்ட்றியல் நகரில் நடைபெறும். அங்கு கனடிய எடை தூக்கும் வீரர்களின் போதைவஸ்து பாவனை தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படும்.

சோல் ஒலிம்பிக் போட்டிக்குச் செல்லவிருந்த பாரம் தூக்கும் வீரர்களில் நால்வர் போதைப் பொருள் பாவனை காரணமாக அணியில் இருந்து நீக்கப்பட்டமை வாசகர்கள் அறிந்ததே. இவ் விவகாரம் பற்றி ஆணைக்குழு சாட்சியங்களைப் பதிவு செய்யும்.

மூன்றுவது கட்ட விசாரணை பெப்ரவரி இருபதாந் திகதி டொரன்டோநகரில் மைதான ஆட்டங்கள் தொடர்பாக ஆரம்பிக்கப்படும். இவ்விசாரணைகளின் போதே இவ் விசாரணைகளின் முக்கிய சாட்சியான பென் ஜோன்சனும் அவரைச் சேர்ந்தவர்களும் சாட்சியளிக்கும்படி அழைக்கப்படுவார்கள்.

## தலைவரின்கருத்து

கடந்த பதினோராந் திகதி விசாரணைகள் ஆரம்பமான போது விசாரணைக் குழுவின் தலைவர் சார்ள்ஸ் டூபின் போதைப் பொருள் பாவனையும், தடை செய்யப்பட்டுள்ள நடவடிக்கைகள் பின்பற்றப்படுவதும் விளையாட்டுத் துறையின் அடிப்படையையே அழித்துவிடும் என்று கூறியதோடு போதுமான சாட்சியங்கள் இன்றி எந்த முடிவிற்கும் வரமுடியாது என்று கூறியுள்ள இவர் தமது விசாரணைகளின் பெறுபேறுகள் அவுஸ்திரேலியாவிலும் ஐரோப்பாவிலும் நடைபெறும் இதே போன்று விசாரணைகளின் பெறுபேறுகளோடு பரிமாற்றம் செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

சோல் 100 மீற்றர் ஓட்டப் போட்டியின் போது தங்கப் பதக்கத்தை இழந்த பென் ஜோன்சன் தெரிந்து தான் ஒரு போதும் போதைப் பொருட்களைப் பாவித்ததில்லை என்று கூறியுள்ளார்.

இப்போது இரண்டு வருட தடைக்குள்ளாகியிருக்கும் பென்ஜோன்சன் இவ்விவகாரம் காரணமாக பல லட்சம் டாலர்கள் வருமானத்தை இழந்துள்ளார்.

கனடிய அரசின் விசாரணைகளின் போது பென்ஜோன்சனின் டாக்டர் அஸ்தபென், பயிற்சியாளர் சார்ளி பிரான்சிஸ், கார்ல் லூயிஸ் கனடிய ஓட்ட வீராங்கனை ஏன்ஜலா இஸஜென்கோ ஆகியோரும் சாட்சியமளிப்பார்கள்.

## அரசே தரவேண்டும்

பென்ஜோன்சனின்டாக்டர் அஸ்தபென் இவ்விசாரணையில் சாட்சியமளிக்க தனக்கு இரண்டு லட்சத்தில் இருந்து ஐந்து லட்சம் டாலர்கள்வரை செலவாகலாம் என தான் கருதுவதால் விசாரணைக்கான செலவுகளை அரசாங்கம் ஏற்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த டாக்டர் மீது ஏற்கனவே ஒன்டாரியோ மருத்துவக் கல்லூரி விசாரணை நடத்தி வருகின்றது. இதே சமயம் 'ஸ்டர்லிஸ்' என்ற மருந்து விற்பனை நிலையம் தாம் 'ஸ்டனேசொலோஸ்' என்ற போதை மருந்தை அஸதபென்னுக்கு விற்பனை செய்துள்ளதாக தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பென் ஜோன்சனின் சிறுநீரில் இப் போதைப்பொருளே காணப்பட்டது. இதே சமயம் பென் ஜோன்சனின் பயிற்சியாளர் சார்லி பிரான்சிஸ் சோல் மருத்துவ பரிசோதனை வேண்டுமென்றே பென்னுக்கு எதிராகத் திரிக்கப்பட்டது என்று குற்றஞ்சாட்டியுள்ளார். இக் கருத்தை ஒலிம்பிக் கமிட்டி மறுத்துள்ளது.

கனடிய விளையாட்டுத்துறை சங்கம் இவர் மீது ஏற்கனவே தடைவிதித்துள்ள போதிலும் இவர் தொடர்ந்தும் சம்பளம் பெற்று வருகின்றார்.

## அமெரிக்க வீரரும் விசாரணை

அமெரிக்க வீரர் கார்ல் லூயிசும் விசாரணையின்போது சாட்சியமளிக்க அழைக்கப்படுவார் என கனடாவிலிருந்து இறுதியாகக் கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

1987 ஆம் ஆண்டு ரோமில் நடைபெற்ற உலக விளையாட்டுப் போட்டியின்போது பென் ஜோன்சனின் போதைவஸ்து பாவனை தொடர்பாக இவர் எவ்வாறான தகவல்களைத் தெரிவித்திருந்தார் என்பது பற்றி கார்ல்லூயிசிடம் கேட்கப்படும் என தெரியவருகின்றது

இப் போட்டியின் போது கார்ல் லூயிசைத் தோற்கடித்த பென் ஜோன்சன் 9.38 வினாடிகள் என்ற உலக சாதனையை நூறு மீற்றர் ஓட்டத்தில் நிகழ்த்தினார். இச் சாதனை இதுவரை முறியடிக்கப்படவில்லை ஆனால் இப் போட்டியின் போது பென் ஜோன்சன் போதைவஸ்து பரிசோதனையில் தேறியிருந்தார்.

## வீராங்கனையின் தகவல்

கனடிய ஓட்ட வீராங்கனை ஏன்ஜலா தானும் பென் ஜோன்சனும் போதைப் பொருள்களைப் பாவிப்பது உண்மை டாக்டர் இஸ்தபென்னே இவற்றை தமக்கு வழங்கி வந்தார் என்றும் பயிற்சியாளர் சார்ளி இது பற்றி அறிந்திருந்ததாகவும் 1988 அக்டோபர் மாதம் 'டொரன்டோ' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

ஏனையோரை சம்பந்தப்படுத்தாமல் பென்னே தான் செய்ததை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் இவர் அப் பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பாகவே ஏன்ஜலா விசாரணைக் குழுவின் முன்பாக சாட்சியம் அளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளார்.

இதே சமயம் சோல் ஒலிம்பிக் போட்டியின் மருத்துவக் குழுவும் தனது மருத்துவ அறிக்கையை விசாரணைகளின் போது பகிரங்கப்படுத்த விருக்கின்றது.

## வீராங்கனையின் குமுறல்

போதைப் பொருள் பாவனையில் ஈடுபடும் வீரர்களுக்கு அளிக்கப்படும் இரண்டு வருட தடைத் தண்டனை இப் பழக்கத்தைக் கட்டுப்படுத்த போதுமானதல்ல. அவ்வாறான வீரர்களை விளையாட்டு அரங்கில் இருந்தே முற்றாகத் தடை செய்ய வேண்டும் என அமெரிக்க நெடுந்தூர ஓட்ட வீராங்கனையான மேரி டெக்கர் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் பேசும்போது தெரிவித்துள்ளார்.

எட்டு வருடங்களுக்கு முன்னர் தனக்கு போதைப் பொருள் விநியோகிக்க முயற்சி நடைபெற்றதென்றும் ஆனால்தான் உடல் நலத்தில் அதிக அக்கறை கொண்டிருந்ததால் அதை ஏற்க முன் வரவில்லை என்றும் மேரிடெக்கர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் சோல் ஒலிம்பிக் போட்டியின் போது பென் ஜோன்சன் சிக்கிக் கொண்டது ஒரு சிறு சம்பவம் மட்டுமே. விளையாட்டுத்துறையில் போதைப் பொருள் பாவனை பரவலான முறையில் இடம் பெறுகின்றது.

## அதிகாரிகளின் அலட்சியம்

சோல் ஒலிம்பிக் போட்டியில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் அனைத்தும் சரியானவை என்று சொல்வதற்கில்லை. சிலர் போதைப் பொருள் உபயோகித்திருப்பது தெரிய வந்தும் கூட வேண்டுமென்றே அதிகாரிகள் அலட்சியமாக இருந்து விட்டனர்.

சோல் போட்டியில் வெற்றியீட்டி தங்கப் பதக்கம் பெற்ற சில வீரர்கள் சுய முயற்சியால் மட்டுமே வெற்றியீட்டினர் என்று சொல்வதற்கில்லை.

ஐரோப்பிய மட்டத்திலான போட்டிகளின்போது வீரர்கள் போதைப் பொருள் உட்கொண்டிருப்பது தெரிய வந்தாலும் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதாக இல்லை என்று கூறியுள்ளமேரி டெக்கர் சோல் ஒலிம்பிக்கின் போது மூவாயிரம் மீற்றர் மற்றும் ஆயிரத்துஐந்நூறு மீற்றர் ஓட்டங்களில் கலந்து கொண்டாலும் வெற்றி வாய்ப்பை தன தாக்கிக் கொள்ளத் தவறிவிட்டார்.

இது எப்படி இருப்பினும் இன்று உலக விளையாட்டு ரசிகர்கள் பென் ஜோன்சன் போதை வஸ்து விவகாரம் எப்படி முடியப் போகின்றது என்பதை அறிவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றார்கள்.

## இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டும்

"இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!" என்று பிரசாரம் செய்து வந்த சிங்கப்பூர் அரசு, இப்பொழுது "இரண்டுக்குப் பிறகு மூன்றுவது பெற்றுக் கொள்ளுங்கள்! மூன்றுக்கு மேலும் நல்லது" என்ற பிரசாரத்தில் தீவிரமாகஇறங்கியிருக்கிறது!

3 வது குழந்தைக்குப்பள்ளிக்கூடத்தில் சேரச் சலுகை கொடுக்கப்படும்! 3- வது குழந்தை பெற்ற பெற்றோர் குடியிருக்கப் பெரிய வீடு ஒதுக்கப்படும்! குழந்தையை வளர்க்க மாதம் ரூ 500 உதவிப் பணம் தரப்படும். வருமான வரிச் சலுகையும் உண்டு.


# ஆங்கிலம் பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நாமும் ஆங்கிலம் சரளமாக கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப் பயிற்சி. தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்,

**Bright Training Centre** இல் படித்த மாணவர்களின் கருத்து

* உங்கள் பாடத்திட்டம் இலகுவில் விளங்கி கற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.
செல்வி பவளமலர்
சிவன் கோவில் வீதி, உருத்திரபுரம்

* நான் படித்தவற்றில் இம் முறையே என் போன்றோருக்கு உகந்தது.
என். நந்தகுமார்
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி

* மூன்று மாத கால பயிற்சியை முடித்ததும் எனக்குள்ளே பெருமகிழ்ச்சி ஏற்படவைத்தது உங்களின் ஆங்கில கல்வி முறையே.
அலி - சப்றி
நீரோட்டமுனை, சினன்குடா

* இப்போது தாராளமாக ஆங்கிலம் பேசக்கூடியதாக உள்ளது. இதற்கான பாராட்டு "பிறைட் ரெயினிங் சென்டரை"ச் சாரும்.
ந. நகுலேஸ்வரன்
வைரவ புளியங்குளம், வவுனியா

* உங்கள் தபால் பாட வகுப்பில் சேர்ந்த எனக்கு உங்கள் பாடங்கள் நல்ல பலாபலனை அளித்துள்ளது.
செல்வி சத்தியதேவி
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்புகொள்க.

**BRIGHT TRAINING CENTRE**
P. O, Box 162, COLOMBO

02032

# இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர். ச. அரியநாயகம்

**05-02-89 -- 11 - 02 - 89 வரை**

**மேடம்:** பொன்னுபரண சேர்க்கை, விவாக நிச்சயம், வாகன லாபம், கடற்றொழிலாளர், வாணிபர்கள் லாபம், வெளிநாட்டு பணம் புதுமனை வாசம், வெளியூர் போனவர்கள் வருகை, புத்திரப்பேறு.

**இடபம்:** வாகன நஷ்டம், புதுத்தொழில், புண்ணியவழிபாடு, எண்ணியது நடக்காது, புத்திரரால் கவலை, வீண் செலவு, வணிகர்கள் சமபலன், இனசன உதவி, தடைப்பட்ட தொழில் கிடைக்கும்.

**மிதுனம்:** வாகனஇலாபம், இருதொழில், எண்ணியது நடக்கும், இராஜயோகம், புத்திரரால் நன்மை, மனை பூமியால் நன்மை, தடைப்பட்ட பணம் கிடைக்கும், தூரதேசம் போனவர் வருகை.

**கடகம்:** பொருள்பேறு, புண்ணிய வழி, இரு வருமானம், கல்வியால் தொழில், காதலர் ஒன்று சேரல், வாகன சேர்க்கை, வாணிபர், மீனவர்களுக்கும், இயந்திரத் தொழிலாளருக்கும் லாபம்.

**சிங்கம்:** புதுத்தொழில், விவாக நிச்சயம், பிரிந்தவர்கள் ஒன்று சேரல், புத்திரரால் மகிழ்ச்சி, கலைஞர்கள் புகழ், கல்வியால் தொழில், வாகன சுகம், வணிகர்கள் கடற்றொழில் மூலம் லாபம்.

**கன்னி:** குடும்ப மகிழ்ச்சி, இலட்சுமி கடாட்சம், வாகன சுகம், பெரியோரால் ஆசி, புண்ணியவழிபாடு, புகழ்தேடி வரும், வாகன மாற்றம், உயர் பதவி, வெளிநாட்டு பயணசுகம், ருது சோபனம், மகப்பேறு.

**துலாம்:** எண்ணியது நடக்கும், வாகன நட்டம், பெரியோராசி, புண்ணிய வழிபாடு, தூரத்துச்செய்தியால் நன்மை, வணிகர்கள், கடற்றொழில் செய்வோர் லாபம், புத்திரர் சுகம், இனசனம் வரவு.

**விருச்சிகம்:** புகழ் தேடி வரும், கல்வியால் சித்தி, காதலர் ஒன்று சேருவர், தொழில் மூலம் புகழ் இராஜ மரியாதை, வாகன மாற்றம், வாணிபர்கள் கடற்றொழிலாளர், இயந்திரத் தொழில் புரிவோர் நயம்.

**தனுசு:** கடன் தொல்லை, குடும்பக்கவலை, வாகன நட்டம், பெரியோர் ஆதரவு, நெடுநாள் உறவுக்குப் பகை, மாமன் வழியுதவி, காதலர் ஒன்று சேர்வர், புதியதொழில் தெய்வ வழிபாடு.

**மகரம்:** மங்கள காரியம், வாகன இலாபம், பெரியோரால் சுகம், தெய்வவழிபாடு, புத்திர சுகம், புகழ்தேடி வரும், கல்வியால் புகழ், உத்தியோக உயர்வு, இராஜ மரியாதை, பணவரவு.

**கும்பம்:** எண்ணியது நடக்கும், விருந்தினர் வருகை, மனையலங்காரம், ஆடை, ஆபரணம் சேரும், பணப் புழக்கம், உயர்பதவி. நண்பரால் உதவி, திடீர் பயணம்.

**மீனம்:** கல்வியால் புகழ், பிரிந்த காதலர் சேருவார்கள், மனையலங்காரம், மாமன் வழியுதவி, மூத்த சகோதரர் வழி நன்மை, திடீர் பணம், வாணிபர் லாபம்.

# மங்கையர் மஞ்சரி

# பெண்களின் சுதந்திரமும் இன்றைய நிலையும்

பெண் விடுதலை, பெண் சுதந்திரம் பற்றிய கோட்பாடுகளும் கொள்கைகளும் அன்று தொடங்கி இன்று வரை கால வரையறை இன்றி வளர்ந்து கொண்டே போகின்றன. வரையறைகளுக்கும், கட்டுக்கோப்புக்களுக்கும் அப்பாற்பட்டு பெண் சுதந்திரம் பரவலாக்கப்பட்டு பெண்களிடையே விழிப்புணர்வையும் எழுச்சியையும் உருவாக்கி விட்டது.

பெண் சுதந்திரம், பெண் விடுதலை என்றெல்லாம் பீற்றிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது! எம் சொல்லும் செயலும், எண்ணமும் இன்றைய காலகட்டத்தில் எத்தகைய நிலைப்பாட்டில் அமைந்துள்ளதோ அதை வைத்தே பெண் இனத்தின் உயர்வையும் முன்னேற்றத்தையும், சுதந்திர நிலைப்பாட்டையும் நாம் கணிப்பிடமுடியும்.

இன்றைய கால கட்டத்தில் அரசியல், பொருளாதாரம் வேலைவாய்ப்புக்கள் தொடங்கி, கலை, கல்வி, விஞ்ஞானம் வரையும் சகல துறைகளிலும் பெண்கள் பெருமளவு ஈடுபாடும் முன்னேற்றமும் பூரணத்துவமும் பெற்றுத்திகழ்கின்றனர் என்பது உலகறிந்த உண்மை. பெண் சுதந்திரமும் சம உரிமைகளும் பெருமளவில் பெண்கள் பக்கம் வீசினாலும் பெண் சுதந்திரம் சம உரிமைபற்றிய சரியான விளக்கத்தை அறியாமல் தான் தோன்றித்தனமாக நடப்பது உயர்வுக்குப் பதிலாக குனிவையே உண்டாக்குகின்றது. எம்மை நாமே முழுமையாக அறியாமல் உணராமல் தோன்றும் எந்த ஒரு புரட்சிகரமான எண்ணமும் புதை குழிக்குள் தள்ளிவிடும்.

## கல்வி அவசியம்

என்னதான் பெண்கள் எப்படித்தான் முன்னேறினாலும் பெரும்பான்மையான மேலிடத்துப் பெண்கள் பெண்சுதந்திர வேட்கையுடன் திரிந்தாலும்-கீழ் மட்டத்துப் பெண்கள் அதுவும்— கல்வி அறிவும், விழிப்புணர்வும் அற்ற பெண்கள் சீதனக் கொடுமை தொடங்கி இன்னும் பலசமூகக்கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இவற்றிற்கெல்லாம் மூல காரணம் எங்களின் அறியாமை போதிய உலக அனுபவம் இல்லாமை நடைமுறைகளை அறியாது இருக்கும் பிற்போக்குத்தன்மைகளும் காரணமாகின்றன.

அறிவும், ஆளுமையும் சிந்தனை விருத்தியும் இல்லாது அடுத்த வீட்டையும், அடுப்படிச்சமாச்சாரங்களையும் இன்னும் எத்தனை நாளைக்கு விடாப்பிடியாக பிடிப்பது? இங்ஙனம் இருந்து கொண்டிருந்தால் எப்படி, எங்ஙனம் நாம் முன்னேறுவது? பெண்கள் முன்னேற்றம் என்பது மற்றவர்கள் மனமுவந்து வந்து அளிப்பதல்ல! எம் இனத்தின் சுய முயற்சி காரணமாக ஏற்படுவது. அதற்கு நாம் மேற்கொள்ளும் எந்த ஒரு செயலும் எம்மிடை விழிப்புணர்வையும் எமக்கு மேம்பாட்டைத் தருவனவாகவும் தனித் தன்மைகளுடன் விளங்க வேண்டும் என்பது அவசியம்!

ஊரெழு தர்ஷினி

## கலைத்துறை ஈடுபாடு

பெண்களின் உயர்வுக்கு மிக முக்கியமானது கல்வி. பெண்களின் கல்வி நிலை ஒரு போதும் ஒரு காலகட்டத்துடன் நிறைவு பெற்று விடக்கூடாது. எத்துறையிலும் நிலைத்து எம் அறிவையும், ஆற்றலையும் விருத்தி செய்ய முனைய வேண்டும். நடைமுறை வாழ்வின் யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு, அதற்கேற்ப செயற் படுவது என்பது முக்கியம். தன்னைச்சுற்றி ஓர்குறுகிய வட்டத்தைப் போட்டு அதற்குள் தன்னைப் புதைத்துக் கொள்ளாமல் ... வெளிநடப்புகளை அறிந்து அதற்கான செயற் பாட்டில் தம் பங்களிப்பை அளிக்க பெண்கள் தயங்காது முன் வரவேண்டும்.

முக்கியமாக வேலை பெறும் நோக்கோடு கல்வி கற்கும் வழக்கம் நடைமுறையாகி வருகின்றது. சுய அறிவையும் ஆற்றலையும் விருத்தி செய்வதில் அனேகர் பின் தங்கியுள்ளனர் இந் நிலை நிச்சயம் மாற வேண்டும். சமூக நலன்களில் அக்கறைகாட்டுதல், அது சம்பந்தமாக செயற்படுதல் என்பன பெண் முன்னேற்றத்திற்குரிய கடமைகளாகும்.

கலைத்துறை ஈடுபாடும் பெண்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றன. எம் எண்ணங்களை பூரணத்துவப்படுத்தும் கலைகளில் நாம் ஈடுபடத் தயங்கக் கூடாது! எழுதுவது எம்தமிழ் பெண்களிடை அருகி வருகின்றது

பெண்கள் நிதானத்துடன் எம் இலக்கு என்ன என்பதை சரியாகப் புரிந்து செயற்பட வேண்டும் எமக்கு இழைக்கப் படும் கொடுமைகள் என்ன? எமது கட்டுக்கள் எவை? எமது அடிப்படை உரிமைகள் என்ன? எது எமது நிலையான சுதந்திரம் என்பவற்றை யெல்லாம் இனங்கண்டு போராடுவது தான் சிறந்த வழி! எமது நன்மைக்கும், பாதுகாப்புக்கும் -முன்னேற்றத்திற்கும் இடப் படும் சில கட்டுப்பாடுகளையும் புத்திமதிகளையும், ஆலோசனைகளையும் நாம் அவற்றைத் தளைகள் எம்மைஅழிக்கவந்த கட்டுக்கள்எம்மை அடக்கவந்த அதிகாரங்கள் என நாம் நினைத்தல் ஆகாது. அவற்றை எதிர்த்து நடப்பதுதான் எமது உரிமை–அதுதான் எமது பெண் விடுதலைக்கான போராட்டம்...என்றுநினைத்து செயற்பட்டால் அதுநமதுஅறியாமை என்பதன்றி வேறெதுவம் இல்லை

## வாழ்க்கைத் துணை

அர்த்தநாரி, பாகம்பிரியாள் சகதர்மினி மனைத்தக்காள், தர்மபத்தினி, வாழ்க்கைத் துணை, பதிவிரதை, இல்லத்தரசி, மனையாள், வீட்டுக்காரி என்றெல்லாம் புகழ் பெற்ற பெண்; ஆணின் அரைப்பங்கினள் என்பதோடு மிகநல்ல பங்கினளாவள். அவளின்றி ஆண் அசையமாட்டான். அவள் மனசுக்குச் சாந்தி தருபவள், மகிழ்ச்சி தருபவள் உற்சாகம் தருபவள் ஊக்கம் தருபவவ், ஏன் வலிமையும் தருபவள் சக்தி இருந்தால் நீ இதைச்செய். இல்லையேல் சிவனே என்று சும்மா இரு'' என்று நாடோடியாகச் சொல்வார்கள். சக்தியின் உருவம் பெண்.

# மாரடைப்பு - தடுப்பது எப்படி?

உலகத்தில் வாழ்ந்து வருகின்ற மனிதர்களில் ஆண், பெண் என்ற வேறுபாடின்றி அவ்வப்போது திடீர் என மாரடைப்பு ஏற்பட்டுப் பலர் மரணமடைந்து வருகின்றார்கள். இவ்வித மாரடைப்புக்கள் ஏற்படாமல் உறுதியாகப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதைப் பின்வரும் விளக்கங்களால் தெரிந்து கொள்ளலாம்.

## மாரடைப்பு (Heart attack) ஏற்படாமலிருக்க என்ன செய்ய வேண்டும்?

ஆரம்ப கால முதலே அறுசுவை உணவில் கசப்புச் சுவையை நீக்காமல் உணவில் கலந்துண்ண வேண்டும். சுமார் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை எண்ணெய் ஸ்நானம் செய்து கொள்ளும் போது அனல் சிகிச்சை என்பதை செய்து கொள்ள வேண்டும். மன உளைச்சல், கவலை கொள்ளுதல், அதிகமான கொழுப்புச் சத்துக் கலந்த உணவுவகைகளை உண்ணுதல், அளவுக்கு மீறிய கடுமையான உடலுழைப்பு ஆகியவைகளைகூடியவரை தவிர்க்க வேண்டும். போதையூட்டும் பானங்கள், புகையிலை, சிகரெட் போன்றவைகளை உபயோகிக்காமல் இருக்க வேண்டும்.

## மாரடைப்பு ஏற்படுவது எப்படி?

உடல் முழுவதும் பரவி, பாய்ந்தோடும் ரத்தம் இதயத்திலிருந்து தான் புறப்பட்டுச் செல்கின்றது. மனிதர்கள் உண்ணும் முறையற்ற கொழுப்புச் சத்துக்கள் மிகுந்த உணவினால் இருதயப் பகுதியிலிருந்து ஆரம்பமாகும் குழாய்களிலும் கொழுப்புப் பொருட்கள் படிந்து வருகின்றன. இதை பிளட் கொலஸ்ட்ரால் (Blood cholestrol) என ஆங்கிலத்தில் கூறுவார்கள் இம்மாதிரியாக கொழுப்புச்சத்துக்கள், இரத்தக் குழாய்களில் அடைத்துக் கொள்வதால், உடலில் பாய்ந்தோடும் ரத்தம் சீராக எளிதாக ஓடமுடியாமல் தடைபடுகின்றது.

என்றாவது ஒரு நாள் இருதயப் பகுதியிலிருந்து புறப்படும் ரத்தம் முறையாகச் செல்ல முடியாமல் ரத்த அழுத்தம் அதிகமாகின்றது. கொலஸ்ட்ரால் அடைப்பின் காரணமாக ரத்த அழுத்தம் அதிகமாகி இதயத்திலிருந்து ரத்தம் பாய முடியாத காரணத்தினால் ரத்தக் குழாய் வெடித்து விடுகிறது. இதையே மாரடைப்பு (அல்லது Heart failure) என்று கூறுகின்றோம். மற்றொரு விதமாகவும் இருதயம் செயல்பட முடியாமல்போய்விடுகின்றது. அது எப்படிஎன்றால், இருதயப் பகுதியில் சில திறந்து மூடும் வாய் மூடிகள்(Valves)முறைப்படி திறந்து மூடும் செய்கையினை பிடிப்பின் Due to frictoin) காரணமாக செய்ய முடியாமலிருந்துவிடுகின்றது. இதனாலும் மாரடைப்பு ஏற்பட்டு மரணம் நேரிடுகின்றது.

## மாரடைப்பு அறிகுறி என்ன?

மாரடைப்பு ஒருவருக்கு ஏற்படும் சுமார் ஒரு வருடத்திற்கு முன்பிருந்தோ, அவ்வப்போதோ விட்டுவிட்டு நெஞ்சு வலி, கை, கால்வலி, இடுப்பு வலி ஏற்படும்.

## இவர்கள் என்ன செய்ய வேண்டும்?

வெங்காயத்தை உணவில் அதிகமாகச் சேர்த்துண்ண வேண்டும். நெஞ்சுவலி குணமாகும் வரை உடலுறவில் ஈடுபடக்கூடாது. கீழ்க்கண்ட எளிய சிகிச்சையை செய்து கொள்ள வேண்டும்.

## உபயோக முறை

வலியுள்ள, இருதயம், இடுப்பு, கைகால் போன்ற பாகங்களில் சுத்தமான விளக்கெண்ணெய் என்கிற ஆமணக்கெண்ணெயைச் சிறிது தொட்டுப் பூசி, தீ மூட்டி, உடல் தாங்கிக் கொள்ளும் அளவுக்கு இதமாக அனல் காட்டி சுமார் 15 நிமிட நேரம் நன்றாக அழுத்தித் தேய்த்துவிட வேண்டும். இம்மாதிரி தேய்த்துப் பின்னர் கால்மணி நேரங் கழித்து சியக்காய்த் தூள் போட்டுத் தேய்த்து வெந்நீரில் குளித்து விடவேண்டும். இம்மாதிரி தொடர்ந்து மூன்றே தினங்கள் செய்தால் வெகுவான பலன் கிட்டும் அத்துடன் இத்தினங்களில் காலை உணவுக்கு முன் துளசி இலை 9ம் உதிரிவேப்பிலை 5ம் நன்றாக மென்று விழுங்கி வர வேண்டும். மற்றபடி உணவில் எவ்வித சுவைக் கட்டுப்பாடும் கடைப்பிடிக்க வேண்டிய தில்லை. ஆனால் ஒவ்வொரு வேளையும் அரை வயிறு உணவே உட்கொள்ள வேண்டும் நீண்டகால வலியுடையவர்கள் மாதம் இருமுறை (Two Courses) கடைப்பிடிக்கலாம்.

## வலி எவ்வாறு உண்டாகிறது?

உடம்பில் ரத்தக் குழாய்களில் அதாவது நெஞ்சுப் பகுதியில் ரத்தம் சிரமமாக பிடிப்புடன் செல்வதால் நெஞ்சுப் பகுதியில் வலி ஏற்படுகின்றதல்வா? அதே போல் மூட்டுக்களின் உராய்வின் போது சரியான பசை (Lubrication) தன்மையின்மையால் பிடிப்பின் காரணமாக வலி ஏற்படுகின்றது. மேலும் கை, கால் பகுதிகளிலும் ரத்தம் சரியாகப் பாய்ந்து செல்லாத போதும் பிடிப்பின் காரணமாக வலி உண்டாகிறது.

# திபெத்தியரின் சர்ச்சையான ‘இரட்டைவேட’ நபரின் மறைவு

திபெத்தின் இரண்டாவது பெரிய ஆன்மீகத் தலைவரான பஞ்சன் லாமாவின் மரணம் சீனுவுக்கும் புதிய தலையிடியொன்றை ஏற்படுத்தியுள்ளது. திபெத்தில் சீனுவின் ஆதிக்கம் நிலைத்திருப்பதற்கு பஞ்சன்லாமாவின் பங்கு முக்கியமானதாக இருந்துள்ளதாலேயே அவரது மரணம் சீனுவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. மறுபுறத்தில் பஞ்சன்லாமாவின் மரணத்திற்கு ஏதோ ஒரு வகையில் சீனுவே காரணமாக இருந்திருக்க வேண்டும் என்ற குற்றச்சாட்டும் இந்தியாவிலுள்ள திபெத்தியர்கள் மத்தியில் எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது.




பஞ்சன் லாமாவின் மரணச் செய்தியை சீனுவின் தொலைக்காட்சியும், வானொலியும் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன. ‘‘அவர் ஒரு சிறந்த தேசியவாதி’’என அவை வர்ணித்தன. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அனுதாபச்செய்தியும் அதனுடன் வெளியிடப்பட்டது. இதிலிருந்தே பஞ்சன் லாமா சீனுவுக்கு மிகவும் வேண்டப்படும் ஒரு நபராக இருந்துள்ளார் என்பதை உணர்ந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

## பதினெரு வயதில் எழுதிய கடிதம்

1938 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சீனுவிலுள்ள கின்ஹாய் என்ற மாகாணத்தில் பிறந்த பஞ்சன்லாமாவின் இயற்பெயர் பன்குவென் எரிதினி கோங்கியி கியானிகெய்ன் (Bainguen Erdini Qoigyi Gyanicain) மூன்று வயதாக இருக்கும் போதே இவர் லாஸாவிலுள்ள மதத் தலைவர்களால் மதத்தொண்டு செய்யும் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1949 ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் சீனு ஸ்தாபிக்கப்பட்டது. அப்போது சீனுவின் தலைவரான மாவோசேதுங்குக்கு வாழ்த்துச் செய்தியொன்றைப் பதினெரு வயது மட்டுமே நிரம்பிய பஞ்சன் லாமா அனுப்பிவைத்தார். திபெத் விரைவில் விடுதலையடைவதற்கு உதவவேண்டுமென அச் செய்தியில் சீனத் தலைவரிடம் பஞ்சன்லாமா கேட்டிருந்தார்.

அதற்கு அடுத்த ஆண்டே சீனப்படைகள் பஞ்சன்லாமாவின் தாயகமான திபெத்தை ஆக்கமித்தன. திபெத்தில் அப்போது இவ் ஆக்கிரமிப்புக்கு எதிராக எவரும் குரல் கொடுக்கவில்லை. திபெத்தியர்களைப் பாதுகாக்கவே சீனப்படைகள் வந்திருப்பதாக அவர்கள் நம்பியதே அதற்குக் காரணம்.

## மாலோவுடன் சந்திப்பும் திபெத்தின் கிளர்ச்சியும்

1951-ல் பஞ்சன்லாமாவும் தலாய்லாமாவும் பீக்கிங் சென்ருர்கள். திபெத்தின்

**‘ஆர்பி’**

மிகப் பெரிய ஆன்மீகத் தலைவரான தலாய்லாமாவுக்கு அப்போது வயது 20 தான். சீனத் தலைநகரில தலைவர் மாவோ இவர்களை மிகுந்த கௌரவத்துடன் வரவேற்று உபசரித்தார்.

இவ் இரு தலைவர்களும் மீண்டும் 1954-ம் ஆண்டில் சீனத் தலைவரைச் சந்தித்தார்கள். அப்போது திபெத்தில் சீன எதிர்ப்பு உணர்ச்சிகள் தலை தூக்கியிருந்தன. இது தொடர்பாகவே சீனத் தலைவருடன் அவர்கள் பேசிய போதிலும் தீர்வெதுவும் காணப்படவில்லை.

இவ் எதிர்ப்புணர்ச்சியே 1959-ம் ஆண்டில் லாஸா கிளர்ச்சியாக உருவெடுத்தது. இக்கிளர்ச்சியையடுத்து தலாய்லாமாவும் அவரது ஒரு இலட்சம் ஆதரவாளர்களும் திபெத்திலிருந்து அகதிகளாக வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டது.

எனினும் திபெத்தில் சீனுவின் இறைமையை ஏற்றுக்கொண்ட பஞ்சன் லாமா 1960-ம் ஆண்டு முதல் சீனுவிலேயே வசித்து வந்தார். திபெத்திய தேசியவாதிகள் இதனை திபெத்துக்கு எதிரான ஒரு நடவடிக்கை எனவும் துரோகம் எனவும் பஞ்சன்லாமாவை எதிர்த்தனர்.

## கலாசாரப் புரட்சியில் 10 வருட சிறைவாசம்

சீனுவில் பெரும்மாற்றத்தை ஏற்படுத்திய கலாசாரப் புரட்சியின் போது இவர் சிறையில் அடைக்கப்பட்டார். தலாய்லாமாவை எதிர்க்க மறுத்ததாலேயே 1966 முதல் 1975 வரை அவர் சிறைவாசம் அனுபவிக்க வேண்டியிருந்ததாகக் கூறப்படுகின்றது. இக்காலப்பகுதியில் சகல விதமான மத நடவடிக்கைகளும் சீன அரசால் தடை செய்யப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது.

1975-ல் விடுதலை செய்யப்பட்ட பஞ்சன் லாமா திபெத் மீதான சீனுவின் ஆக்கிரமிப்பை மீண்டும் எற்றுக்கொண்டார். இதனுல் தொடர்ந்தும் சீனுவிலிருந்து இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட இவர் திபெத்தில் சீனுவின் ஆட்சியை தொடர்ந்தும் நிலை நிறுத்துவதற்குப் பெரிதும் உதவி வந்துள்ளார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டில் டெங் ஷியாவா பிங் சீனுவின் தலைமைப்பதவியைப் பொறுப்பேற்ற பின்னர் மதம் சம்பந்தமான நடவடிக்கை மீது இருந்த கட்டுப்பாடுகள் பெருமளவு தளர்த்தப்பட்டன. இதே வருடத்தில் சீன மக்கள் அரசியல் குழுவின் தலைவராகவும், அதற்கு அடுத்த வருடத்தில் தேசிய மக்கள் காங்கிரஸின் துணைத்தலைவர் பொறுப்பையும் பஞ்சன்லாமா ஏற்ருர். இதன் மூலம் சீனு ஆக்கிரமிப்புக்கு அவர் பூரண ஒத்துழைப்பு வழங்கினுர்.

## மதத் தலைவரின் இரட்டை வேடம்

திபெத்தியர்களின் இரண்டாவது மிகப்பெரிய ஆன்மீகத் தலைவராக பஞ்சன் லாமா இருக்கின்றபோதிலும் மதக்கோட்பாடுகளை மீறும் விதமாக சீனப் பெண் ஒருவரை திருமணஞ் செய்து குழந்தை ஒன்றிற்கும் தந்தையாக இருப்பதாக இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது

மேலும் இவர் தனிப்பட்ட முறையில் பெருமளவு பணமும் சொத்துக்களும் சேகரித்திருப்பதாகவும் இவரது எதிரிகள் இவர்மீது குற்றஞ் சாட்டியுள்ளனர்.

மேலும் இவர் திபெத் மீதான சீனுவின் ஆக்கிரமிப்புக்கு ஆதரவும் உதவியும் செய்துகொண்டே திபெத்தியர்களின் தேசியப் போராட்டத்துக்கும் ஆதரவளிப்பது போல நடித்துவந்துள்ளார். சீனப்படைகளால் திபெத்தியர்களின் கோவில்களும் வணக்க ஸ்தலங்களும் சேதமாக்கப்பட்ட போது, மதத்தலைவரான இவர் மௌனமாகவே இருந்துள்ளார். இது இவரது இரட்டை வேடத்தை அம்பலமாக்கியுள்ளது.

சீன அரசாங்கம் திபெத்தில் தனது ஆட்சியை நிலைநிறுத்துவதற்கு பஞ்சன் லாமா என்ற இந்த ‘இரட்டைவேட’ நபரையே பெரிதும் நம்பியிருந்தது இதனுல் பஞ்சன் லாமாவின் மரணம் சீனுவுக்கும் திபெத்திய மக்களுக்கும் இடையேயான உறவில் பாரிய மாற்றமொன்றை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.


**வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினை பெறுவதற்கான**

**கம்பியூட்டர் கல்வி**

Computer Programming in d BASE III +

பயிற்சிக் காலம்: 2 மாதம்

ஆரம்பம்: 7.2.89 (செவ். வியாழன் வகுப்புகள்)

கட்டணம்: 1250/- (பகுதி பகுதியாக செலுத்தலாம்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறை பயிற்சி IBM (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிக்கப்பட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவர் ஆகையால் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பதிவுசெய்துகொள்ளவும்.

**விண்ணப்ப முடிவுநாள் 6-2-89**

**UNIKCO COMPUTER CENTRE**

No. 5 Power House Road
2nd Lane Jaffna
(Near Sup-Post Office)

02016


## ஒரு நேர்முகப்..-

5 ஆம் புக்கத் தொடர்ச்சி...
முக்கோணமாக்கி. ஏதோ ஆண்களைக் கண்டாலே தங்களுக்குப் பிடிக்காது என்பது போல வெறுப்புச் சாயல் காட்டி வீதியை பார்ப்பார்களே! இவள் எவ்வளவு தாராளமாக என்னுேடு ஒட்டிக்கொண்டிருக்கிருள்!

அந்த ஸ்பரிசத்தை விட்டுப் பிரிய மனமில்லாமல் நானும் தாரளமாக அவளுடன் ஒட்டிக் கொண்டேன்!

அப்போது அந்தப் பெண் நடந்துனர் என் அருகில் வந்து நின்று டிக்கட் மிசினை இயக்கிக் கொண்டிருந்தாள். மீண்டும் என்கண்கள் அவள் டிக்கட் கொடுக்கும் அழகை மேலிருந்து கீழ் வரை மேயத் தொடங்கின.

அவள் அணிந்திருந்த நீளக் காற்சட்டை ஷேர்ட்டை நீக்கி மனதால் ஒரு அழகான சேலை கட்டி பூவும் பொட்டுப் வைத்துப் பார்த்தேன் ஆஹா! ரம்பை ஊர்வசிகள் தோற்ருர்கள் போ!

எவ்வளவு நேரம் அவள் அங்க அசைவுகளை ரசித்துகொண்டிருந்தேனே......? டிக்கட் இயந்திரத்தை இயக்கிக் கொண்டிருந்த அந்தப் பெண் கண்டக்டர் திடீரெனசிங்களத்தில் மிகஅழகாகக் கூறினுள்.

‘‘கல்கிஸை பயிண்ட’’

ஐயய்யோ! நான் இறங்க வேண்டியது பம்பலப்பிட்டியிலல்லவா! விறுக்கென எழுந்து பெல்லை அடித்தபடி பக்கத்தில் நின்றவரை ‘‘வெலாவ கீயத?’’ என நேரத்தைக் கேட்ட படி இறங்கு படியில் கால் வைக்காமலேயே நடைபாதையில் குதித்தேன்.

‘‘நமயாய் மாருய்!’’ நாராசமாகவே காதில் விழுந்தது.

ஐயோ என் அதிர்ஷ்டமே! ஒன்பது மணிக்குபம்பலப்பிட்டியில் பரீட்சைக்கு சமுகம் அளிக்கவேண்டிய நான், ஒன்பதரை மணிக்கு கல்கிஸை சந்தியில் நின்று மிலாந்திக் கொண்டிருந்தேன்.

## ராணித் தேனீ...

(9-ம் பக்கத்தொடர்ச்சி)
யாளம்காண உதவுவதோடு வேறுவகையான நடத்தைகளையும் தூண்டுவதாக இருக்கலாம்.

தேனீக்கள் கூட்டம் கூட்டமாகப் பறந்து செல்லும்போது அவற்றுக்குத் திசைகாட்டல் இளம் ராணித்தேனீக்கள் வளர்க்கப்படுவதைத் தடைசெய்தல், தனிப்பட்ட முறையில் ராணித் தேனீயை அடையாளம் காணல், ராணித் தேனீயால் ஒழுங்கு படுத்தப் படுகிற மற்ற நடத்தைகள் போன்றவற்றைத் தூண்டிவிடுவதில் இப்பொருள்கள் செயல்படுவதாக இருக்கலாம் தேனீக்களை ஆளுவதிலும் கட்டுப்படுத்துவதிலும் கூட இந்தஐந்து ரசாயனப்பொருள்கள் பங்குவகிப்பதாக இருக்கலாமென ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

## பாரதம்...

5ஆம் பக்கத் தொடர்ச்சி ...
போவதற்கு தகுதியானவரென அவ்வூர் மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1893- வது ஆண்டு மே மாதம் 31-ம் திகதி பகவானின் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டு கப்பலேறி சீனு, யப்பான் போன்ற நாடுகளையும் டார்த்துக் கொண்டு பரந்த பசுபிக் மகா சமுத்திரத்தைக் கடந்து அமெரிக்கா போய் சேர்ந்தார். மேற்குக் கரையில் வான்கூவர் என்ற துறைமுகத்தில் கப்பலில் இருந்து இறங்கிய சுவாமிகள் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் புகைவண்டியில் பிரயாணம் செய்து சிகாகோ நகர் போய் சேர்ந்தார். சர்வமத மகாசபையில் இந்துமத பிரதிநிதிகளின் சார்பாக பேசுவதற்காக சுவாமிகளும் அழைக்கப்பட்டார். அப்போது அவர் அம்பாள் சரஸ்வதியையும் தமது குருநாதரையும் நினைந்து பரவசமடைந்து விட்டார். அவரது முகம் ஞான ஒளிவீசிப் பிரகாசித்தது. ஆசனத்தில் இருந்து எழுந்து மேடையின் முன் வந்து நின்ற மகிமையே சபையோரது உள்ளத்தைக் கவர்ந்தது. தனக்கே உரித்தான கம்பீரத் தொனியில்‘அமெரிக்க நாட்டுச் சகோதரி சகோதரர்களே’’என்ருர் மேலும் அவரைப் பேசவிடாது பல நிமிடங்களாக வாழ்த்தொலியும், கையொலியும் அந்த மண்டபத்தை அதிரவைத்தன. கரகோஷம் நிற்கவே பல நிமிடங்களாயின. அமெரிக்க தேசத்தையும் அந்த இரண்டுவார்த்தைகளாலேயே அவர் வென்று விட்டார்.

‘‘பல்லாயிரம் ஆண்டுகளாக வாழையடி வாழையென அவதரிக்கும் மகரிஷிகள்-ஞானிகள் யோகிகள் பெயராலும் மதங்களுக்கெல்லாம் தாய் மதமாய்த் திகழும் சநாதன தர்மத்தின் பெயராலும் கோடான கோடி இந்துக்கள் பெயராலும் நான் உங்களுக்கு வந்தனம் செலுத்துகிறேன் என்று உபந்நியாசத்தை தொடங்கினுர். நதிகள் வெவ்வேறு இடங்களில் உற்பத்தியாகி இறுதியில் ஒரே சமுத்திரத்தில் சங்கமமாவது போன்று பெரியோர்களால் காணப்பட்டுள்ள மதங்கள் ஒன்ருேடொன்று முரண்படுவது போலக் காணப்படினும் மாந்தரை அவரவருக்கேற்ற வழியில் கடவுள் என்ற ஒரே மெய்ப்பொருளிடத்து அழைத்துச் செல்கின்றனவாதலால் மதத்தின் பெயரால் சண்டையிடுவதை ஒழித்துவிட்டு -மக்கள் சகோதர பாவனையுடன் வாழ வேண்டுமெனச் சொல்லி முடித்தார்.’’

இலங்கை முதல் இமயம் வரை இந்து மதத்தின் பெருமையை விளக்கி வேதாந்தக் கேசரியென முழங்கினுர். உறங்கிக் கிடந்த தாய் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பி தேசப் பணியின் ஆர்வத்தையும் புத்துயிரையும் அவர்களுக்கு ஊட்டினுர்.

இவரது வாழ்வில் ஞான விரமும்- சாஸ்திர அறிவும் தாய்நாட்டுப் பணியும் உருக்கொண்டு விளங்கின. சாஸ்திர அறிவின் பயனுக வேதாந்தம் என்னும் சமரச பணியைக்கண்டார். சாதனக் கடலுள்மூழ்கி ஸ்ரீ ராமகிருஷ்ணர் என்னும் குருமணியைக் கண்டறிந்தார். வாழ்க்கைக் கடலுள் வருந்தித் தொண்டு என்னும் மணியினைத் தேடிக் கண்டார். இம் மும்மணிகளைக் கொண்டே பாரத அன்னைக்கு வாடாது ஒளிரும் மணிமுடி சூட்டினுர். இம் மும்மணிகளின் முழக்கமே உலகெங்கும் அதிருமாறு செய்தார்.

ஆன்மீகத் துறையின் உச்சியை அடைந்துவிட்ட அவர் தமது வாழ்நாட்களை பாரதத்திற்கும், உலகமக்களுக்கும் அர்ப்பணித்தவர். எழுமின்! விழிமின்! கருதிய கருமம் கைகூடும்வரை உழைமின்! உழைமின்! என்று உபதேசம் செய்தவர்.

விராட் விஸ்வப் பிரம்மணே நம

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,
நிகழும் விபவ வருஷம் தை மாதம் 28ஆம் நாள் (10. 02. 1989) வெள்ளிக்கிழமை காலை 8. 35 மணிமுதல் 10மணி வரையுமுள்ள சுபவேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**ஜெயரட்ணம்** (கனடா)
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
**சந்திரவதனி**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு வண்ணை காமாட்சி அம்பாள் ஆலயத்தில் திருமாங்கல்யம்தரித்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் நண்பர்கள், உற்ருர், உறவினர் அனைவரையும் கலந்து கொண்டு மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்ருேம்.

வரவேற்புபசாரம்: 11. 02. 89 மாலை 3 மணி முதல் 5 மணி வரை மணமகனில்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்

திருமதி சின்னத்துரை
அன்னலட்சுமி
''துரை இல்லம்''
15/1, சேர்.பொன்.
இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

திரு திருமதி இராசதுரை
(றேடியோ மெக்கானிக்)
110, பத்திரகாளி கோவிலடி,
வண்வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

இரு வீட்டார் அழைப்பு
[தனிப்பட்ட அழைப்புகள் இல்லை]

அவ்வண்ணமே விரும்பும்
சி. நவரட்ணம் தம்பதிகள் (கனடா)
சி. குமாரசாமி தம்பதிகள்
சி. குணரட்ணம் தம்பதிகள்
} சகோதரர்கள்

02129



## ISLAND FARM

45 நாட்களில் இறைச்சிக்கு விற்கக்கூடிய தரமிக்க புரொய்லேஸ் Broilors ஒரு நாட் குஞ்சுகள் மற்றும் Layers சிவப்பு, வெள்ளை ஒருநாட் குஞ்சுகள் விநியோகிக்க ஆரம்பித்துள்ளோம். உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**லக்ஷ்மி ரேடேர்ஸ்**

261 கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

02113



## பிரயாண ஒழுங்குகள்
## FORTUNA ENTERPRISES

(LABOUR LICENCE No. 79)

**உடனடி வேலைவாய்ப்புக்கள்**

**Immediate Vacancies in Kuwait**

**குவைத்**

1) **Airport and Hospital Cleaners** 250
விமானநிலைய, ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர்
சம்பளம் — 30 K. D.
மேலதிக நேர வேலை திடப்படுத்தப்பட்டுள்ளது அத்துடன் இருப்பிட வசதி.

2) **Light Vehicle Drivers** 50
சாதாரண வாகனச் சாரதிகள்
சம்பளம் — 45 K. D.

3) **Heavy Vehicle Drivers** 50
கனரக வாகன சாரதிகள்
சம்பளம் — 60 K. D.

4) **Tinkers** — ரிங்கர்ஸ் 05
சம்பளம் — 70 K. D.

5) **Spray Painters** — பெயின்ரேஸ் 05
சம்பளம் — 70 K. D.

6) **Mechanics for Benz Cars** 05
மெக்கானிக்ஸ் - சம்பளம் — 70 K. D.

நாடவேண்டிய முகவரி
யாழ்ப்பாணப் பிரதிநிதி

**இ. விஸ்வேஸ்வராயன்**
**3-ம் கட்டை லேன் கே. கே. எஸ். வீதி, கொக்குவில்**

02106


## ஞானவைரவர் உற்சவம்

சங்கானை நிகர ஞானவைரவ ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி இருபதாம் திகதி வரை நடைபெறும்.

தினமும் காலையில் விசேட அபிஷேகங்களும் மாலையில் வசந்த மண்டபபூசையும் அதனைத் தொடர்ந்து சுவாமி வீதி உலாவும் இடம்பெறும். முதலாவது உற்சவத்தன்று இன்னிசை வேந்தர் சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம் அவர்களின் விசேட இசைக் கச்சேரியும் இடம் பெறும்.

## உடல்நலன்...

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வானது நல்ல உணர்வுகளையும், பழக்கவழக்கங்களையும் உருவாக்கி வளர்க்கின்றது. இவை ஒருங்கிணைந்து நல்ல சமூக உறவை உருவாக்குகின்றன. எனவே நல்லுணர்வு வளர்ச்சிக்கும், நாகரிகத்திற்கும், பண்பாட்டிற்கும், நாட்டு முன்னேற்றத்திற்கும் உணவு முறையே அடிப்படையாகும்.

## பிறவிகள் தோறும்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

படி வைகுந்தம் சென்றதாக இராமாயணம் கூறுகிறது.

பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர், ஸ்ரீ நாராயண மூர்த்தி பூமியின் பாரம் தீர்க்க வேண்டி மீண்டும் மானுட உடம்புடன்கிருஷ்ணனுக அவதரித்தார். அவதார இரகசியம் அறிந்த கிருஷ்ணன் எண்ணிறந்த லீலைகளைச் செய்தான் இடைச்சேரியில் அவன் செய்த லீலைகள், கவலையோ துக்கமோ இன்றி விளையாட்டாக நடத்தியவையே பாரதப்போரின் முன்பும் பின்பும் தான் ஆயுதம் எதுவும் எடுக்காமல், தருணத்துக்கு ஏற்ப பிறரைக் கொண்டே துஷ்டரை அழித்து சிஷ்டருக்கு அருள் புரியும் சக்தியைக் கொண்டிருந்தான். இடைச்சேரியில் பிறந்து. கோபாலனுக வாசஞ் செய்து, வளர்ந்து பாரதப் போரில் பார்த்தனுக்குத் தேரோட்டி, கீதோபதேசஞ் செய்து துரியோதனுதியரையும் சேனைகளையும் அழித்து. இறுதியில் தர்மபுத்திரருக்கு இராச்சியத்தைப் பெற்றுக் கொடுத்தான்.

பாரதப்போர் முடிந்தபின் துவாரகைக்குச் சென்று முப்பத்தாறு ஆண்டுகள்அரசாட்சி செய்தான். ஒரு முனிவரின் சாபத்தால் யாதவ குலத்தினர் இரண்டு கட்சியினராகப் பிரிந்து சண்டையிட்டு அனைவரும் இறந்தொழிந்தனர். கிருஷ்ணன் ஒருவனே எஞ்சியிருந்தான்.

நடந்து முடிந்தவைகளை எண்ணிய கிருஷ்ணன் தானும் பூவுலகை விட்டு மறையும் காலம் வந்து விட்டதென உணர்ந்து தன்னந் தனியனுகக் காட்டில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். ஒருநாள் தியானத்தில். மூழ்கியிருந்தவனை, மிருகங்களை வேட்டையாடிய வேடன் ஒருவனுடைய அம்பொன்றுதைத்து அவனுயிரைத் தூக்கிச் சென்றது கிருஷ்ணனின் பூதவுடலிலிருந்து ஜோதிஒன்று வெளியேறி விண்ணில் மறைந்தது.

இராமாவதாரத்தில் மறைந்து நின்று வாலியை அம்பெய்து வதம் செய்த குற்றத்திற்குரிய தண்டனையைக் கிருஷ்ணுவதாரத்தில் தனக்குத்தானே விதித்துக் கொண்டான் அவதார இரகசியம் அறிந்த கண்ணன்.

பிராரத்துவ வினை பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும் என்பதை மானுடருக்கு உணர்ந்த கிருஷ்ணுவதாரத்தின் போது ஸ்ரீ நாராயண மூர்த்தி செய்த கடைசி லீலை இதுவே.

## தேர்தல் திருவிழா ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அதைப்பார்த்தால், கூட்டு மொத்தமாக வாக்காளர் அனைவரும் அந்த ஒரேயொரு அபேட்சகருக்கு மட்டுமே தமது வாக்கை அளித்தார்கள் என்றுதான் எண்ணத்தோன்றும்! அந்த அளவுக்கு, ஒரு வீடுதானும் தவருது அவர் நின்று நன்றி நவில்வார்.

தேர்தல்கள் உற்சவ கோலாகலம் பூண்டு, ''களைக்கட்டுவதற்கு'' அபேட்சகர்களும் காரணராக இருந்தனர். சட்டசபைத் தேர்தல்களில், கொழும்பு வடக்கு ஆசனத்திற்குத் தெரிவான ஒரு தேர்வு நாடியைக் குறிப்பாக எனக்கு நினைவு இருக்கிறது. ''துப்பதாகே ஹிதவதா'' (ஏழைப் பங்காளன்) என அவர் தனக்குத் தானே பெயர்சூட்டிக் கொண்டார். அவருடைய வாக்குத் திரட்டும் பாணியே தனி, கூட்டங்கள், ஊர்வலங்கள், வீட்டுக்குவீடு விஜயம்... ம்ஹூம்...... இவையொன்றும் அவரிடம் கிடையா. வேறு எப்படி? என்கிறீர்களா? இதோ...

அவர் ஒரு றிக்ஷோவில் ஏறிக்கொள்வார். வானளாவ அவரது புகழ்பாடிய வண்ணம் அவரைப் பின் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் அவர்கள்அவர்மீது அபிமானமும் (அவர் வாங்கிக் கொடுத்த) மதுபானமும் நிரம்பியயோர் அது சொல்லாமலே விளங்கும்.

ஒரு தடவை இவ்வபேட்சகர் வழமையான தமது வாக்குத் திரட்டும் முயற்சியில், ஒரு றிக்ஷோவில் ஏறி அமர்ந்து கொண்டார். அதன் பின்னுல் ஒட்டப்பட்டிருந்த படம் அவருடைய எதிராளி அபேட்சகரினுடையது அதைப்பற்றிப் பாவம் அவருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை தமதுமுதுகுக்குப்பின்னுல் என்ன நடக்கிறதென்பதுதான் அடியோடு அவருக்குத் தெரியாதே!


## காணவில்லை



**லோகராசா நாகதீபன்**

சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில் கிழக்கில் வசிப்பவரும் இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலை 6-ம் வகுப்பு மாணவருமான லோகராசா நாகதீபன் என்ற 12வயதுச் சிறுவனை சென்ற ஞாயிற்றுக்கிழமை(29-1-89) தொடக்கம் காணவில்லை. இவரைக் காண்பவர்கள் கீழ்க்காணும் விலாசத்துக்குத் தகவல் தருமாறு வேண்டப்படுகின்றனர்.

திரு. செ. பாலா
சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில்கிழக்கு சுன்னுகம்.

02115



பல ஆண்டுகளுக்குப்பின் கொழும்பிலும், யாழ்நகரிலும் திரையிடப்படுகிறது

ராணி வெண்திரையில் 10-30, 2-30,

ரஜனி(இருவேடம்), பிரபு, சுபாசினி நடித்த

தேவரின் **''தர்மத்தின் தலைவன்''** (கலர்)

தற்பொழுது ஹவுஸ்புல் காட்சி அளிக்கிறது

02118



## முதலாண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
18
—
06
—
1929



மறைவு
17
—
01
—
1988

**திருமதி வீரசிங்கம் சின்னத்தங்கம்**

திதி:-05 . 02 . 1989

வஞ்சகமற்ற நெஞ்சமுடன்
வையகத்தில் வாழ்வு பெற்று
தஞ்சமென எமக்கிருந்த
எங்கள் அன்பு அன்னையே
நெஞ்சமெலாம் பதைபதைத்து
நெடுதுயிர்த்து நிற்கின்ருேம்.
ஆத்ம சாந்திக்காய் எங்கள்
கரம் ஏந்தி இறைவனிடம் வேண்டுகிருேம்

உங்கள் பிரிவால் துயருறும்
அன்புக்கணவன், பிள்ளைகள்,
பேரர், மருமக்கள், சுற்றத்தார்.

பன்னுலை,
தெல்லிப்பழை.

02104

VARAMURASOLI — REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA 05 . 02. 1989 ஞாயிற்றுக்கிழமை

சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்திட
வீடியோ விகோன்ஸ்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள்
கோயிலுக்கும் இடையில்)
353 C, மணிக்கூட்டுவீதி

வார முரசொலி
VARAMURASOLI

For Quality Video Filming
VIDEO Vihons
353 C, Clock Tower Road,
★ Wellington Junction.

# பல்கலைக்கழக வாழ்க்கை ஆபத்தானதாகி விட்டது

## பல்கலைக்கழக துணைவேந்தர் துரைராஜா பேச்சு

பல்கலைக்கழக வாழ்க்கை இனிமையானதாக முன்னர் கருதப்பட்டது. தமிழ் மாணவர்களுக்கு அது தற்போது ஆபத்தானதாக மாறிவிட்டது. இதனை நிறுத்த சகலரும் ஒருமித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு பல்கலைக்கழக மாணவன் தனபாலசிங்கம் சத்தியேந்திராவின் இறுதிச்சடங்கின் போது நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் இரங்கலுரையாற்றிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தெரிவித்தார். அரசடி வீதி இல்லத்தில் இந்த அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம் இரங்கலுரையாற்றுகையில் 'சத்தியேந்திராவுக்கு நடந்தது நாளை எமக்கும் நடக்கலாம் கடமையை செய்யப் போய் அவர் உயிரை இழந்தார். உபவேந்தரும் ஏனைய பேராசிரியர்கள் விரிவுரையாளர்களும் கடமையை செய்ய வேண்டுமென்றே தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் ஆபத்துக்களுக்கும் வசதியீனங்களுக்கும் மத்தியில் தங்கியுள்ளார்கள் பல தடவைகள் இப்படி பல ஆபத்துக்கள் ஏற்பட்டிருந்த போதெல்லாம் மாணவர்களின் திறமை, பொறுமை என்பவற்றினால் அவற்றை தவிர்த்து வந்திருக்கிறோம். நாம் தொடங்கிய யாத்திரையை முடிக்கவேண்டியது எமதுகடமை' என்று தெரிவித்தார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் பாலகிருஷ்ணன் தனதுரையில், 'சத்தியேந்திரா ஒரு சிறந்த மாணவன் தேவையற்ற முறையில் அவர் எம்மைவிட்டு பிரிக்கப்பட்டிருக்கிறார். இதே போன்றே ஜெகநாதனும் இறந்துள்ளார் இவர்கள் இருவரினதும் மறைவினால் பல்கலைக்கழகம் சோகத்தில் மூழ்கியுள்ளது. என்று குறிப்பிட்டார்.

மருத்துவபீட ஆசிரியர் சங்கப் பிரமுகர் பேராசிரியர் பரமேஸ்வரன், யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கப் பிரமுகர் டிவகலால், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவர் எஸ். சின்னத்தம்பி, பல்கலைக்கழக ஊழியர் பிரமுகர் கே. இரட்ணசபாபதி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் திருஞானசம்பந்தர், மருத்துவபீட மாணவர் பிரதிநிதி பிரபாகரன், சக மாணவத் தோழன் சிவதாஸ், இந்துக்கல்லூரி மாணவன் பி. கணேசன் ஆகியோரும் இரங்கலுரையாற்றினர்.

## துயரத்தில் பங்கு

யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் சண்முகலிங்கத்தின் இழப்பினது துயரத்திலும், கவலையிலும் ஈழ மாணவர் பொது மன்றம் பகிர்ந்து கொள்வதாகத் தெரிவிக்கும் பிரசுரமொன்றை மேற்படி மன்றம் வெளியிட்டுள்ளது.

## யாழ். பல்கலைக்கழக...

தவறுமிருக்க முடியாது. ஆனால் இத்தகைய படுகொலைகளை தவிர்ப்பதற்கான வழிவகைகளிலிருந்தும் மாணவர்களைத் திசைதிருப்பி படுகொலைகள் தொடர்ந்து நிகழ்வதற்கான முயற்சிகளை பல்கலைக்கழகத்தினுள்ளேயும் வெளியேயுமுள்ள சில அராஜக சக்திகள் மேற்கொண்டு வருகின்றன. இது பெரும்பான்மை மக்களின் விருப்பத்துக்கு மாறானது.

பல்கலைக்கழக மாணவர்களே! ஆசிரியர்களே! கடந்த ஐந்துவருட போராட்ட காலத்தின் போதும் நீங்கள் அனுபவித்த இன்னல்கள் துன்பங்கள் அளப்பரியவை, ஈழதேசத்தின் பல நியாய பூர்வமான போராட்டங்களுக்கு தனது ஆதரவைப் பல்கலைக்கழகம் வழங்கியுள்ளது. ஈழ மக்களின் பல்வேறு போராட்டங்களுடன் தன்னை இணைத்துக் கொண்ட சமூகப்பிரக்ஞை உள்ள பல்கலைக்கழகமாகவே அது தொழிற்பட்டது. இப்பாரம்பரியம் பேணப்பட வேண்டுமென்றே அவாவுறுகின்றோம். இன்றைய பிரதான எதிரிகளை இனங்கண்டு போராடுங்கள். ஈழ தேசிய மக்களின் இன்றைய உடனடித் தேவை அமைதி, சமாதானம், ஜனநாயகம் என்பதை நீங்கள் மறுக்கமாட்டீர்கள்'' என்று இங்கு முக்கியமாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## நெல்லியடியில் இன்று கொடுப்பனவு

(வடமராட்சி)

ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் மீளக்குடியமர்தலுக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவு இன்று நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையில் வழங்கப்படவிருக்கின்றது.

துன்னாலையைச் சேர்ந்த 33 குடும்பங்களும் துன்னாலை கிழக்கைச் சேர்ந்த 275 குடும்பங்களும், துன்னாலை தெற்கைச் சேர்ந்த 56 குடும்பங்களும், துன்னாலை மேற்கைச் சேர்ந்த 155 குடும்பங்களும், கரவெட்டி மத்தியைச் சேர்ந்த (பகுதி 3) 252 குடும்பங்களும், கரவெட்டி மத்தியைச் சேர்ந்த (பகுதி 4) 196 குடும்பங்களும் இதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## மினிபஸ்...

டுள்ளார். நடத்துனரான கோண்டாவிலைச் சேர்ந்த து. லோகேஸ்வரன் (19) அனுராதபுரத்திலிருந்து நேற்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

## ஜனாதிபதி...

னால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன் பிரதிகள் கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கு கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் வரதராஜப் பெருமாள், மற்றும் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## கலைப்பீடத்தின்...

திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர். பல்கலைக்கழகச் சம்பவத்தில் காயமடைந்து யாழ். அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் மாணவர்கள் நிபந்தனையின்றி, வாக்குமூலமளிக்க வேண்டுமென்ற வற்புறுத்தலின்றி வீடு செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என பல்கலைக்கழக உப வேந்தருக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

## தேசமானி விருது

நாட்டின் மிகச்சிறந்த தேசமானி விருது சுதந்திர தினமான நேற்றுமுன்னாள் சட்டமா அதிபர் சிவாபசுபதிக்கு வழங்கப்பட்டது. நாட்டிற்காக சிறந்த சேவையாற்றிய மேலும் முப்பது பேருக்கும் பல விருதுகள் ஜனாதிபதி பிரேமதாஸவால் நேற்று வழங்கப்பட்டன.

## சந்நிதி கோவிலில்

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவிலில் மஹோதய புண்ணிய காலத்தை முன்னிட்டு நாளை திங்கள் காலை சூரிய உதய நேரத்தில் விசேஷ அபிசேகம் நடைபெறும் அன்று அடியார் மடத்தில் அன்னதானமும் இடம் பெறும்.

## மாகாண...

ராக ஒருவரை நியமிப்பது போலவே, மற்றைய நியமனங்களும் அமையும்

மற்றைய பல அமைச்சுக்களின் கீழும் இவ்வாறான புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

## இவர்களுக்கும்...

வீதியோரங்களில் விற்றல் ஆகிய வற்றில் சுகாதாரக் கேடு காணப்படுமிடத்து சிறைத்தண்டனை விதிப்பதற்கான சட்டமூலம் விரைவில் கொண்டுவரப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## புதுக்குடியிருப்புக்கு...

சடலத்துடன் விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் கே. கணேசலிங்கம், விரிவுரையாளர் ராஜ்மோகன் ஆகியோர் தலைமையில் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்ட குழுவொன்றும் புதுக்குடியிருப்புக்கு சென்றது.

# குடாநாட்டுக்கு தேவையான எரிபொருள், சீனி வந்துள்ளது

கொழும்பிலிருந்து நேற்றுப் பிற்பகல் இரு ரயில்கள் யாழ்ப்பாணம் வந்தன. சரக்குரயிலில் இரண்டு வகன் சீனியும், எரிபொருளும் கொண்டுவரப்பட்டது.

வார இறுதிநாட்களில் மேலதிகமாக கொழும்பிற்கான ரயில்சேவை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிகிறது. நேற்றுமுன்தினம் இங்கு வந்த யாழ். தேவி ரயில் நேற்றுக் காலை கொழும்பு திரும்பியது.

நேற்றுப் பிற்பகல் நான்கு மணிக்கு கொழும்பிலிருந்து இங்கு வந்த யாழ் தேவி ரயில் இன்று காலை ஒன்பது மணிக்கு கொழும்புசெல்லும். ஞாயிற்றுக் கிழமைகளில் தற்போது நடத்தப்படும் ரயில் சேவையுடனேயே மேலதிக ரயில் சேவை நடத்தப்படவுள்ளது.

## ஜே. ஆரின் வாழ்க்கை

முன்னாள் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனாவின் முதல் ஐம்பது வருட அரசியல் வாழ்க்கையைக் கொண்ட வாழ்க்கை வரலாறு நூல் நேற்று வெளியிடப்பட்டது.

# காலமானர்கள்

## ஈ. வி. இராமநாதன்

மல்லாகம், இளைப்பாறிய கல்வியதிகாரி ஈ. வி. இராமநாதன் அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சேதுநாதன் (ஆசிரியர், மல்லாகம் மகாவித்தியாலயம்), திருச்செந்திநாதன் (ஜேர்மனி), ஸ்ரீ அருள்நாதன் (நோர்வே), பாலமீரா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நீலகண்டன் (மலேசியா), காலஞ்சென்ற திருமதி அன்னபூரணியம்மாள் (மலேசியா), காலஞ்சென்ற வைரவநாதன், முத்துக்குமாரசாமி (சாமி), திருமதி சரஸ்வதி (கந்தர்மடம்) திருமதி விமலாதேவி (கோப்பாய்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகாதேவன் (அதிபர், மல்லாகம் மகாவித்தியாலயம்), சகாதேவன் ஆகியோரின் மைத்துனரும், திருமதி மந்தாகினி, திருமதி றேஸ்மலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், திருக்கலியுகன், துர்க்காஜனனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 6-2-89 அன்று சுன்னாகம் ''பத்மவாசா'' (திருஞானசம்பந்த வித்தியாசாலைக்கு முன்பாக) இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக காலை 9-30 மணியளவில் மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
இ. சேதுநாதன் 02151

## உயர்திரு. காசிப்பிள்ளை நல்லையா

குப்பிழான் உயர்திரு. காசிப்பிள்ளை-நல்லையா 4-2-89 சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார். இவர் குப்பிழான்கற்கரை கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவரும், மலாயன் பென்சனியருமாவார். இவர் கனகாம்பிகையின் அருமைக்கணவரும், திருமதி ஞானலக்ஷ்மி – ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (ஆசிரியை பளை மகா வித்தியாலயம்), திருமதி சிவகங்கை சிவசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (ஆசிரியர் பளை மகா வித்தியாலயம்), திரு. வை. சிவசுப்பிரமணியம் (பொறியியலாளர்–கனடா), ஆகியோரின் அன்பு மாமனும், வலந்துஜா, சிந்துஜா ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.
இறுதிக் கிரியைகள் குப்பிழான் பென்சனர் இல்லத்தில் 4- 2- 89 சனிக்கிழமை பி. ப. 3. 00 மணிக்கு நடைபெற்றது என்பதை அறியத்தருகின்றோம்.

''பென்சனர் வீடு''
குப்பிழான்
ஏழாலை

தகவல் அளிப்பவர்:
ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(மருமகன்) 02141

## பொ. இளையப்பா

குரும்பசிட்டியைச் சேர்ந்த பொ. இளையப்பா 4 2. 1989 சனிக்கிழமை காலமாகிவிட்டார். இவர் கவிஞர் கந்தவனம்–தவமணி (கனடா), சபாநாதன்–சரஸ்வதி, காலஞ்சென்ற அருமைநாயகம், செல்வராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையார் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 05. 02. 1989 ஞாயிற்றுக்கிழமை (இன்று) காலை 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தெல்லிப்பழை ''கொத்தியாகல்'' மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

குரும்பசிட்டி
தெல்லிப்பழை.

- குடும்பத்தினர்- 02139

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62 ஆ, இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 05-02-1989 அச்சிட்டு வெளியிடப்பெற்றது